www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு
மார்ச் 2007
ரூ. 5.00

**தருமபுரி பேருந்து எரிப்பு தீர்ப்பு:**
குற்றக்கும்பலின் கூடாரமே அ.தி.மு.க

**விடுதலைப் போரின் வீர முழக்கம்:**
தமிழ் மக்கள் இசை விழா

**காவிரி:**
இறுதித் தீர்ப்பும் இறுதித் தீர்வும்



# காஷ்மீர்:
## இந்திய இராணுவத்தின் கொலைக்களம்

www.padippakam.com

# பஞ்சாப்:
# பறிபோகும் விளைநிலங்கள் பரிதவிக்கும் விவசாயிகள்

''நேற்று வரை நாங்கள் விவசாயிகள்; இன்று எங்கள் நிலம் பறிக்கப்பட்டுச் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு விட்டோம். நிலம்தான் எங்கள் தாய்! எங்கள் தாயைப் பறித்து, எங்களை அனாதைகளாக்கிப் பட்டினியில் தள்ளி விட்டுள்ளார்கள்'' என்று குமுறுகிறார், பல்தேவ் சிங் என்ற விவசாயி. இவர் பஞ்சாப் மாநிலத்தின் பர்னாலா மாவட்டத்தைச் சேர்ந்த நடுத்தர விவசாயி.

பர்னாலா மாவட்டம் படேகர் சன்னா கிராமத்தில் விளைநிலங்களை ஆக்கிரமித்து, பஞ்சாப் மாநில அரசு 300 ஏக்கர் பரப்பளவில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவியுள்ளது. இங்கு டிரிடெண்ட் என்ற நிறுவனம் தகவல்-தொழில்நுட்பப் பூங்காவை நிறுவி வருகிறது. தங்கள் வாழ்வுரிமையைப் பறிக்க வந்துள்ள இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிராகக் கடந்த இரு மாதங்களாக இவ்வட்டார விவசாயிகள் போராடி வருகின்றனர். அரசாங்கம் தரும் நிவாரணத் தொகையை ஏற்க மறுத்து, ''எங்களுக்கு நிவாரணம் வேண்டாம்; நிலம்தான் வேண்டும்'' என்று போராடி வரும் விவசாயிகள் கடந்த ஜனவரி 31-ஆம் தேதியன்று டிரிடெண்ட் நிறுவனத்தின் கட்டுமானப் பணிகளைத் தடுத்து நிறுத்தி, அதன் சுற்றுச் சுவரை உடைத்தெறிந்தனர்.

இதைக் கண்டு ஆத்திரமடைந்த பஞ்சாப் ஆட்சியாளர்கள், விவசாயிகளின் போராட்டத்தை மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைத் தடுக்கும் வன்முறைச் செயல் என்று குற்றம் சாட்டியதோடு, டிரிடெண்ட் நிறுவனத்தின் கட்டுமானப் பணிகளைப் பாதுகாக்க அச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் போலீசைக் குவித்து அச்சுறுத்தினர். அதைத் துச்சமாக மதித்து கடந்த பிப்ரவரி 2-ஆம் நாளன்று மீண்டும் விவசாயிகள் போராடத் தொடங்கியதும், தடியடித் தாக்குதல் நடத்திய போலீசு, துப்பாக்கிச் சூடு நடத்திப் பலரைப் படுகாயப்படுத்தியது. ''அங்கு சிதறிக் கிடக்கும் காலணிகளும், இரத்தம் தோய்ந்த டர்பன் (தலைப்பாகை)களும் ஜாலியன்வாலாபாக்கை நினைவுபடுத்துகிறது'' என்று முதலாளித்துவப் பத்திரிகைகளே குறிப்பிடுமளவுக்கு போலீசு வெறியாட்டம் போட்டுள்ளது.

பர்னாலா மாவட்டம் மட்டுமல்ல; பொற்கோயில் அமைந்துள்ள அமிர்தசரஸ் அருகே முப்போகம் விளையும் பூமியும் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காகப் பறிக்கப்படவுள்ளது. தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனமான சஹாரா குழுமம் தொழில் தொடங்க, ஏறத்தாழ 1200 ஏக்கர் நிலத்தைப் பறிக்கப் போவதாக பஞ்சாப் அரசு அறிவித்துள்ளது. நிலத்தைக் கையகப்படுத்த அரசு அதிகாரிகள் வந்தபோது, ஜீத்தாகலன் மற்றும் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் சாலை மறியல் போராட்டம் நடத்தி கைதாகியுள்ளனர். பரம்பரை பரம்பரையாக இங்கு விவசாயம் செய்துவந்த விவசாயிகள் தங்கள் கண்ணெதிரே விளைநிலங்கள் பறிக்கப்படுவதைக் கண்டு விக்கித்து நிற்கின்றனர்.

பஞ்சாப், ஐந்து நதிகள் பாயும் வளமான பூமி; பசுமையான வயல்வெளிகள்; அறுவடைக் காலத்தில் தங்க நிறத்தில் தகதகக்கும் கோதுமைக் களஞ்சியம். இருப்பினும், தாராளமயமாக்கலைத் தொடர்ந்து வளம் கொழிக்கும் இம்மாநிலம் படிப்படியாக நசியத் தொடங்கியது. உணவு தானியக் கொள்முதலை அரசு கைகழுவியதாலும், உரம்-பூச்சி மருந்து முதலான இடுபொருட்களின் விலை உயர்வாலும், தாராளமயத்தால் அன்னிய கோதுமை இறக்குமதி காரணமாக விலை வீழ்ச்சியாலும் பஞ்சாப் விவசாயிகள் போண்டியாகி நிற்கிறார்கள். வேறுவழியின்றி பன்னாட்டு ஏகபோக விவசாய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, ஒப்பந்த முறையில் விவசாயம் செய்தவர்களும் அந்நிறுவனங்களால் வஞ்சிக்கப்பட்டு திவாலாகிக் கிடக்கிறார்கள்.

ஆந்திரா, கர்நாடகாவைத் தொடர்ந்து இப்போது வளம் கொழிக்கும் பஞ்சாபிலும் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் அதிகரித்து வருகிறது. மான்சாண்டோவின் ''பி.டி.'' எனப்படும் மலட்டு பருத்தி விதைகளால் நட்டப்பட்டும், உற்பத்திச் செலவுக்கேற்ற விலை கிடைக்காமல் கடன்பட்டும் சங்ரூர், மான்சா, படிண்டா மாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான பருத்தி விவசாயிகள் நொடித்துப் போயுள்ளனர். ''ஆர்த்தியா'' எனப்படும் கந்துவட்டிக்காரர்களிடம் சிக்கிக் கொண்டு கடன் சுமையிலிருந்து மீள வழி தெரியாமல் பல பருத்தி விவசாயிகள் அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்டு மாண்டு போகின்றனர். சங்ரூர் மாவட்டத்திலுள்ள கல்பஞ்சரா கிராமத்தில் மட்டும் கடந்த நான்கு மாதங்களில் எட்டு விவசாயிகள் கடன்சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அரசே ஒப்புக்கொள்கிறது. இருப்பினும், இதர மாநிலங்களைப் போலவே, மாண்டு போன விவசாயிகளுக்கு பஞ்சாப் அரசு இன்று வரை நிவாரணம் கூட அளிக்க மறுக்கிறது.

''ஒரு காலத்தில் பருத்தி எடுக்க இராஜஸ்தானிலிருந்து கூலி விவசாயிகள் திரள் திரளாக இங்கு வருவார்கள்.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

**கடுகு பயிரிட்டுக் கடன்தான் மிச்சம்: ஒப்பந்த விவசாயத்தால் திவாலாகிப் போன விவசாயி குர்சரண் சிங்.**





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 22
**இதழ் 5**
மார்ச் 2007

**உள்நாடு**
**தனிஇதழ்: ரூ.5.00**
**ஆண்டுசந்தா: ரூ.60.00**

*வெளிநாடுகள் (வான் அஞ்சலில்)*
**ஆண்டு சந்தா: US$ 10**

*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


## தருமபுரி பேருந்து எரிப்பு தீர்ப்பு: குற்றக் கும்பலின் கூடாரமே அ.தி.மு.க.

சரியாக ஏழாண்டுகள் ஏழு நாட்களுக்குப் பிறகு பார்ப்பன பாசிச ஜெயலலிதா கும்பல் ஏற்படுத்திய பல்வேறு தடைகளையும் மீறி தர்மபுரி பேருந்து எரிப்பு வழக்கில் அ.இ.அ.தி.மு.க. வின் மூன்று பிரமுகர்களுக்குத் தூக்குத் தண்டனையும் மேலும் அபராதத்தோடு ஏழாண்டு சிறையும் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் அக்கட்சியின் 25 பிரமுகர்களுக்கு அபராதத்தோடு ஏழாண்டு மூன்று மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கொடைக்கானல் சொகுசு ஓட்டல் முறைகேடு வழக்கில் சிறப்பு நீதிமன்றம் 2000-ஆம் ஆண்டு ஜெயலலிதாவிற்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதித்தது; அதற்கு எதிராக மாநிலம் முழுவதும் அக்கட்சி அராஜகம் - வன்முறை வெறியாட்டம் நடத்தியது. அப்போது கல்விச் சுற்றுலா சென்று திரும்பிய கோவை வேளாண் பல்கலைக்கழகப் பேருந்தை மறித்துக் கொளுத்தியதில், மூன்று மாணவிகளை உயிரோடு எரித்துக் கொன்ற வழக்கில்தான் இத்தீர்ப்பு வந்துள்ளது.

கடுகளவு பெறாத விவகாரங்களில் எல்லாம் நாளும் அறிக்கை விடுவதையே அரசியல் அரும்பணியாகக் கொண்டுள்ள ஜெயலலிதாவோ, காயடிக்கப்பட்ட பன்றியைப் போல மேடைகள் தோறும் கதறும் வைகோவோ, அவர்களின் பக்கபலமாக நிற்கும் சோ, குருமூர்த்தி போன்ற பார்ப்பன ஊதுகுழல்களோ முன்வாயையும் பின்வாயையும் பொத்திக் கொண்டுள்ளது வியப்புக்குரியதில்லை. ''மரண தண்டனை எதிர்ப்பு மனிதாபிமானிகளும்'' அவர்கள் அடியொற்றி மௌனம் சாதிப்பதும் வியப்புக்குரியதில்லை. அதேசமயம் நடந்தவை முன்கூட்டியே திட்டமிட்ட, உள்நோக்கம் கொண்ட கொலைகள் அல்ல என்பதால் மரண தண்டனை மிகையானதென்று அ.இ.அ.தி.மு.க. அனுதாபிகள் முணுமுணுக்கின்றனர். இந்தக் கொலைகளில் உள்நோக்கம் எதுவுமில்லை என்று கூறுவதே தவறானது. ''அரசியல் பதவி ஆதாயத்துக்காக மட்டுமே இந்த மனிதத்தன்மையற்ற, கொடூரமான பயங்கரமான கொலைகள் செய்யப்பட்டிருக்கின்றன'' என்று நீதிபதி விளக்கியிருக்கிறார்.

ஆயிரத்தெட்டு கனவுகளோடு வேளாண் பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கு அனுப்பப்பட்ட தம் மக்கள், கதறித் துடிதுடிக்க எரிந்துக் கரிக்கட்டைகளாகக் கிடந்ததைப் பார்த்த பெற்றோர், ஏழாண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் நீதி கிடைத்ததாக ஆறுதல் பெருமூச்சு விடுகின்றனர். தங்கள் அன்பு மகள்கள் துடிதுடித்து இறந்ததைப் போல, குற்றவாளிகளும் துடிதுடித்துச் சாகவேண்டும்; தங்கள் மகள்களுக்கு நேர்ந்த கதி இனி யாருக்கும் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால், இத்தீர்ப்பு உறுதியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று அவர்களின் பெற்றோர்கள் கண்ணீர் வற்றிய துயர முகத்தோடு கூறுகிறார்கள். அவர்களின் துயரத்தைப் பகிர்ந்து கொண்ட நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகள், தமது கோபாவேசத்தை தொலைக்காட்சிகளில் குறுஞ்செய்திகளாகவும், செய்தி ஏடுகளில் ஆசிரியருக்கு வாசகர் கடிதங்களாகவும் அனுப்பிக் குவித்தனர். அவர்கள் தமது ஆத்திரத்தை அரசியலற்றவாதத்தில் தோய்த்து பொதுவில் தமது வர்க்க எதிரிகளாகக் கருதும் அரசியல்வாதிகளுக்கு எதிராகச் சீறினர். தர்மபுரி பேருந்து எரிப்பு வழக்கில் தரப்பட்டுள்ள தீர்ப்பு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிரானது மட்டுமல்ல; அராஜக - வன்முறை மற்றும் அதிகார முறைகேடுகளில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்ட எல்லா அரசியல்வாதிகளுக்கும் ''குற்றம் புரிந்துவிட்டு தப்பிட்டு விட முடியாது'' என்றவாறு தரப்பட்டுள்ள எச்சரிக்கை - தண்டனை - படிப்பினை என்று சித்தரித்தனர். ஆனால், இந்தப் பார்வை முழுக்கவும் காலியாகிக் கொண்டிருக்கும் அக்கிரகாரத் திண்ணையில் சாய்ந்து கொண்டுள்ள பழைய பஞ்சாங்கப் பார்ப்பன அறிவுஜீவிகளின் புலம்பல்கள் தவிர வேறொன்றுமில்லை.

பேருந்துக்குத் தீ வைத்தபோது, ''எல்லோரையும் சேர்த்துக் கொளுத்துங்கடா... அப்போதுதான் புத்தி வரும்'' என்று கொலையாளி கூச்சலிட்டிருக்கிறான். ஆனால், அதனைக் கண்டும் அனுபவித்தும் கூட, சிறிய அதிர்வுக்குக் கூட அஞ்சி கூட்டுக்குள் பதுங்கிக் கொள்ளும் இந்த எலும்பில்லாத நடுத்தர வர்க்க நத்தைகளுக்கு ''புத்தி'' வரவில்லை. வழக்கில் வழங்கப்பட்டுள்ள தண்டனை குற்றவாளிகளான அரசியல்வாதிகளுக்கான எச்சரிக்கை, படிப்பினை என்றால் இந்த குற்றச் சம்பவமோ, அரசியலிலிருந்து ஒதுங்கி இருப்பதன் மூலம் தன்னலத்தோடு, பாதுகாப்பான வாழ்க்கையைத் தேடிக் கொள்ள எப்போதும் எத்தனிக்கும் நடுத்தர வர்க்கத்திற்கு விடப்பட்டுள்ள எச்சரிக்கை, படிப்பினை அல்லவா? ''இராமன் ஆண்டாலும், இராவணன் ஆண்டாலும் எனக்கொரு கவலையுமில்லை'' என்ற நடுத்தர வர்க்கத்தின் விட்டேத்தித்தனம் உண்மையில் ஒரு வகை பிழைப்புவாதம்தான். போட்டி போட்டுக் கொண்டு கட்சித்

தொடர்ச்சி 7-ஆம் பக்கம்

www.padippakam.com

# காஷ்மீர்:

# இந்திய இராணுவத்தின் கொலைக்களம்!

"ஜம்மு-காசுமீர் போலீசு சிறப்பு நடவடிக்கை அதிரடிப் படையும், மத்திய ரிசர்வ் போலீசு படையும் இணைந்து பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவனைச் சுட்டுக் கொன்றதோடு, அத்தீவிரவாதியிடமிருந்து ஆயுதமொன்றையும் கைப்பற்றினர்'' - இப்படியொரு முதல் தகவல் அறிக்கை டிச.9, 2006 அன்று, ஜம்மு-காசுமீர் மாநிலத்தில் உள்ள கந்தேர்பால் போலீசு நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. இந்த முதல் தகவல் அறிக்கையே, மறுநாள் பத்திரிகைகளில் செய்தியாகவும் வெளிவந்தது.

இந்தச் சம்பவம் நடந்து முடிந்து இரண்டு மாதங்கள் கழித்து, இந்த 'மோதல் கொலை'யின் பின்னே உள்ள உண்மை, அந்தத் 'தீவிரவாதி'யின் கல்லறையில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. சிறப்பு நடவடிக்கை அதிரடிப் படையாலும், துணை இராணுவப் படையாலும் சுட்டுக் கொல்லப்பட்டவர் பாக். தீவிரவாதி இல்லை என்பதும்; அவர், ஜம்மு-காசுமீர் மாநிலத்தில் உள்ள லர்னூ கிராமத்தைச் சேர்ந்த அப்துல் ரஹ்மான் பத்தர் என்ற தச்சுத் தொழிலாளி என்பதும் தற்பொழுது அம்பலமாகியிருப்பதோடு, இப்போலி மோதல் கொலை காசுமீர் பள்ளத்தாக்கில் பெரும் போராட்டப் புயலையே உருவாக்கி விட்டது.

அப்துல் ரஹ்மான் பத்தர், தனது நண்பனும், சிறப்பு நடவடிக்கை அதிரடிப் படையில் தலைமைக் காவலராக வேலை பார்த்துவரும் ஃபரூக் அகமது பத்தரிடம், காசுமீர் மாநில போலீசு துறையில் தனக்கு ஏதாவது ஒரு வேலை வாங்கித் தருவதற்காக, 75,000/- ரூபாய் இலஞ்சம் கொடுத்திருந்தார். நாட்கள் நகர்ந்ததேயொழிய, அப்துல் ரஹ்மான் பத்தருக்கு போலீசு துறையில் வேலை எதுவும் கிடைக்கவில்லை. இதனால் அப்துல் ரஹ்மான் பத்தர், தான் இலஞ்சமாகக் கொடுத்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி போலீசுக்காரன் ஃபரூக் அகமதுவிடம் கேட்கத் தொடங்கினார். இதனையடுத்து, ஃபரூக் அகமது, தன்னை டிச.8, 2006 அன்று சிறீநகரில் வந்து சந்திக்கும்படி அகமது ரஹ்மானுக்குத் தகவல் கொடுக்க, அவரும் ஃபரூக் அகமதுவைச் சந்திக்கக் கிளம்பிச் சென்றார். அந்தப் பயணமே, அப்துல் ரஹ்மான் பத்தரின் இறுதிப் பயணமாகி விட்டது.

சிறீநகருக்குக் கிளம்பிச் சென்ற அப்துல் ரஹ்மான் பத்தர் ஆறு நாட்கள் கழிந்த பிறகும் வீடு திரும்பாததையடுத்து, அவரது உறவினர்கள் சிறீநகர் - தெற்கு மண்டல போலீசு கண்காணிப்பாளரிடம் புகார் செய்தனர். அப்துல் ரஹ்மான் பத்தர் காணாமல் போனது பற்றிய விசாரணை ஒரு பெரும் பூதத்தைக் கிளப்பிவிடப் போவதை அறியாமலேயே, போலீசாரும் விசாரணையை நடத்தினர்.

அப்துல் ரஹ்மானின் செல்போன் எண்ணைத் தொடர்பு கொண்டபொழுது, அது செயல்படாமல் முடங்கிப் போயிருப்பது தெரிய வந்தது. எனினும், பாரத் சஞ்சார் நிகாம் நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர், அப்துல் ரஹ்மானின் செல்போன் எண் முடங்கிப் போய்விட்ட பிறகும், அவரது செல்போன், வேறொரு எண்ணில் இயங்கி வருவதைக் கண்டுபிடித்து, போலீசுக்குத் தகவல் கொடுத்தார். அப்துல் ரஹ்மானின் செல்போனை வைத்திருந்த அப்துல் ரஷீத் வாகே என்பவரை போலீசார் விசாரித்தபொழுது, அவர், தான் அந்த செல்போனை, கந்தேர்பால் நகரில் தீவிரவாத எதிர்ப்பு போலீசு பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணியாற்றும் ஃபரூக் அகமது குட்டுவிடமிருந்து வாங்கியதாக கூறினார். தீவிரவாத எதிர்ப்பு போலீசு உதவி ஆய்வாளர் குட்டு விசாரிக்கப்பட்டபொழுது, பூதம் வெளியே வந்தது.

"அப்துல் ரஹ்மான் பத்தர், ஃபரூக் அகமது பத்தர் கூறியபடி, டிச.8, 2006 அன்று ஃபரூக்கைப் பார்க்க சிறீநகருக்கு வந்து, ஃபரூக்கின் வீட்டில் தங்கியிருந்ததாகவும்; அன்று மதியம் தனது தலைமையில் ஒரு போலீசு படை ஃபரூக்கின் வீட்டிற்குச் சென்று, அப்துல் ரஹ்மான் பத்தரை அங்கிருந்து கந்தேர்பாலுக்குக் கடத்திச் சென்று மறுநாள் சுட்டுக் கொன்றுவிட்டு, கையோடு சடலத்தைப் புதைத்து விட்டதாகவும்; அதன் பிறகு பாக். தீவிரவாதியைச் சுட்டுக் கொன்றதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும்'' தீவிரவாத எதிர்ப்பு உதவி ஆய்வாளர் ஃபரூக் அகமது குட்டு, போலீசிடம் ஒப்பு

போலி மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டவரின் சடலம் மறுபிரேதப் பரிசோதனைக்காகத் தோண்டி எடுக்கப்படுகிறது.




படிப்பகம்

www.padippakam.com

தல் வாக்குமூலம் அளித்திருக்கிறார்.

இலஞ்சப் பணத்தைத் திருப்பிக் கேட்டதற்காக, அப்துல் ரஹ்மான் பத்தர் சுட்டுக் கொல்லப்படவில்லை. காசுமீர் பள்ளத்தாக்கில் தீவிரவாதிகளை வேட்டையாடுவதற்காக இறக்கி விடப்பட்டிருக்கும் இராணுவம் - துணை இராணுவப் படைகள் - சிறப்பு அதிரடிப் படைகள் தங்களுக்குள் கூட்டணி வைத்துக் கொண்டு, அப்பாவிகளை இரகசியமாகக் கடத்திக் கொண்டு போய் போலி மோதலில் சுட்டுக் கொன்றுவிட்டு, அவர்களை பாக். தீவிரவாதிகள் என்றோ, அடையாளம் தெரியாத தீவிரவாதி என்றோ முத்திரை குத்தி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டு, இந்தக் கொலைக்கு கிடைக்கும் பரிசுப் பணத்தையும், பதவி உயர்வையும் பங்கு போட்டுக் கொள்ளும் கொலை திட்டத்தை வெகு காலமாகவே நடத்தி வருகின்றன. அப்துல் ரஹ்மான் பத்தரைப் போலி மோதலில் சுட்டுக் கொன்றதன் மூலம், சிறப்பு அதிரடிப் படை மற்றும் மத்திய ரிசர்வ் போலீசு படையைச் சேர்ந்த அரசு பயங்கரவாதிகள் பங்கு போட்டுக் கொண்ட பரிசுத் தொகை ரூ. 1,30,000/-

ஒவ்வொரு மதமும் இத்தனை தீவிரவாதிகளை 'மோதலில்' சுட்டுக் கொன்றிருக்கிறோம் எனக் கணக்குக் காட்டுவதற்காகவே, இராணுவமும் - போலீசும் அப்பாவி முசுலீம்களை போலி மோதலில் சுட்டுக் கொல்வதை சர்வ சாதாரணமாக நடத்தி வருகின்றன. போலீசாரால் புதைக்கப்பட்டு, இப்பொழுது மறு பிரேதப் பரிசோதனைக்காகத் தோண்டி எடுக்கப்படும் 'தீவிரவாதிகளின்' பிணங்கள் இந்த உண்மையை மீண்டும் நாறடித்து விட்டன.

• 13-ஆவது தேசிய துப்பாக்கிப் படை பிரிவைச் சேர்ந்த சிப்பாய்களும், போலீசாரும் இணைந்து நடத்திய தாக்குதலில் ஜெய்ஷ்-இ-முகம்மது தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த, ஜாஹித் அலி என்ற பாக். பயங்கரவாதி இறந்து போனதாக அக்.5, 2006 அன்று சும்பல் போலீசு நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 'மோதலில்' கொல்லப்பட்ட அந்த பாகிஸ்தான் பயங்கரவாதி, தோடா மாவட்டத்தில் உள்ள பனிஹல் கிராமத்தைச் சேர்ந்த ஷௌகத் கான் என்பது தற்பொழுது அம்பலமாகியிருக்கிறது.



போலி மோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட நஸிர் அகமது தேகாவின் சடலத்தை எடுத்துக் கொண்டு, இராணுவத்தின் பயங்கரவாதக் கொலைகளைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.

• 5-ஆவது தேசிய துப்பாக்கி படைப்பிரிவு சிப்பாய்களும், போலீசும் இணைந்து அடையாளம் தெரியாத தீவிரவாதியைச் சுட்டுக் கொன்றுவிட்டதாகவும்; அந்தத் தீவிரவாதியிடமிருந்து ஒரு "ஏ.கே." இரக துப்பாக்கி, ஒரு கைத்துப்பாக்கி மற்றும் வெடி மருந்து பொருட்களைக் கைப்பற்றியதாகவும் பிப்.17, 2006 அன்று கந்தேர்பால் போலீசு நிலையத்தில் முதல் தகவல் பதிவாகி இருக்கிறது.

அடையாளம் தெரியாத அந்தத் தீவிரவாதி சிறீநகர் தெருக்களில் நறுமணத் திரவியங்களை விற்கும் நஸிர் அகமது தேகா என்ற நடைபாதை வியாபாரி என்றும்; அவர் கோகேர்நாக் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தற்பொழுது அடையாளம் காணப்பட்டிருக்கிறது. அவர் நறுமணத் திரவியங்களைத் தெருத்தெருவாக எடுத்துச் சென்று விற்பதற்காகப் பயன்படுத்தி வந்த பெட்டி, துணை ஆய்வாளர் ஃபரூக் அகமது குட்டுவின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

• மார்ச் 14, 2006 அன்று 24-ஆவது தேசிய துப்பாக்கிப் படை சிப்பாய்களால் சுட்டுக் கொல்லப்பட்ட அடையாளம் தீவிரவாதி, துணி வியாபாரியான குலாம் நபி வானி என்பதும்; மார்ச் 8, 2006 அன்று 24-ஆவது தேசிய துப்பாக்கிப் படை சிப்பாய்களால் சுட்டுக் கொல்லப்பட்ட அடையாளம் தெரியாத தீவிரவாதி, ஜம்மு-காசுமீர் மாநில அரசில் கடைநிலை ஊழியர் அலி முகம்மது பத்தர் என்பதும் தற்பொழுது நிரூபணமாகியிருக்கிறது.

•••

"போலி மோதல் கொலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்; ஜம்மு-காசுமீர் மாநில போலீசு துறையைச் சேர்ந்த சிறப்பு நடவடிக்கைகள் அதிரடிப் படையை முழுமையாகக் கலைக்க வேண்டும்; ஜம்மு - காசுமீரில் இருந்து இராணுவமும் - துணை இராணுவமும் வெளியேற வேண்டும்" எனப் போராடிக் கொண்டிருக்கும் அம்மாநில மக்களின் ஆத்திரத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, இந்த ஐந்து போலி மோதல் கொலைகள் பற்றி நீதி விசாரணை நடத்தப்படும் என அறிவித்திருக்கிறது, காங். கூட்டணி ஆட்சி. சிறப்பு நடவடிக்கைகள் அதிரடிப் படையைச் சேர்ந்த முதுநிலை போலீசு கண்காணிப்பாளர், துணை போலீசு கண்காணிப்பாளர் உள்ளிட்டு ஐந்து காக்கிச் சட்டை கிரிமினல்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இக்கொலைகள் பற்றி இராணுவத்திற்குள் விசாரணை நடத்தப்படும் என்று இராணுவ அமைச்சரும், இராணுவ அதிகாரிகளும் அறிவித்துள்ளனர். அரசாங்கம் இப்படி முண்டா தட்டுவதை வைத்துக் கொண்டு அரச பயங்கரவாதக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு விடுவார்கள் என நம்பிவிட முடியுமா?

பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள தெலினா என்ற ஊரைச் சேர்ந்த மன்சூர் அகமது மிர், செப்.7, 2003 அன்று, தேசிய துப்பாக்கிப் படைப் பிரிவைச் சேர்ந்த கேப்டன் ஷர்மாவால், அவரது வீட்டில் இருந்து இழுத்துச் செல்லப்பட்டார். அதன்பிறகு மன்சூர் அகமது மிர் "காணாமல்" போய்விட்டார். மூன்று ஆண்டுகள் கழித்து, தெலினாவில் ஒரு மருத்துவமனை கட்டுவதற்காக அஸ்திவாரம் தோண்டப்பட்ட பொழுது, அந்த இடத்தில் மிர் புதைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்தன. மிர்ரின் படுகொலைக்கு நீதி கேட்டு காசுமீர் மக்கள் 15 நாட்கள் போராடிய பிறகு, காங். கூட்டணி ஆட்சி நீதிமன்ற விசாரணைக்


படிப்பகம்

www.padippakam.com

கமிசனை அமைத்தது. இந்த கமிசன் அமைக்கப்பட்டு எட்டு மாதங்கள் கழிந்து விட்டாலும், விசாரணை ஒரு அங்குலம் கூட முன்னேறவில்லை.

''இராணுவம் விசாரணை நடத்த ஒத்துழைக்க மறுக்கிறது; குறைந்த பட்சம், கேப்டன் ஷர்மா இப்பொழுது எங்கு இருக்கிறார் என்ற தகவலைக் கூடச் சொல்ல மறுக்கிறது'' என ஜம்மு - காசுமீர் மாநில தலைமை போலீசு அதிகாரியே குற்றஞ் சுமத்தியிருக்கிறார்.

2002-ஆம் ஆண்டு சிட்டிசிங் புரா என்ற கிராமத்தில், ஐந்து அப்பாவி முசுலீம்களை, பாக். பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி இந்திய இராணுவம் கொன்றொழித்தது. இந்தப் படுகொலை அம்பலமாகி மக்கள் போராடிய பிறகு, மையப் புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. இராணுவத்தின் இழுத்தடிப்பால், சி.பி.ஐ. விசாரணையை முடிக்கவே நான்கு ஆண்டுகளாகி விட்டது. கடந்த ஆண்டு மே மாதம், இப்படுகொலை தொடர்பாக, சி.பி.ஐ. ஐந்து இராணுவ அதிகாரிகள் மீது குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்து விட்டாலும், கடந்த ஒரு ஆண்டில், அந்த ஐந்து அதிகாரிகள் ஒருமுறை கூட நீதிமன்றத்தின் குற்றவாளிக் கூண்டில் ஏறி நிற்கவில்லை.

ஜம்மு-காசுமீர் மாநிலத்தில் தீவிரவாதிகளை ஒழிப்பது என்ற பெயரில் போலி மோதல்களை நடத்தியிருக்கும் அரசு பயங்கரவாதிகளை விசாரித்துத் தண்டிப்பதில், இந்திய ஆளுங் கும்பல் காட்டி வரும் 'அக்கறைக்கு' இவை போல ஆயிரத்தெட்டு வழக்குகளை உதாரணமாக எடுத்துக் காட்டலாம். அம்மாநில மனித உரிமை கமிசனின் தலைவராக நியமிக்கப்பட்ட நீதிபதி அலி முகம்மது மிர், ''இந்த கமிசன் சர்வதேச சமூகத்தை முட்டாளாக்குவதற்கான கண்துடைப்பு நடவடிக்கை தவிர, வேறொன்றுமில்லை'' எனக் குறிப்பிட்டுப் பதவி விலகியதை, மனித உரிமை மீறல் பற்றிய ஆளும் கும்பல்களின் பசப்பல்களுக்கு முத்தாய்ப்பாகக் குறிப்பிடலாம்.

தற்பொழுது அம்பலமாகியுள்ள இந்த ஐந்து படுகொலை நடவடிக்கைகளிலும், தேசிய துப்பாக்கிப் படையைச் சேர்ந்த மூன்று படைப் பிரிவுகள் பங்கெடுத்துக் கொண்டிருப்பது நிரூபணமாகியிருக்கிறது. இப்படிப்பட்ட போலி மோதல் கொலைகளை, ''தாளிப்பு நடவடிக்கை'' எனப் பெயரிட்டு அழைக்கிறது, இராணுவம். ''1989-ஆம் தொடங்கி இன்று வரை, ஏறத்தாழ 10,000 அப்பாவிகள் பாதுகாப்பு படைகளால் இழுத்துச் செல்லப்பட்ட பின் காணாமல் போய்விட்டதாக''க் குறிப்பிடுகிறது. ''காணாமல் போனவர்களின் பெற்றோர் அமைப்பு.'' காசுமீரில் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் தொடங்கிய பிறகு 60 பேர் மட்டுமே காணாமல் போயிருப்பதாகக் கூறி வந்த காங்.கூட்டணி ஆட்சி, இப்பொழுது 1,017 அப்பாவிகள் காணாமல் போய் விட்டதாகக் கணக்குக் காட்டுகிறது.

**கூலிக்குக் கொலை செய்யும் கிரிமினல் மாஃபியா கும்பலைப் போலச் சீரழிந்துவிட்ட இந்திய இராணுவத்தை, தீவிரவாத எதிர்ப்பு என்ற குருட்டு தேசபக்திதான் புனிதப்படுத்தித் தண்டனையில் இருந்து பாதுகாக்கிறது. ஜம்மு-காசுமீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை, பயங்கரவாதம் என நாக்கூசாமல் அவதூறு செய்கிறது.**

ஜம்மு-காசுமீர் போலீசு துறையைச் சேர்ந்த ''சிறப்பு நடவடிக்கைகள் குழு'' என்ற அதிரடி படைப் பிரிவு, இரகசிய கொலைக் குழுவாகவே செயல்பட்டு வருகிறது. இராணுவமும், துணை இராணுவமும் ஆள் காட்டி வேலை செய்வதற்காகவே சரணடைந்த போராளிகளைப் பயன்படுத்தி வருகின்றன. தீவிரவாதி என முத்திரை குத்திவிடுவோம் என மிரட்டியே அப்பாவி மக்களிடம் பணம் பறிப்பதை, ஒரு தொழிலாகவே இராணுவமும், துணை இராணுவமும் நடத்தி வருகின்றன. ஜம்மு-காசுமீர் மாநிலத்தில் மட்டுமின்றி; பனி படர்ந்த சியாச்சின் மலைப் பகுதியில் எல்லைப் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவத்தினர் கூட, பரிசு பணத்திற்காகவும், பதவி உயர்வுக்காகவும் போலி மோதல் நடவடிக்கைகளை நடத்தி வருவதும் ஏற்கெனவே அம்பலமாகி நாறியிருக்கிறது.

•••

''அடையாளம் தெரியாத தீவிரவாதி'' என பாதுகாப்பு படைகள் முத்திரை குத்துகின்றனவே, அதைவிட அயோக்கியத்தனம் வேறெதுவும் இருக்க முடியாது. ஒருவரின் அடையாளமே தெரியாத பொழுது, அவ்ரை எப்படி தீவிரவாதியாக முத்திரை குத்த முடியும்? இந்தக் கேள்வியை எழுப்பும் பொழுது, இராணுவம் - போலீசின் கட்டுக்கதையும், மோதல் நாடகமும் உடனடியாக அம்பலத்துக்கு வந்து விடும். ஆனால், பத்திரிகைகள் தொடங்கி நீதிமான்கள் வரை ஒருவரும் இந்தச் சாதாரண கேள்வியை எழுப்ப மறுக்கிறார்கள்.

மாறாக, ''பாதுகாப்புப் படைகள் கடுமையான சூழ்நிலையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன; இந்தக் கொலைகளுக்காக பாதுகாப்புப் படையினரை விசாரித்தால் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் அவர்களின் முனைப்பு மழுங்கிவிடும்'' என ''சோ'' முதலான பாசிஸ்டுகள் இராணுவத்தின் இந்தக் கொலைவெறியைப் பொது மக்களிடம் நியாயப்படுத்துகிறார்கள். அரசாங்கமோ, பரிசுப் பணம், பதவி உயர்வு என்ற தீனியைப் போட்டு, இந்தக் கொலைவெறியை வளர்த்து விடுகிறது. மேலும், இப்படிப்பட்ட கொலைகளில் ஈடுபடும் இராணுவத்தினரை விசாரணை - தண்டனையில் இருந்து பாதுகாக்க ''ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை'' நடைமுறைப்படுத்தி வருகிறது.

சட்டபூர்வமாகவே கிடைக்கும் இந்த் பாதுகாப்புதான், ஜம்மு-காசுமீர் மாநிலத்தில் யாரையும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் குருவி சுடுவது போல சுட்டுக் கொல்லலாம் என்ற பாசிசத் திமிரை இராணுவத்திற்கும் - போலீசிற்கும் வழங்கியிருக்கிறது.

''ஜம்மு-காசுமீர் மாநிலத்தில் பாதுகாப்புப் படைகள் நடத்திவரும் அட்டூழியங்களை, பிற மாநில மக்கள் ஏன் கண்டிப்பதில்லை?'' என்ற கேள்வியை முன்வைக்கிறார், பெர்வேஸ் இம்ரோஸ் என்ற வழக்கறிஞர். நேர்மையான மனசாட்சி கொண்ட ஒவ்வொருவரும் எதிர்கொள்ள வேண்டிய கேள்வி இது. ஆனால், இதற்குப் பதில் சொல்ல வேண்டிய நடுத்தர வர்க்கமோ குருட்டு தேசபக்தியில் மூழ்கிப் போய் கிடக்கிறது. கூலிக்குக் கொலை செய்யும் கிரிமினல் மாஃபியா கும்பலைப் போலச் சீரழிந்துவிட்ட இந்திய இராணுவத்தை, இந்த குருட்டு தேசபக்திதான் புனிதப்படுத்தித் தண்டனையில் இருந்து பாதுகாக்கிறது. ஜம்மு-காசுமீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை, பயங்கரவாதம் என நாக்கூசாமல் அவதூறு செய்கிறது.

• செல்வம்




படிப்பகம்

www.padippakam.com

### தலையங்கம் தொடர்ச்சி

தலைமைக்குத் தனது விசுவாசத்தைக் காட்டி, அரசியல் பதவி ஆதாயம் அடைவதற்கான வேறொரு வகை பிழைப்புவாதம் தான், இந்த மனிதத் தன்மையற்ற, கொடூரமான கொலை வெறிக்கு அடிப்படையாய் இருந்தது.

தர்மபுரி பேருந்து எரிப்பு வழக்கையும், தீர்ப்பையும் மேலவளவு சாதிவெறிப் படுகொலை வழக்கையும் தீர்ப்பையும் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியாது. இரண்டு வழக்குகளுமே கொஞ்சமும் மனிதத்தன்மையற்ற, கொடூரமான முறையில் கும்பல் வெறியால் நிகழ்த்தப்பட்டவை. முதல் சம்பவம் பிழைப்புவாத அரசியல் நோக்கில் நடத்தப்பட்டது; இரண்டாவது, சாதிவெறி அரசியல் நோக்கில் நடத்தப்பட்டவை. இரண்டுமே, கொடூரம் நிகழ்ந்த மாவட்டங்களில் வழக்கு நடத்தப்பட்டால் நீதி கிடைக்கார்தென்று சேலம் நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டன. மேலவளவு படுகொலைகளுக்குக் காரணமான குற்றவாளிகளுக்கு அதிகபட்சத் தண்டனை விதிக்கப்படவில்லை. குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் 14 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கியும், அவர்களையும் பிணையில் அனுப்பி சுதந்திரமாக திரியவிட்டும் ஆதிக்க சாதிவெறிக்குக் கருணை காட்டியது நீதித்துறை. ஆனால், தர்மபுரி பேருந்து எரிப்பு வழக்கில் நடுத்தர வர்க்கத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரமான அநீதி-அக்கிரமம் கண்டு கொதித்துப்போன நீதித்துறை, அதன் மீதே நம்பிக்கை இழந்துவிடக் கூடாதென்று அதிகபட்சத் தண்டனையான மரண தண்டனையை வழங்கியது.




அதிகபட்சத் தண்டனையாக மரண தண்டனை எதற்காக விதிக்கப்படுகிறது? ''குற்றவாளிகள் வெளியே வந்தால் சமூ கம் நிம்மதியாக வாழ முடியாது'' என்கிறார் அரசு வக்கீல். ''இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடக்கக் கூடாது'' என்கிறார், மாணவி கோகிலவாணியின் தந்தை. ''எங்கள் மகளுக்கு ஏற்பட்ட கதி இனி யாருக்கும் ஏற்படக்கூடாது... இத்தீர்ப்பு உறுதியாக நிறைவேற்றப்பட்டால் எதிர்காலத்தில் யாரும் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்படுவார்கள்'' என்கிறார் மற்றொரு மாணவி காயத்ரியின் தந்தை.

அவர்களின் நம்பிக்கை பலிக்குமா என்பதுதான் முக்கியமான கேள்வி. இந்த நம்பிக்கை நிச்சயமாக பலிக்காது; தோற்றுப்போகும். இந்தக் கேள்விக்கான பதில், தீர்ப்பிலேயே பொதிந்திருக்கிறது. ''பயங்கரமான கொடூரமான இந்தச் செயல்களின் நோக்கம் அரசியல் லாபத்திற்காகவும் தங்களுடைய தலைவர்களிடம் நல்ல பெயர் எடுக்கவும் கொஞ்சம் கூட இரக்கமற்றமுறையில், இருதயம் இல்லாதவர்களாக கொலைகள் செய்துள்ளனர்''. என்கிறார் நீதிபதி. இத்தகைய பிழைப்புவாத கிரிமினல் குற்றவாளிகளை ஊட்டி வளர்க்கும் ஒரு அரசியல் கட்சி இந்த மாநிலத்தில் பத்தாண்டுகள் ஆளுங்கட்சியாகவும், இப்போதும் முதன்மையான எதிர்க்கட்சியாகவும் இருக்கிறது.

தர்மபுரி பேருந்து எரிப்பு வழக்கில் என்னென்ன குற்றங்களுக்காக ஏழாண்டுகளுக்கும் மேலாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதோ, அதே குற்றங்களை அதேநாளில் அக்கட்சியின் பலநூறு உறுப்பினர்கள் புரிந்துள்ளனர். மேலும், தர்மபுரி கொலைக்குற்ற வழக்கில் தடையங்களை அழிப்பது, குற்றவாளிகளுக்கு மாதம் 5000 ரூபாய்வரை ஊதியம் வழங்குவது, சாட்சியங்களைப் பிறழச் செய்வது போன்ற பல குற்றங்களை அக்கட்சியும் அதன் அரசாங்கமும் செய்திருக்கிறது. கிருட்டிணகிரி அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்தபோது, இரண்டே நாட்களில் 22 அரசு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாற்றப்பட்டனர்.

கொளுத்தப்பட்ட மாணவி கோகிலவாணியின் தந்தை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போட்டு, அரசும், போலீசும் கடும் கண்டனத்துக்குள்ளாகி, வழக்கு சேலத்துக்கு மாற்றப்பட்டது. அதன் பிறகும் உயர்நீதி மன்றம் பரிந்துரைத்தவரை சிறப்பு வழக்கறிஞரை நியமிக்க மறுத்து, மேலும் மேலும் மேல் முறையீடு செய்து வழக்கை இழுத்தடித்தது. ஜெயலலிதா அரசும், அதிகாரிகளும் நீதிமன்ற அவமதிப்புத் தண்டனையிலிருந்து தப்பமுடியாத நிலையில் அரசு வழக்கறிஞரை நியமித்தனர். பிறகும், வழக்குத் தொடர முடியாதவாறு வழக்கு ஆவணங்கள் தொலைந்து போனதாக நாடகமாடியது. கொளுத்தப்பட்ட மாணவிகளின் பெற்றோர்களிடம் கோடீசுவர முதலாளிகளை அனுப்பி விலைக்கு வாங்கிடச் செய்த முயற்சி பலிக்காதபோது, கொலைமிரட்டல்கள் விடப்பட்டன. எல்லாத் தடைகளையும் கடந்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட பிறகு, அவர்களின் குடும்பங்களுக்குப் பல இலட்சம் ரூபாய் ''கருணைத் தொகை'' ஏற்பாடு செய்துள்ளது ஜெயலலிதா கட்சி.

தர்மபுரி பேருந்து எரிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் மட்டுமல்ல, பொதுவில் ஓட்டுக்கட்சி அரசியலில் கொள்கை, கோட்பாடு, தத்துவம் ஏதுமற்ற பிழைப்புவாதமே மேலோங்கியுள்ள நிலையில், அ.இ.அ.தி.மு. க.வோ, முழுக்கவும் அரசியல் பிழைப்புவாதக் கிரிமினல்களின் கட்சியாக உள்ளது. கட்சிக்குள்ளேயே சுயநலத்துக்காக ஒருவரை ஒருவர் படுகொலைகள் செய்வதும், கட்சித் தலைமையே தனது கட்சிப் பிரமுகர்கள் மீதே கொலைவெறித் தாக்குதல்களை ஏவி விடுவதும், பதவி ஆதாயத்துக்காகவும் தலைமையின் கருணைப் பார்வையை ஈர்ப்பதற்காகவே நாக்கை அறுத்துக் கொள்வதும், விரலைத் துண்டித்துக் கொள்வதும், தற்கொலை செய்து கொள்வதும் வழக்கமாக உள்ளது.

இப்படிப்பட்ட குற்றவாளிகளின் கூடாரமாகிய ஒரு அமைப்பும் அது ஒரு அரசியல் கட்சியாகவும் நீடிப்பதே சமூகத்துக்கு தீங்கும் ஆபத்தும் விளைவிப்பதாக உள்ளது. இந்த உண்மைகளை முன்வைத்து அந்தப் பிழைப்புவாதக் கிரிமினல் கட்சியைத் தடை செய்யும்படி கோரும் அருகதையும் அக்கறையும் வேறு எந்த ஓட்டுக் கட்சிக்கும் கிடையாது. இதுதான் ஜெயலலிதா கும்பலின் பலத்திற்கும் துணிவுக்கும் அடிப்படை.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மாட்சிமை குறித்து சண்டப்பிரசண்டம் செய்யும் நடுத்தர வர்க்க அறிவுஜீவிகளுக்கு, அதன் ஒரு அங்கமான ஓட்டுக்கட்சி அரசியல் இவ்வளவு தூரம் சீரழிந்து கழிசடை நிலையை அடைந்து, பெரும் சவாலாக வளர்ந்திருப்பது மட்டும் சகித்துக் கொள்ள முடியாததாக உள்ளது.

www.padippakam.com

"காலனியாதிக்க எதிர்ப்பு மரபு! மறுகாலனியாக்கம் எதிர்த்து முழங்கு!!"

# தமிழ் மக்கள் இசை விழா: விடுதலைப் போரின் வீரமுழக்கம்

மறுகாலனிய, பார்ப்பனிய பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிரான போர் முழக்கமாக மக்கள் கலை இலக்கியக் கழகம் நடத்தி வரும் தமிழ் மக்கள் இசைவிழாவுக்கு இது 14-வது ஆண்டு. கடந்த இரண்டு ஆண்டுகளில் சுனாமி மற்றும் வெள்ளப் பேரழிவை யொட்டி மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் காரணமாக தமிழ் மக்கள் இசைவிழா ரத்து செய்யப்பட்டிருந்தது. இவ்வாண்டு மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட இசைவிழா பிப்ரவரி 24-ஆம் தேதி மிகச் சிறப்பாக நடந்தேறியது.

ஒரு மக்கள் விழாவாகவும், மாற்று அரசியல் கருத்துக் கொண்டோரும் விருப்பத்தோடு கலந்து கொள்ளும் நிகழ்வாகவும் பரிணாமம் பெற்றிருக்கும் தமிழ் மக்கள் இசை விழாவின் இவ்வாண்டு நிகழ்வு, 'காலனியாதிக்க எதிர்ப்பு மரபு! மறுகாலனியாக்கம் எதிர்த்து முழங்கு!' என்ற முழக்கத்தின் கீழ் நடைபெற்றது.

1806 - வேலூர் சிப்பாய் புரட்சியின் 200-வது ஆண்டு, 1857 வட இந்திய சுதந்திரப் போரின் 150-வது ஆண்டு, 1906 - வ.உ.சிதம்பரனார் சுதேசிக் கப்பல் கம்பெனி துவக்கியதன் நூற்றாண்டு மற்றும் 1906-இல் பிறந்த ஏகாதிபத்திய எதிர்ப்புச் சிங்கம் பகத் சிங்கின் பிறந்தநாள் நூற்றாண்டு.

பெயரளவு சுதந்திரத்தையும் இழந்து நாடே மீண்டும் அடிமைப்பட்டு வரும் சூழலில், காலனியாதிக்க எதிர்ப்பு மரபின் வரலாற்று உணர்வை மக்களிடையே கொண்டு செல்வதன் மூலம் இன்றைய மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்திற்கு செயலூக்கம் வழங்கும் வகையில் இவ்வாண்டு நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

விழாவின் முதல் நிகழ்வாக பறையொலி அதிர ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. தோழர்கள் கீழவாசல் காமராசர் சிலையிலிருந்து பேரணியாய்ப் புறப்பட்டனர். செம்பதாகைகள் காற்றில் அசைய, அவற்றின் நடுவே உயர்ந்த காலனியாதிக்க எதிர்ப்புப் போராளிகளின் உருவச் சித்திரங்கள், அந்தப் போராளிகளின் உண்மையான வாரிசுகள் நக்சல்பாரிப் புரட்சியாளர்களே என்பதைப் பறைசாற்றின.

"வேலூர் சிப்பாய் தியாகிகளே, விடுதலை மரபின் விடியல்களே, காளையார் கோயில் காடுகளே, காலனி எதிர்ப்பு ஓடைகளே, வீரவணக்கம் வீர வணக்கம்" என்ற முழக்கம் நமது வீரமரபின் பெருமிதத்தையும் நெகிழ்ச்சியையும் ஒருங்கே தோற்றுவித்தது. "பகத்சிங்கின் மண்ணிலே மன்மோகன் சிங் - அவமானம்", "வ.உ.சிதம்பரம் வாழ்ந்த மண்ணில் ப.சிதம்பரம் - வெட்கக்கேடு!" என்ற முழக்கங்கள் நிகழ்காலத் துரோகிகளை அம்பலப்படுத்தின. "திப்பு, மருது, கட்டபொம்மன் வாழ்ந்த வாழ்வைப் பாரடா; துப்பு கெட்ட நடிகனுக்கு ரசிகனா, நீ கூறடா" என்ற முழக்கம் இளைய தலைமுறையின் வருந்தத்தக்க நிலையை உரிமையுடன் இடித்துரைத்தது. இரு மருங்கும் திரண்டு நின்ற மக்களை இசை விழாவை நோக்கி ஈர்த்தவாறே பேரணி திருவள்ளுவர் திடலை வந்தடைந்தது.

விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திய ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் உணர்ச்சிபூர்வமான பாடலுடன் காலை அமர்வு தொடங்கியது.

இசைவிழாவின் வழக்கமான எளிமைக்கும் கம்பீரத்துக்கும் பதிலாக பகட்டைப் பறைசாற்றும் விதத்தில் அரங்கம் அமைய நேர்ந்ததற்கான விளக்கத்தைத் தன் வரவேற்புரையில் கூறினார் தோழர் காளியப்பன். பிப்ரவரி 22-ஆம் தேதியன்று முதலமைச்சர் கருணாநிதி பங்கேற்ற அரசு விழாவுக்காக உருவாக்கப்பட்ட பிரம்மாண்டமான அரங்கத்தைப் பிரித்து முடித்த பின்னர், புதிதாக பந்தல் போட்டு நாம் நிகழ்ச்சி நடத்துவது என்றால், அதற்காகவே இசைவிழாவைத் தள்ளி வைக்க வேண்டியிருக்கும் என்ற சூழலில், வேறு வழியின்றி இந்த அரங்கிலேயே நடத்திக்

நகரெங்கும் விடுதலை மணம் பரப்பிய பேரணி




படிப்பகம்

www.padippakam.com

கொள்வது என்று முடிவெடுக்க நேர்ந்ததை விளக்கினார்.

ம.க.இ.க.வின் மா.செ.கு. உறுப்பினர் **தோழர் கதிரவன்** தலைமையில் கருத்தரங்கம் துவங்கியது. தமது எழுச்சிகரமான தலைமையுரையில் 1800-01 காலகட்டத்தின் தென்னக சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவு கூர்ந்த தோழர் கதிரவன், அத்தியாகிகளின் வரலாறு இருட்டடிப்பு செய்யப்பட்டிருப்பதையும், இன்றைய மறுகாலனியச் சூழலில் அவர்களை நினைவு கொள்ள வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார். தென்னிந்திய வரலாற்றை அலட்சியப் படுத்துவது, இசுலாமியர்களை புறக்கணிப்பது என்ற இந்து தேசியக் கண்ணோட்டத்தின் காரணமாக 1800-01 போராட்டம், முதல் இந்திய சுதந்திரப் போராக அங்கீகரிக்கப்படாமலிருப்பதைச் சுட்டிக் காட்டி, அவ்வாறு அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்; பாடநூல்களில் பாடமாக சேர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.



**"தென்னகத்தில் கிளர்ந்தெழுந்த முதல் சுதந்திரப் போர்"**
**- பேரா. கே. இராசய்யன்**

'தென்னிந்தியக் கிளர்ச்சி 1800-01, முதல் சுதந்திரப் போர்' என்ற ஆங்கில நூலின் ஆசிரியரும், தென்னிந்திய வரலாற்றுப் பேராயத்தின் முன்னாள் தலைவருமான **பேரா.ராஜய்யன்,** போதிய ஆய்வாதாரங்களுடன் தனது நூல் 1971-இலேயே வெளியிடப்பட்டிருந்த போதிலும், இந்நூலை அரசு அலட்சியப்படுத்தியது குறித்து எடுத்துரைத்தார். 1800-01 கிளர்ச்சி, முதல் இந்திய சுதந்திரப் போராக அரசு அறிவிக்க வேண்டும் என 1980-இல் தான் வழக்கு தொடுத்ததையும், உயர்நீதி மன்றம் இவ்விசயத்தில் தலையிட மறுத்து விட்டதையும் தெரிவித்தார். இந்த வரலாற்று உண்மையை நிலை நாட்ட உங்களைப் போன்ற புரட்சிகர அமைப்புகள் முயலவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

அவரைத் தொடர்ந்து பேசிய பெங்களூர் திப்பு சுல்தான் பிரச்சார சமிதியின் தலைவரான **தலகாடு சிக்கேரங்க கவுடா** அம்மாபெரும் வரலாற்று நாயகனின் பன்முகப்பட்ட ஆளுமையை அறிமுகப்படுத்தினார். ஆங்கிலேயர்களை விரட்டியடிப்பதையே தமது வாழ்க்கை இலட்சியமாக திப்பு கொண்டிருந்ததையும், அதனால் மராத்திய பேஷ்வா மன்னர்கள், ஹைதராபாத் நிஜாம், திருவிதாங்கூர் சமஸ்தானம் முதலிய மன்னர்களோடு ஒரு ஐக்கிய முன்னணியை கட்ட முயன்றதையும் குறிப்பிட்டார். ஆனால், அவர்கள் 'மதவேறுபாடின்றி' கிழக்கிந்தியக் கம்பெனிக்கு விசுவாசமாக இருந்ததையும் திப்புவுக்கு எதிராக இருந்ததையும் குறிப்பிட்டார். மேலும், மூன்று உக்கிரமான போர்களுக்கு இடையிலும் அவர் அயராது சமூகத்தில் மேற்கொண்ட சீர்திருத்தங்களை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கினார். குறிப்பாக, பல்லாயிரக்கணக்கில் நிலங்களை வளைத்துக் கொண்ட பார்ப்பனர்களின் கொட்டத்தை ஒடுக்கிய திப்பு சுல்தான் அந்நிலங்களை அவர்களிடமிருந்து பறித்தெடுத்து நிலமற்ற கூலி-ஏழை விவசாயிகளிடம் அவற்றை விநியோகித்ததை விளக்கினார். மேலும், ராக்கெட் ஏவுகணைகளை உலகிலேயே முதன்முறையாக உருவாக்கிய திப்பு சுல்தான்; அவற்றை தமது போர்க்களங்களில் பயன்படுத்தி கிழக்கிந்தியக் கம்பெனியைத் திகிலுறச் செய்ததையும், உலகளாவிய ராக்கெட் ஏவுகணை தொழில்நுட்ப வல்லுனர்கள் இன்றளவும் திப்பு சுல்தானது முன்முயற்சியையும், பங்களிப்பையும் வியந்து போற்றுவதையும் குறிப்பிட்டார். சிறீரங்கப்பட்டினம் கைப்பற்றப்பட்டவுடன், முதற்கணமாக வெள்ளையர்கள் திப்புவின் நூலகத்தைக் கைப்பற்றி அவரது நூல்கள், ஆவணங்கள், குறிப்புகள் முதலானவற்றை கவர்ந்து சென்றதைக் குறிப்பிட்டார். மதத்தின் சாயல் இம்மியளவும் இன்றி ஆட்சி புரிந்த திப்புவை இன்று இசுலாமிய மதவெறியராக சித்தரிக்க முயன்று வரும் பார்ப்பனர்களின் பொய்ப் பிரச்சாரங்களை புள்ளி விவரங்களோடு அம்பலப்படுத்தினார்.

அடிமை மோகம் அழியும் வரையில் விடிவு இல்லை, விடுதலையும் இல்லை!' என்ற தலைப்பில் உரையாற்றிய ம.க.இ.க. **தோழர் துரை.சண்முகம்,** விடுதலைப் போராட்ட வீரர்களின் வீர மரபுக்கு நேர் எதிராக இன்று சமூகத்தில், குறிப்பாக இளைஞர்களிடத்தில் குடிகொண்டிருக்கும் பிழைப்புவாதத்தையும், கோழைத்தனத்தையும் வேதனையோடு குறிப்பிட்டார். மறுகாலனியத்தின் விளைவாக . உணவு, உடை, கலை ரசனை, வாழ்க்கைக் கண்ணோட்டம் என ஒவ்வொரு அம்சத்திலும் அடிமைத்தனம் கோலோச்சுவதை எள்ளலும், சினமும் பொங்க குறிப்பிட்ட அவர், கல்வி அமைப்பும், அனைத்து நிறுவனமயமாக்கப்பட்ட அமைப்புகளும் கட்சிகளும், ஏன் போலி கம்யூனிஸ்டுகளும் கூட இச்சூழலை மாற்றுவதற்கான அடிப்படைக் கண்ணோட்டமின்றி இருப்பதையும், இதற்கான மாற்று மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனை கொண்ட புரட்சிகர அமைப்புகள்தாம் என்பதை அறைந்து கூறினார். நாட்டுப்பற்றும், மான உணர்வும் கொண்ட மாணவர்களும், இளைஞர்களும் இத்தகைய புரட்சிகர அமைப்புகளின் அணிதிரள வேண்டுமென அறைகூவல் விடுத்தார்.

மதிய அமர்வின் முதல் உரையாக தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழ


**வெளிவந்து விட்டன!**

**ம.க.இ.க.வின்**

**10 பாடல் ஒலிப்பேழைகளும் இப்போது தரமான ஒலிக்குறுந்தகடுகளாக!**

**ஒரு குறுந்தகட்டின் விலை: ரூ. 30/-**

*குறுந்தகடு வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*

**இரா.சீனிவாசன், புதிய கலாச்சாரம், எண்.16, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை, அசோக்நகர், சென்னை- 600 083.**

குறுந்தகடு வேண்டுவோர் பணவிடை (M.O) அல்லது கேட்பு வரைவோலையை (D.D) **இரா.சீனிவாசன்** பெயருக்கு அனுப்பவும். குறுந்தகடுகளுக்கான தொகையுடன் அஞ்சல் செலவு ரூ. 25-ஐச் சேர்த்து அனுப்பவும்.

www.padippakam.com

கப் பேராசிரியரும், 'பகத்சிங் ஆவணங்களின் முழுமையான தொகுப்பு' நூலாசிரியருமான **பேரா.சமன்லால்,** பகத்சிங்கின் அரசியல் ஆளுமை உருவான வரலாற்றுச் சூழல் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். சேகுவேராவுக்கு இணையான ஆளுமையாக பகத்சிங் விளங்கிய போதும், அவரது கருத்துக்கள் மக்களிடம் விரிவாக கொண்டு செல்லபடாததை குறிப்பிட்டார். அவ்வகையில் இசை விழா குறித்த தமது மகிழ்ச்சியை வெளியிட்ட அவர், தமது குறுகிய வாழ்விற்குள்ளாக காதல், சாதி, மதம், ஏகாதிபத்தியம், மார்க்சியம் என பல தலைப்புகளில் தீர்க்கமான கருத்துக்களை பகத்சிங் வழங்கியிருப்பதையும், அவற்றை மேலும் விரிவாக மக்களிடம் கொண்டு செல்வதன் அவசியத்தையும் விளக்கினார். சாதி, மத எல்லைகளைத் தாண்டி நின்ற பகத்சிங்கிற்கு மட்டுமே நமது நாட்டு மக்களின், குறிப்பாக இளைஞர்களின் நாயகனாக கொண்டாடப்படுவதற்கான தகுதி உண்டு என்பதையும், ஏகாதிபத்தியம் கோரத் தாண்டவமாடும் இன்றைய சூழலில், இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ள உண்மையான பகத்சிங்கை மக்களிடம் கொண்டு செல்வதன் மூலம் மட்டுமே விடுதலைக்கு வழிகோல இயலும் என்பதையும் வலியுறுத்தினார்.




"மக்கள் நலனில் மண்ணின் விடுதலையைக் கண்ட குடிமகன் திப்பு" - சிக்கே ரங்க கவுடா

'மறுகாலனியாக்கம் விடுதலைப் போர் இன்னும் முடியவில்லை' என்ற தலைப்பில் உரையாற்றிய ம.க.இ.க. பொதுச்செயலர் **தோழர் மருதையன்,** இரண்டு நூற்றாண்டு முந்தையதும், மிகச் சமீபத்தியதுமான விடுதலை வீரர்களின் இந்த வரலாறு இருட்டடிப்பு செய்யப்படுவதும், துரோகிகளின் வாரிசுகள் கொண்டாடப்படுவதும் தற்செயல் நிகழ்வுகள் அல்ல என்பதையும், துரோகிகளின் வாரிசுகளே இன்றைய ஆளும் வர்க்கத்தினர் என்பதையும் அம்பலப்படுத்தினார். வரலாற்று உணர்வு என்பது ஏன் அவசியம் என்பது விளக்கியதுடன் தியாகிகளின் வரலாற்றுப் பாத்திரத்தைப் புரிந்து கொள்வதென்பது அவர்களைத் துதி பாடுவதற்காக அல்ல, அவர்கள் வழியில் இன்றைய நமது வரலாற்று கடமையை ஆற்றுவதற்குத்தான் என்பதை வலியுறுத்தினார். பகத்சிங் என்ற 23 வயது இளைஞனின் சிறப்பு, இந்திய விடுதலையை, தான் ஏற்றுக்கொண்ட தனிப்பட்ட பொறுப்பாகவே கருதி அவன் செயல்பட்டதுதான் என்று குறிப்பிட்ட அவர், அத்தகையதொரு பண்பைத்தான் இன்றைய சூழல் இளைஞர்களிடம் கோருகிறது என்று கூறி முடித்தார்.

மாலை 7.00 மணியளவில் கலை நிகழ்ச்சிகள் துவங்கின. துவக்க உரையாற்றிய திரைப்பட இயக்குனர் இராம்ஜி எஸ்.பாலன், மிகவும் இயல்பாகவும் மனம் திறந்தும் பேசினார். ம.க.இ.க.வின் பாடல் ஒலிப்பேழைகள் தனது அரசியல் பார்வையையும் வாழ்க்கைக் கண்ணோட்டத்தையும் மாற்றியதை விளக்கினார். விழாவுக்கு வந்திருக்கும் ஒவ்வொருவரும் ம.க.இ.க.வின் பேழைகளைப் பரவலாகக் கொண்டு செல்வதை ஒரு பணியாகச் செய்வதன் மூலமே பல்லாயிரக்கணக்கானோரை அணிதிரட்டி விடமுடியும் என்று தான் ஆணித்தரமாக நம்புவதாகக் கூறினார். பிற அரசியல் கலாச்சார அமைப்புகளின் சீரழிந்த நிலையை குறிப்பிட்டு, இச்சூழலில ம.க.இ.க. மற்றும் அதன் தோழமை அமைப்புத் தோழர்களின் குன்றாத உணர்வையும், உறுதியையும் கண்டு தான் வியந்து போனதாகவும், இத்தகைய அமைப்பு இன்று நம் நாட்டை விழுங்கிக் கொண்டிருக்கும் மறுகாலனியத்தை நிச்சயம் முடிவுக்கு கொண்டு வரும் எனத் தான் உறுதிபட நம்புவதாகவும் குறிப்பிட்டார்.


முதல் நிகழ்ச்சியாக ரெட்டிப்பாளையம் வீரசோழத் தப்பாட்டக் குழுவினரின் தப்பாட்டம், அரங்கம் அதிர்ந்த போர் முழக்கமாக துவங்கியது. பிறகு புதுக்கோட்டை இ.எம்.பாஷா குழுவினர் கிழக்கிந்தியக் கம்பெனியை குலை நடுங்க வைத்த மாமன்னர்கள் ஹைதர் அலி, திப்பு குறித்த உணர்ச்சிபூர்வமான பாடல்களை இசைத்தனர். ஆதிக்கச் சாதிப் பிழைப்புவாதிகள் மருதிருவருக்குச் சாதிச் சாயம் பூசி சிறுமைப்படுத்தி வரும் இன்றைய சூழலில், சின்னமருதம்பட்டியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் நிகழ்த்திய மருதிருவர் கும்மி, அந்தப் போராளிகளின் உண்மையான ஆளுமையை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

'மருதுவின் போர்க்களம்' எனும் மேடை நாடகம் ஊமைத்துரையின் பாளையங்கோட்டை சிறை உடைப்பு சாகசம் முதல் மருது தூக்கிலிடப்பவது வரையிலான கொந்தளிப்பான நிகழ்வுகளை இன்றைய சூழலுக்குப் பொருத்தப்பாடுடைய எள்ளலான வசனங்களோடு காட்சிப்படுத்தியது. "உடம்பில் ஐரோப்பியனின் இரத்தம் ஓடாத அனைவரும் ஒன்று சேருங்கள்!" என்ற சின்ன மருதுவின் பிரகடனம் இன்றைய சூழலில் மக்களைச் செயலில் இறங்கக் கோரும் அறைகூவலாக ஒலித்தது. 1806 வேலூர் புரட்சியை மக்கள் மத்தியில் பரப்புவதில் பெரும்பங்கு ஆற்றிய இசுலாமிய நாடோடிப் பாடகர்களைக் கண்முன் கொண்டு வந்தது, வேலூர் ஃபக்கீர்களின் குழு. அரங்கத்தை அதிரச்செய்த அந்தப் பறையொலியின் வலிமை, அன்று வேலூர் சுற்று வட்டாரம் முழுவதும் ஒலித்து கிளர்ச்சியை மூண்டெழச் செய்த காட்சி மனக்கண் முன் விரிந்தது.

கட்டபொம்மனையும், சுந்தரலிங்கத்தையும், பூலித்தேவனையும், ஒண்டிவீரனையும் எதிர்எதிராக நிறுத்தி அவர்களை சாதி அடையாளங்களாக சிறுமைப்படுத்திவரும் இன்றைய சூழலில், அவர்களை மீட்டெடுக்கும் முயற்சியாக அமைந்தது தூத்துக்குடி கைலாசமூர்த்தி குழுவினர் நிகழ்த்திய 'வீரத்திற்கு ஏது சாதி' என்ற ஒயிலாட்டம். அந்தச் சிறுவர்களின் ஒயிலும் கம்பீரமும் மக்களின் பலத்த கரவொலியைப் பெற்றது.

ஜிம்ப்ளா மேளம் என அழைக்கப்படும் எருது கட்டும் மேளத்தின் போர்க்குணமும், சிதம்பரம் அன்பரசன் குழுவினரின் தமுரு மேளமும், தீரன் சின்னமலையின் வீரத்தைப் போற்றிய உடுக்கடிப் பாடலும், வ.உ.சி.யின் தியாக வரலாற்றைச் சொல்லும் வில்லுப்பாட்டும் கூடியிருந்த மக்களின் வரவேற்பைப் பெற்றன. தமிழ் நாடக வரலாற்றில்


படிப்பகம்



**தூக்கு மரம் - இசைச்சித்திரம்: திப்புவின் வீரமரணம் போர்க்களக் காட்சி.**

நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் கூடிய நாடகக் கலைஞராக விளங்கிய விஸ்வநாததாசின் நினைவோடு விடுதலைப் போரின் வீரநினைவுகளை வழங்கிய பாவலர் ஓம்.முத்துமாரி குழுவினரின் நிகழ்ச்சி, பின்னிரவின் கண் அயர்ச்சியையும் கலைத்து, அரங்கத்துக்கே புத்துணர்வு ஊட்டியது.

மெத்த படித்த மேதாவிகள் தமது வீடுகளில் தொலைக்காட்சி பெட்டிகளில் சரணடைந்து கிடக்கையில், 'வெட்டரிவாள் எடடா' என சிறுவர்கள் தமது கலைநிகழ்ச்சியில் உரத்துக் குரலெழுப்பியது உணர்ச்சியைத் தூண்டுவதாக இருந்தது.

உழைக்கும் மக்களைக் கருவறுக்கும் மறுகாலனியாக்கத்தின் கொடூரத்தையும், அமெரிக்க பயங்கரவாதத்தையும், பார்ப்பனியக் கோர முகத்தையும், ஏகாதிபத்திய அடிமைத்தனத்தையும், எள்ளலோடும் ஆவேசத்தோடும் தீயில் கிழித்த வரிகளாக வழங்கியது ம.க.இ.க. மையக்கலைக் குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி.

ம.க.இ.க. வழங்கிய 'தூக்குமேடை இசைச்சித்திரத்தில், தூக்குமேடை ஒரு இரத்த சாட்சியமாக, திப்புசுல்தான் முதல் பகத்சிங் வரை நீடிக்கும் வீர மரபை, செயல் வடிவம் பெறாத கனவின் மீட்டப்படாத இசையை வழங்கி பார்வையாளர்களை உறையச் செய்தது. இந்நிகழ்ச்சி நிறைவுற்ற பின்னும் அரங்கில் நிரம்பி நின்ற மௌனம் தமிழ் மக்கள் இசை விழாவின் நோக்கம் வெற்றி பெற்றதை பறைசாற்றியது.

இறுதியாக கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்த 1857 வட இந்திய சுதந்திரப் போர் குறித்த மையக் கலைக்குழுவினரால் இசைக்கப்பட்ட பாடல், இன்று ஆட்சிபுரியும் பல நூறு கிழக்கிந்தியக் கம்பெனிகளை முழுமையாக விரட்டியடிப்பதற்கான இறுதிச் சுதந்திரப் போர் துவங்கி விட்டது என்பதை அறிவிக்கும் போர் முரசாக அரங்கில் நிறைந்தது.

பச்சை மூங்கில்களால் அமைக்கப்பட்ட எளிமையும் கம்பீரமும் கொண்ட நுழைவாயில், உள்ளே நுழைந்தவுடன் பார்வையாளர்களை வரவேற்கும் சின்ன மருதுவின் போர்ப் பிரகடனம், விடுதலை வீரர்களையும் அவர்களுடைய போர்க்களங்களையும் சித்தரித்து அரங்கின் உட்புறமெங்கும் வைக்கப்பட்டிருந்த ஓவியங்கள், மறுகாலனியாக்கத்தின் வக்கிரமான வெளிப்பாடான தண்ணீர் தனியார்மயத்தையும், அதன் கோரமுகங்களில் ஒன்றான கோக்கோகோலாவையும் அம்பலப்படுத்தும் ஓவியக் காட்சி, இன்னொரு புத்தகக் கண்காட்சியோ என்று வியக்கும் வண்ணம் அரங்கில் விரவியிருந்த புத்தகக் கடைகள், தரமான மலிவான உணவு, தொலைவில் அமர்ந்திருப்போருக்கும் மேடை நிகழ்ச்சிகளைக் கண்டு ரசிக்கும் வண்ணம் அரங்கில் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சி திரைகள், பல்லாயிரக் கணக்கில் திரண்டிருந்தும் எத்தகைய சலசலப்பும் இல்லாமல் பொறுப்புணர்ச்சியுடன் தொடர்ச்சியாக 16 மணி நேரம் நிகழ்ச்சிகளைக் கண்டு ரசித்த மக்கள் கூட்டம்...

விழாவிற்குரிய மகிழ்ச்சியையும் போர்க்களத்தின் கட்டுப்பாட்டையும் ஒருங்கே வெளிப்படுத்திய தமிழ் மக்கள் இசைவிழா, விடுதலைப் போரில் முதல் குரலெழுப்பிய தமிழகம் மறுகாலனியாக்கத்துக்கு எதிரான போராட்டத்திலும் முன் நிற்கும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்தது.

— பு.ஜ.-பு.க. செய்தியாளர்கள்


புதிய வெளியீடுகள்

**இஸ்லாத்தில் மனுவாதிகள்**
– மசூத் ஆலம் ஃபலாஹி
[இந்திய முஸ்லிம்களிடையே நிலவும் சாதி–தீண்டாமை குறித்த ஒரு வரலாற்றுப் பார்வை]
*கீழைக்காற்று வெளியீடு*
விலை : ரூ. 6.00





**நாங்கள் சும்மா இருந்தாலும் நாடு விடுவதாயில்லை!**
– துரை. சண்முகம்
(கவியரங்கக் கவிதைகள்)
*சென்னை ம.க.இ.க. வெளியீடு*
விலை : ரூ. 15.00

அஞ்சலில் நூலைப் பெற நூலின் விலையுடன் ரூ. 25 சேர்த்துப் பணவிடை செய்க

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
**10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,**
**சென்னை - 600 002. ☎: 044-28412367**

www.padippakam.com

# காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு: பத்தில் ஒன்பது பழுதில்லை

**16** ஆண்டு காலச் சட்டப் போராட்டத்திற்குப் பிறகு காவிரி நடுவர் மன்றம், காவிரி நதி நீரைப் பகிர்ந்து கொள்வதில் ஒருமனதான இறுதித் தீர்ப்பை அளித்திருக்கிறது. காவிரியில் ஆண்டுக்கு 74,000 கோடி கன அடி நீர் கிடைக்கும் என்ற மதிப்பீட்டை (நூற்றுக்கு) 50 சதவீதம் நம்பலாம் என்ற அடிப்படையில், கர்நாடகத்திற்கு 27,000 கோடி கன அடி நீரும்; தமிழகத்திற்கு 41,900 கோடி கன அடி நீரும்; கேரளாவிற்கு 3,000 கோடி கன அடி நீரும்; புதுச்சேரிக்கு 700 கோடி கன அடி நீரும் இறுதித் தீர்ப்பில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இப்பகிர்வு போக, எஞ்சியிருக்கும் நீரில் 1,000 கோடி கன அடி நீர் சுற்றுப்புறச் சூழலுக்கும்; தவிர்க்க இயலாமல் கடலில் கலப்பது 400 கோடி கன அடி நீர் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காவிரி நடுவர் மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பில், கர்நாடகம், தமிழகத்திற்கு ஆண்டுதோறும் 20,500 கோடி கன அடி நீர் தர வேண்டும்; அதிலிருந்து தமிழகம் புதுச்சேரிக்கு 600 கோடி கன அடி நீர் தர வேண்டும். கர்நாடகம் தர வேண்டிய நீரின் அளவு மேட்டூரில் அளவிடப்பட வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. தற்பொழுது வழங்கப்பட்டுள்ள இறுதித் தீர்ப்பில், கர்நாடகம் தமிழகத்திற்கு, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்குத் தேவைப்படும் 1,000 கோடி கன அடி நீரையும் சேர்த்து, 19,200 கோடி கன அடி நீர் தர வேண்டும்; கர்நாடகம் தர வேண்டிய நீரின் அளவு, மேட்டூருக்கு மேலே, கர்நாடகம் - தமிழகம் எல்லையில் உள்ள பில்லிகுண்டலு என்ற இடத்தில் அளவிடப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் பங்கில், கர்நாடக மாநிலம் தரும் 18,200 கோடி கன அடி நீர் போக, மீதமுள்ள 23,700 கோடி கன அடி நீர் தமிழகப் பகுதிகளில் காவிரி நதியில் கிடைப்பதாகும்.

கன்னட இனவெறியர்களோ, தமிழகத்தின் பங்கு முழுவதையும் கர்நாடகமே தரவேண்டும் என்பது போல தீர்ப்பு வந்திருப்பதாகவும்; கீழ்மடைக்காரனைவிட, மேல்மடைக்காரனுக்குக் குறைவான நீரே ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அவதூறு பிரச்சாரத்தை நடத்தி வருகின்றனர். தீர்ப்பின் உண்மை விவரத்தை விவசாயிகளுக்கு விளக்க வேண்டிய மாநில அரசும் தீர்ப்பில் கர்நாடகத்திற்கு அநீதி இழைக்கப்பட்டுவிட்டதாகப் பொய் சொல்வதன் மூலம் தமிழர்களுக்கு எதிரான இனவெறி நடவடிக்கைகளுக்குத் தூபம் போட்டு வருகிறது.

கர்நாடகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற நாடக-திரைப்படக் கலைஞரும், ஞானபீட விருது பெற்ற நாடக ஆசிரியருமான கிரீஷ் கர்னாட், தீர்ப்பை கர்நாடகம் மதிக்க வேண்டும் என வெளிப்படையாகக் கூறியதற்காகவே, அவரின் உருவ பொம்மை கொளுத்தப்பட்டது. கர்நாடக இனவெறியர்களின் இப்பாசிசப் போக்கின் காரணமாகவே, அம்மாநிலத்தில் தீர்ப்பை ஆதரிப்போரின் குரல்கள், பத்திரிகைகளுக்கு எழுதப்படும் வாசகர் கடிதம் பகுதியைத் தாண்டி வெளியே கேட்கவில்லை.




1934 தொடங்கி 1980 வரையிலான காலகட்டத்தில், கர்நாடகம் உபயோகித்திருக்கும் காவிரி நீரின் குறைந்தபட்ச சராசரி அளவு 11,840 கோடி கன அடி; அதிகபட்ச சராசரி அளவு 19,070 கோடி கன அடி. கர்நாடகம், தனது காவிரி பாசனப் பரப்பைத் தன்னிச்சையாக விரிவாக்கிக் கொண்ட பிறகு, 1980-90 காலகட்டத்தில், அம்மாநிலம் பயன்படுத்தியிருக்கும் காவிரி நீரின் சராசரி அளவு 28,030 கோடி கன அடியாகும். *(ஆதாரம்: தமிழகம்: நதிநீர்ப் பிரச்சினைகள் - பழ.நெடுமாறன், பக்:107)* இப்புள்ளி விவரத்தோடு ஒப்பிட்டால், இறுதித் தீர்ப்பில் கர்நாடகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 27,000 கோடி கன அடி நீர் என்பது முற்றிலும் நியாயமான பங்கீடாகும்.

இது ஒருபுறமிருக்க, இடைக்காலத் தீர்ப்பில், கர்நாடக மாநில அரசு தனது பாசனப் பரப்பை 11.2 இலட்சம் ஏக்கருக்கு மேல் விரிவாக்கக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், கர்நாடக மாநில அரசோ, இத்தடையைக் கண்டு கொள்ளாமல், தனது பாசனப் பரப்பை விரி


படிப்பகம்

www.padippakam.com

வாக்கிக் கொண்டே சென்றது. இறுதித் தீர்ப்பில், கர்நாடகா தடையை மீறி விரிவாக்கம் செய்த பாசனப் பரப்பையும் உள்ளடக்கி 18.85 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பிற்குப் பாசனம் அளிக்க உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சாதகமான அம்சங்களைக் கருத்தில் கொண்டுதான் காவிரி நடுவர் மன்றத்தில் கர்நாடகா சார்பாக வாதாடிய வழக்குரைஞர் ஃபாலி.எஸ். நாரிமன், கர்நாடக மாநில தலைமை வழக்குரைஞர் இருவரும், "இத்தீர்ப்பு நியாயமானது" எனக் கூறியுள்ளனர். எதிர்க்கட்சிகள் அவர்களின் கருத்துக்கு எதிராகச் சட்டசபையில் சாமியாடிய பிறகுதான், கர்நாடக மாநில அரசு அவர்களின் கருத்தை மறுத்துப் பேசியதோடு, அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி, தீர்ப்பை முற்றிலும் நிராகரிப்பதாக அறிவித்திருக்கிறது.

•••

கர்நாடகாவைப் போலன்றி, தமிழகத்தில் இத்தீர்ப்பிற்கு அரசியல் கட்சிகள் - இயக்கங்கள் - விவசாய சங்கங்கள் மத்தியில் விமர்சனத்துடன் கூடிய ஆதரவும், எதிர்ப்பும் கிடைத்திருக்கிறது.

நடுவர் மன்றத்தில் நடந்த வழக்கில், கர்நாடகம் தமிழகத்திற்குத் தர வேண்டிய நீரை மேட்டூரில்தான் அளவிட வேண்டும் எனத் தமிழகம் கோரியிருந்தது. கர்நாடகம்தான், பில்லிகுண்டலுவை நீர் அளக்கும் இடமாகக் கோரியது. இறுதித் தீர்ப்பு கர்நாடகாவிற்குச் சாதகமாக வந்திருக்கிறது என்பது தீர்ப்பை எதிர்ப்பவர்களின் வாதங்களுள் ஒன்று.

இறுதித் தீர்ப்பில் பில்லிகுண்டலு தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும், திறந்துவிடப்படும் நீரை அங்கு அளவிட்டு அறிவிக்கப் போவது கர்நாடக அரசு கிடையாது; மைய அரசின் நீர் வள கமிசன்தான் நீரை அளவிட்டு அறிவிக்கப் போகிறது. சர்வதேச அளவுகோலின்படி பில்லிகுண்டலுவில் நீர் அளக்கப்படும் எனக் கூறப்படுவதால், மேட்டூரில் நீரை அளந்தபோது தமிழகம் - கர்நாடகாவிற்கு இடையே ஏற்பட்ட முரண்பாடுகளும், குழப்பங்களும் நீக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், முரண்பட்ட இரண்டு கட்சிக்காரர்களிடையே ஏற்படும் மோதலைத் தீர்த்து வைக்க மத்தியஸ்தரை நாட வேண்டும் என்ற நடைமுறைபடி பார்த்தால், பில்லிகுண்டலுவையோ அல்லது இரு மாநிலங்களுக்குமான எல்லைப் பகுதியில் வேறொரு இடத்தையோ தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு இறுதித் தீர்ப்பில் கூறப்பட்டிருப்பதை நியாயமானதாகத்தான் பார்க்க முடியும்.

பில்லிகுண்டலுவுக்கும், மேட்டூருக்கும் இடையே உள்ள தமிழகப் பகுதிகளில் ஆண்டொன்றுக்கு 2,500 கோடி கன அடி நீர் காவிரியில் கிடைப்பதாக தமிழக அரசே நடுவர் மன்றத்திடம் கூறியிருக்கிறது. இந்தப் புள்ளி விவரப்படி பார்த்தால், கர்நாடகம் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கு, தனது மாநில எல்லையான பில்லிகுண்டலுவில் 18,000 கோடி கன அடி நீரைத் திறந்துவிட்டாலே, மேட்டூரில் (18,000 + 2,500 = 20,500 கோடி கன அடி) கணக்கு நேராகி விடும். தற்பொழுது இறுதித் தீர்ப்பின்படி, கர்நாடகம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள 1,000 கோடி கன அடி நீர் போக, 18,200 கோடி கன அடி நீரை தமிழகத்தின் பங்காக பில்லிகுண்டலுவில் திறந்துவிட வேண்டும்.

இடைக்காலத் தீர்ப்பின்படி புதுச்சேரிக்குத் தரவேண்டிய பங்கு போக, தமிழகத்திற்கு மேட்டூரில் 19,900 கோடி கன அடி நீர் "கிடைத்தது" என்றால், தற்பொழுது, புதுச்சேரியின் பங்கு போக, 20,000 கோடி கன அடி நீர் கிடைக்கும்.

இது, இடைக்காலத் தீர்ப்பில் ஒதுக்கப்பட்டதை விடக் கொஞ்சம் அதிகமானது என்ற போதிலும், தமிழகப் பகுதியில் 2,500 கோடி கன அடிக்குக் குறைவாகவே நீர் கிடைத்தால் (தீர்ப்பு வெளிவந்த பிறகு தமிழக அரசு மேட்டூருக்கும் பில்லிகுண்டலுவுக்கும் இடையே 1,700 கோடி கன அடி நீர்தான் கிடைக்கும் எனக் கூறத் தொடங்கியிருக்கிறது) இடைக்காலத் தீர்ப்பைவிடக் குறைவான நீரே கிடைக்கும். எனினும், இடைக்காலத் தீர்ப்பை மட்டுமே அளவுகோலாக வைத்துக் கொண்டு, இறுதித் தீர்ப்பைப் பரிசீலிப்பது குருட்டுத்தனமானது.

காவிரியில் கிடைக்கும் மொத்த நீரில் (74,000 கோடி கன அடி) 20 சதவீதப் பங்கு (கிட்டத்தட்ட 14,300 கோடி கன அடி) கேரளாவின் கபினி, பவானி, பம்பாறு நீர் பிடிப்புப் பகுதியில் இருந்துதான் கிடைக்கிறது. இந்த உண்மையைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் கேரளாவிற்கு 3,000 கோடி கன அடி நீர் இறுதித் தீர்ப்பில் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, கேரளாவிற்கு அநியாயமாக நீர் ஒதுக்கப்பட்டு விட்டதாக இனவாதிகள் புலம்புவதற்கு அடிப்படையே கிடையாது.

1901-இல் தமிழகத்தில் காவிரி பாசனப் பரப்பு 13.45 இலட்சம் ஏக்கராக இருந்தது. இது, 1928-இல் 14.44 இலட்சம் ஏக்கராக அதிகரித்தது. இந்தக் காலக் கட்டத்தில் கையெழுத்தான 1924 ஒப்பந்தத்தின்படி, தமிழகம் மேட்டூர் திட்டத்தின் கீழ் மேலும் 3.2 இலட்சம் ஏக்கர் பாசனப் பரப்பை விரிவாக்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்

## இறுதித்தீர்ப்பை எதிர்ப்பவர்களின் இரட்டை நாக்கு

காவிரி சிக்கலில் மற்றவர்களை விடத் தங்களுக்குத்தான் அதிக அக்கறை இருக்கிறது என்று காட்டிக் கொள்வதற்காகவே, அ.தி.மு.க., பா.ம.க. போன்ற ஓட்டுக்கட்சிகளும்; பழ.நெடுமாறன் போன்ற தமிழினவாதிகளும் ஒருவரை ஒருவர் விஞ்சும் வண்ணம் தீர்ப்பை விமர்சித்து அறிக்கைகள் விடுகின்றனர்; இன்னொரு புறமோ, தீர்ப்பை உடனே அரசிதழில் வெளியிட வேண்டும்; குறைபாடுகளைக் களைய மேல் முறையீடு செய்ய வேண்டும் எனக் கோருவதன் மூலம் இறுதித் தீர்ப்பை மறைமுகமாக ஏற்றுக் கொள்கின்றனர்.

தீர்ப்பின் நகலை எரித்து, "அதி தீவிர தமிழினப் புரட்சியாளர்களாக"த் தங்களைக் காட்டிக் கொண்டுள்ள தமிழ் தேச பொதுவுடைமைக் கட்சி "புதிதாக நடுவர் மன்றம் அமைக்க வேண்டும்" என உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடரக் கோருகிறது. காவிரி சிக்கலை நியாயமான அடிப்படையில் தீர்த்துக் கொள்ளாமல் இழுத்தடிக்க விரும்பும் கன்னட இனவெறியர்களின் சதித்திட்டத்தின் இன்னொரு பக்கம்தான், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியினின் இக்கோரிக்கை. ஏற்கெனவே அமைக்கப்பட்ட நடுவர் மன்றமே, கர்நாடகத்தின் இழுத்தடிப்பால், 16 ஆண்டுகாலம் கழித்து தீர்ப்புச் சொல்லியிருக்கும் நிலையில், புதிய நடுவர் மன்றம் என்ற இந்த அதிதீவிரமான கோரிக்கை, நடைமுறையில் காவிரி சிக்கலை மீண்டும் இழுத்தடித்து தமிழக நலன்களுக்குத் துரோகம் செய்வதாகவே அமையும்.

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாத இக்கட்சியினர், உச்சநீதி மன்றத் தீர்ப்பு வரும் வரை, "பழைய" நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தக் கோருவது இன்னும் வேடிக்கையானது.


படிப்பகம்

www.padippakam.com

டது. ஆனால், தமிழகமோ, 1951-1961 கால கட்டங்களில் நிறை வேற்றப்பட்ட கீழ் பவானி திட்டம், மேட்டூர் கால்வாய் திட்டம், அமராவதி, புள்ளம்பாடி, கட்டளைக் கால்வாய் திட்டம் ஆகியவற்றையும் பயன்படுத்தி, 6.4 இலட்சம் ஏக்கர் அளவிற்கு பாசனப் பரப்பை விரிவாக்கிக் கொண்டது.

''1924 ஒப்பந்தம் இத்திட்டங்களை அனுமதிக்கவில்லை'' என அப்போதைய மைசூர் அரசு இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. ''மேட்டூர் கால்வாய் திட்டம் மேட்டூர் ஒப்பந்தத்தின் கீழ்தான் வருகிறது. புதிய கட்டளைக் கால்வாய், புள்ளம்பாடி கால்வாய் திட்டங்கள் மூலம் விரிவாக்கப்படும் பாசனப்பரப்பிற்கு உபரி நீரைத்தான் தமிழகம் பயன்படுத்தும்; கூடுதல் நீர் கேட்க மாட்டோம்'' என மைய அரசின் திட்டக் கமிசனிடம் உறுதியளித்துத்தான், தமிழக அரசு இத்திட்டங்களை நிறைவேற்றியது. இதன் விளைவாக, 1971-இல் தமிழகத்தில் காவிரிப் பாசனப் பரப்பு 25.30 இலட்சம் ஏக்கராகவும்; 1990-இல் 25.80 இலட்சம் ஏக்கராகவும் அதிகரித்தது;

''மொழி வழி மாநிலங்கள் 1956-இல் ஏற்படுத்தப்பட்ட பிறகு, தமிழகத் திட்டங்களுக்கு கர்நாடகமும், கர்நாடகத் திட்டங்களுக்குத் தமிழகமும் எதிர்ப்புகளைத் தெரிவிக்க ஆரம்பித்தன'' எனக் குறிப்பிடுகிறார், காவிரி காப்புக் குழுவின் அமைப்பாளரான, பூ.அர. குப்புசாமி *(ஆதாரம்: காவிரி: திராவிட இயக்க அரசியல் தலைமையின் தோல்வி, பக்.15)*

காவிரிப் பிரச்சினையின் இந்த அம்சத்தை கணக்கில் எடுத்துக் கொண்டுதான், நடுவர் மன்றம், 1924-க்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட பாசனப் பரப்பு 15.20 இலட்சம் ஏக்கர்; 1924 ஒப்பந்தத்தின்படி அனுமதிக்கப்பட்ட பாசனப் பரப்பு 6.20 இலட்சம் ஏக்கர்; ஒப்பந்தத்திற்கு அப்பால் விரிவாக்கம் செய்யப்பட்டாலும், தகுதியின் அடிப்படையில் அனுமதிக்கப்படும் பரப்பு 2.06 இலட்சம் ஏக்கர்; சிறு பாசனத்தின் கீழ் வரும் பரப்பு 1.25 ஏக்கர் பரப்பு என்ற அடிப்படையில் தமிழகத்தின் பாசனப் பரப்பை 24.71 இலட்சம் ஏக்கர் எனத் தீர்மானித்திருக்கிறது.

எதிர்கால விரிவாக்கத்தையும் கணக்கில் கொண்டு, கர்நாடகாவின் காவிரி பாசனப் பரப்பை 27.28 இலட்சம் ஏக்கராக அனுமதிக்கக் கோரிய கர்நாடகத்தின் பாசனப் பரப்பு, இறுதித் தீர்ப்பில் 18.85 இலட்சம் ஏக்கராகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இறுதித் தீர்ப்பை வரவேற்று கருத்துக் கூறிய வழக்குரைஞர் ஃபாலி எஸ்.நாரிமன்.

தமிழக அரசு, நடுவர் மன்றத்தில் தனக்கு 56,200 கோடி கன அடி நீர் வேண்டும் எனக் கோரியது; கர்நாடகம் தனக்கு 46,500 கோடி கன அடி நீர் வேண்டும் எனக் கோரியது. கேரளாவும், புதுச்சேரியும் தத்தமது மாநிலங்களுக்கு முறையே 9,900 / 900 கோடி கன அடி நீரைக் கோரியிருந்தன. இதன்படி தண்ணீரை ஒதுக்க வேண்டும் என்றால் காவிரியில் 1,13,500 கோடி கன அடி நீர் கிடைக்க வேண்டும். ஆனால், காவிரியிலோ, 50 சதவீத நம்பகத் தன்மை அடிப்படையில் (இரண்டு ஆண்டுகளில் ஒரு ஆண்டு எதிர்பார்க்கப்படும் தண்ணீர் கிடைக்கும் என்ற அளவுகோலின்படி) 74,000காடி கன அடி நீர்தான் கிடைக்கிறது. 75 சதவீத நம்பகத்தன்மை அடிப்படையில் (நான்கு ஆண்டுகளில் மூன்று ஆண்டுகள் எதிர்பார்க்கப்படும் தண்ணீர் கிடைக்கும் என்ற அளவுகோலின்படி) 67,100 கோடி கன அடி நீர்தான் கிடைக்கும்.

''ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு கிடைக்கின்ற அனுபவத்தைக் கொண்டு, உபரி நீரை (ஒப்பந்தம் எதிர்பார்த்ததை விடக் கூடுதலாக வரும் நீரை) எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்று மறு ஆய்வு செய்ய வேண்டும்'' என 1924 ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், 1970-களிலேயே காவிரி நதி நீரில் 92 சதவீத நீர் பயன்பாட்டுக்கு வந்துவிட்டதால், உபரி நீர் என்ற பேச்சுக்கே வழி இல்லாமல் போய்விட்டது. இதனால் 1924 ஒப்பந்தத்தில் கூறியபடி மறுஆய்வு செய்யும் வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது.

காவிரி நதி நீரைப் பயன்படுத்தும் மாநிலங்களின் உரிமையை நிலைநாட்டும் அதேசமயம், மாறியுள்ள புதிய சூழ்நிலையில், பற்றாக்குறையுள்ள நதி நீரை, அதைப் பயன்படுத்தும் மாநிலங்களுக்கு இடையே எப்படி நியாயமாகப் பகிர்ந்து கொள்வது என்பதுதான் காவிரி சிக்கலின் சாரம். இந்த அடிப்படையில் இருந்துதான் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பைப் பரிசீலிக்க வேண்டும்.

● ''காவிரி தங்களுக்கு மட்டுமே சொந்தம்'' என்று கூப்பாடு போடுவதன் மூலம், கர்நாடகா காவிரியின் மீதான தமிழகத்தின் உரிமையை அங்கீகரிக்க மறுத்து வந்தது. இறுதித் தீர்ப்பு, ''காவிரியை, அதனைப் பயன்படுத்தும் எந்தவொரு மாநிலமும் தனியுரிமை கொண்டாட முடியாது'' எனக் கூறியிருப்பதன் மூலம், கன்னட இன வெறிக்கு ஆப்பறைந்திருக்கிறது.

● ''1892 மற்றும் 1924 ஒப்பந்தங்கள் இரண்டுமே செல்லுபடியாகாது; அவை எங்களைக் கட்டுப்படுத்தாது'' என்று கர்நாடகமும், கேரளமும் கூறி வந்ததை, இறுதித் தீர்ப்பு நிராகரித்து விட்டது. அதேசமயம், புதிய நிலைமைகளுக்கு ஏற்ப அந்த ஒப்பந்தங்களை மீளாய்வு செய்து, இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால், அந்த ஒப்பந்தங்களின் இடத்தை இந்தத் தீர்ப்பு எடுத்துக் கொண்டு விட்டதாகக் கூறப்பட்டுள்ளதை நியாயமான சட்டபூர்வ நடவடிக்கையாகத்தான் பார்க்க வேண்டும்.

● ''தனக்குப் போக எஞ்சியதுதான் தமிழகத்திற்கு'' என்பதுதான் காவிரி நீரைப் பகிர்ந்து கொள்வதில் கர்நாடகாவின் நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது. கர்நாடகம், தமிழகத்திற்குத் தர வேண்டிய பங்கை, மாதாந்திர தவணை அடிப்படையில் திறந்துவிட வேண்டும் என இறுதித் தீர்ப்பில் கூறியிருப்பதன் மூலம், கர்நாடகத்தின் அடாவடித்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

● கர்நாடகம், காவிரியில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தினாலும், அதனால் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பங்கு நீர் குறைந்துவிடக் கூடாது என்பது தீர்ப்பில் மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

● குறுவைப் பயிர் சாகுபடிக்கு 10,100 கோடி கன அடி நீர் தேவைப்படும் எனக் கூறப்படுகிறது. இறுதித் தீர்ப்பில், குறுவை சாகுபடி நடக்கும் ஜூன் தொடங்கி செப்டம்பர் மாதத்திற்குள் 13,400 கோடி கன அடி நீர் திறந்துவிட வேண்டும்; இந்த நீரை அந்தந்த மாதங்



படிப்பகம்

களில் ஒதுக்கப்பட்ட அளவின்படி, ஒவ்வொரு மாதமும் 10 தவணைகளில் திறந்துவிட வேண்டும் எனக் கூறப்பட்டிருப்பதால், குறுவைப் பயிர் சாகுபடி சூதாட்டமாக மாறிவிடாமல், உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

● தமிழக அரசு காவிரிப் பாசன வாய்க்கால்களில் தூர் வாரியதற்கு மேல், எந்தவிதமான நவீன மேம்பட்ட வசதிகளையும் செய்து கொடுத்ததில்லை. காவிரி வழக்கு நடப்பதைக் காட்டியே, காவிரிப் பாசன வாய்க்கால்களையும், ஏரிகளையும் நவீனப்படுத்த மறுத்து வந்தது. வடகிழக்குப் பருவ மழை பெய்யும் காலங்களில் வெள்ளத்தால் ஏரிகள் - கண்மாய்கள் உடைத்துக் கொண்டு, பயிர்களும், நிலமும் சேதாரமாவதைத் தடுப்பது மட்டுமல்ல; அந்த உபரி நீரைத் தேக்கி வைத்துப் பயன்படுத்தவும் நவீனமயம் அவசியம்.

காவிரியில் தண்ணீர் விடாமல் முரண்டு பிடிப்பதற்கு வேண்டுமானால், கர்நாடகாவைக் குற்றம் சொல்லலாம்; ஆனால், வெள்ளக் காலங்களில் டெல்டா விவசாயிகள் நட்டமடைவதற்கு தமிழக அரசைத் தவிர, வேறு யாரைக் குற்றம் சொல்ல முடியும்? காவிரியில் தண்ணீர் இல்லாமல் தரிசாகப் போடப்படும் நிலங்களின் பரப்பைவிட, வெள்ளத்தால் நாசமாகும் வயல் பரப்பு அதிகம்.

இறுதித் தீர்ப்பின் மூலம் காவிரிப் பாசன வாய்க்கால்களை நவீனப்படுத்துவதற்கு இருந்துவந்த "தடை" நீங்கிவிட்டது. இந்த நவீனமயம் காவிரிப் பாசன விவசாயிகளின் நலனுக்காக மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர, உலக வங்கியின் உத்தரவுப்படி தண்ணீர் வியாபாரிகளின் இலாபத்திற்காக மேற்கொள்ளப்படக் கூடாது என்பதை தமிழக அரசு உத்தரவாதப்படுத்த வேண்டும்.

● தீர்ப்பில், காவிரி டெல்டா பகுதியில் கிடைக்கும் நிலத்தடி நீரையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும் என்ற கர்நாடகத்தின் வாதம் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

● கேரளத்தில் போதிய அடிக்கட்டுமான வசதிகள் இல்லாததால் அம்மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 3,000 கோடி கனஅடி நீரையும் அம்மாநிலம் பயன்படுத்த தற்பொழுது வாய்ப்பு இல்லை. எனவே, கேரளா பயன்படுத்த முடியாத நீரைத் தனக்கு ஒதுக்க வேண்டும் என்று கர்நாடகம் கோரியது. இறுதித் தீர்ப்பில் கர்நாடகத்தின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, அந்த நீர் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தமிழகத்திற்குத் தற்காலிகமாக 2,000 முதல் 2,500 கோடி கன அடி நீர் கூடுதலாகக் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.





இறுதித் தீர்ப்பைக் கண்டிக்கும் சாக்கில் கர்நாடக போலீசின் பாதுகாப்போடு, தமிழக எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து ஆர்ப்பாட்டம் நடத்தும் கன்னட ஜாக்குருதி வேதிகா அமைப்பினர் (மேலே); அதற்கு எதிராகக் கர்நாடக எல்லைக்குள் நுழைந்து, தமிழினவாதிகளால் நடத்தப்பட்ட ஊர்வலம்.

● மேல்மடை மாநிலமான கேரளா, கீழ்மடை மாநிலங்களான கர்நாடகமும், தமிழகமும் பாதிக்கப்படும் வகையில் எந்தத் திட்டத்தையும் நடைமுறைபடுத்தக் கூடாது என்பது சுட்டிக் காட்டப்பட்டு, கேரளா அனுமதிக்குமாறு கோரியிருந்த மூன்று திட்டங்களை நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பில் நிராகரித்து விட்டது.

- இவை போன்ற சாதகமான அம்சங்கள் ஒருபுறமிருந்தாலும், இறுதித் தீர்ப்பில் குறைபாடுகளும், குழப்பங்களும் காணப்படுகின்றன.

காவிரியில் கிடைக்கும் நீர் 50 சதவீத நம்பகத் தன்மை அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டிருப்பதால், இரண்டு வருடங்களில் ஒரு ஆண்டு எதிர்பார்க்கப்படும் தண்ணீர் கிடைக்கும் எனக் கூற முடியாது. எனவே, பற்றாக்குறையையும் எப்படி பகிர்ந்து கொள்வது என்பதை உடனடியாகவே தீர்மானிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. தமிழகத்தில் பெய்யும் வடகிழக்குப் பருவமழை மட்டும் பொய்த்தால் எப்படி பகிர்ந்து கொள்வது? கர்நாடகா மற்றும் கேரளாவில் பெய்யும் தென்மேற்குப் பருவ மழை பொய்த்தால் எப்படி பகிர்ந்து கொள்வது? இரண்டு பருவ மழைகளும் பொய்த்தால் எப்படி பகிர்ந்து கொள்வது என்பது பற்றி தீர்மானிக்காமல், பற்றாக்குறை வரும்பொழுது ஒதுக்கப்பட்ட

பங்கின்படி பிரித்துக் கொள்ள வேண்டும் என பொத்தாம் பொதுவான சூத்திரத்தைச் சொல்லிவிட்டு, இறுதித் தீர்ப்பு நழுவிக் கொள்கிறது.

காவிரியில் கிடைக்கும் மொத்த நீரில் இருந்து, சுற்றுப்புறச் சூழலுக்காக ஒதுக்கப்பட்ட 1,000 கோடி கன அடி நீரை கழித்த பிறகுதான், மாநிலங்களுக்கிடையே தண்ணீர் பங்கு பிரிக்கப்பட்டிருப்பதாக இறுதித் தீர்ப்பு கூறுகிறது. எனினும், மொத்த நீரில் இருந்து ஏற்கெனவே கழிக்கப்பட்ட 1,000 கோடி கன அடி நீரை, கர்நாடகம் தமிழகத்திற்குத் தரவேண்டிய நீரில் இருந்து மீண்டும் கழித்திருப்பதன் மூலம், அந்த 1,000 கோடி கன அடி நீரை கர்நாடகாவே சேமித்துக் கொள்ளும் வாய்ப்பை இறுதித் தீர்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

மேலும், கேரளாவிற்குத் தமிழக அணைகளில் இருந்து கொடுக்க வேண்டிய 9,000 கோடி கன அடி நீரும்; கடலில் கலக்கும் 4,000 கோடி கன அடி நீரும் தமிழகத்தின் பங்கில் இருந்து தான் கழிக்கப்படும் என்றால், 41,900 கோடி கன அடி நீரை விடக் குறைவான பங்கே தமிழகத்திற்குக் கிடைக்கும்.

நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை முற்றிலுமாக நிராகரித்திருக்கும் கர்நாடகம், ''பேச்சு வார்த்தை'' என்ற மோசடித்தனத்தை மீண்டும் அரங்கேற்றத் திட்டம் போடுகிறது. இந்த நச்சுச் சூழலுக்குள் இப்போது மட்டுமல்ல; எதிர்காலத்திலும் தமிழகம் சிக்கிக் கொள்ளக் கூடாது.

இறுதித் தீர்ப்பில் தமிழகத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தும் அம்சங்களை நீக்கக் கோரி, நடுவர் மன்றத்தில் மேல் முறையீடு செய்யப் போவதாகத் தமிழக அரசு முடிவெடுத்திருக்கிறது. இந்த மேல் முறையீட்டு வழக்கின் தீர்ப்பை காலந்தாழ்த்தாமல் வழங்கக் கோர வேண்டும். அதுவரை, நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றவாறு, அதனை உடனடியாக அரசிதழில் வெளியிட வேண்டும்; இறுதித் தீர்ப்பில் கூறியபடி, இத்தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கு சுய அதிகாரம் படைத்த கமிட்டிகள் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் எனக் கோரித் தமிழக மக்கள் போராடுவதன் மூலம் மட்டுமே, இறுதித் தீர்ப்பில் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கும் சாதகமான அம்சங்களைத் தக்க வைக்க முடியும்; பாதகமான அம்சங்களை நீக்கவும் முடியும்.

• ரஹீம்

## டாடா – கோரஸ் இணைவு:

# உலகமயத்தின்கீழ் தரகு முதலாளிகளின் புதிய பரிமாணம்

"இந்தியா உண்மையில் ஒளிர்கிறது; உறங்கிக் கிடந்த இந்தியா என்ற புலி கம்பீரமாக எழுந்து நின்று பீடு நடை போடத் தொடங்கி விட்டது. உலக அரங்கில் இந்தியாவின் பெருமையும் கௌரவமும் மேலும் ஒருபடி முன்னேறியுள்ளது. வெள்ளைக்கார காலனியாதிக்கக் கம்பெனிகளிடம் அடிமைப்பட்டிருந்த இந்திய நாடு, அந்த அடிமைத்தளைகளை விலக்கி, வெள்ளைக்கார நிறுவனத்தையே விலைக்கு வாங்கி பதிலடி கொடுத்துள்ளது!''

கடந்த பிப்ரவரி மாதத்தில், இந்தியத் தரகு பெருமுதலாளித்துவ நிறுவனமான டாடா நிறுவனம், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ''கோரஸ்'' என்ற எஃகு உற்பத்தி நிறுவனத்தை 54,000 கோடி ரூபாய் கொடுத்து ஏலம் எடுத்துக் கைப்பற்றியுள்ளதைத் தொடர்ந்து, இந்திய ஆளும் வர்க்கமும் ஆட்சியாளர்களும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் இப்படி ஆனந்தக் கூத்தாடுகின்றனர்.

''இது மகத்தான சாதனை; நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் இந்தியத் தொழிலதிபர்களின் தன்னம்பிக்கை - தைரியத்தையும் இந்த நிகழ்ச்சி உலக அரங்கில் நிரூபித்துக் காட்டியுள்ளது. இது தொடக்கம்; இது தொடரும்'' என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் அட்டைப்படக் கட்டுரைகளை வெளியிட்டு ஆரவாரத்துடன் குதூகலிக்கின்றன.

கோரஸ் நிறுவனம், ஆண்டொன்றுக்கு 180 லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஐரோப்பா கண்டத்தின் மிகப் பெரும் ஏகபோக நிறுவனம். இந்நிறுவனத்தைக் கைப்பற்றியதன் மூலம் டாடா எஃகு நிறுவனமானது, உலகில் அதிகமாக எஃகு உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் பட்டியலில் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது. பல்லாயிரம் கோடி ரூபாய் பரிமாற்றம், ஏறத்தாழ 40,000 தொழிலாளர்கள் என பிரம்மாண்டம்; அதைவிட ஏழைநாட்டின் எஃகு நிறுவனம் ஏகாதிபத்திய நிறுவனத்தைக் கைப்பற்றிய அதிசயம் என பூரித்துப் புளகாங்கிதமடைகின்றன, முதலாளித்துவப் பத்திரிகைகள்.

இங்கிலாந்து நாட்டின் அரசுத்துறை நிறுவனமான ''பிரிட்டிஷ் ஸ்டீல்'' நிறுவனமும் டச்சு நாட்டு எஃகு நிறுவனமும் இணைந்து 1991-ஆம் ஆண்டில் கோரஸ் எஃகு நிறுவனம் உருவாகியது. இது ஏகாதிபத்திய உலகிற்கே உரித்தான சர்வதேச தொழில் கூட்டின் ஓர் அங்கமாகும். கடந்த 15 ஆண்டுகளில் இதுபோல பல ஏகபோக நிறுவனங்கள் கூட்டுச் சேர்ந்து மூலதனத்தையும் உற்பத்தியையும் ஒன்று குவித்துப் பன்னாட்டு ஏகபோக தொழிற்கழகங்களாக வளர்ந்து உலகச் சந்தையைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

மிகப் பிரம்மாண்டமான அளவில் மூலதனத்தை ஒன்று குவித்து உலகச் சந்தையில் போட்டியிடும் இத்தகைய ஏகபோக நிறுவனங்கள், பொதுமக்களிடம் பங்குகளை விற்று மூலதனத்தைத் திரட்டுகின்றன. இதனாலேயே பல தொழில் நிறுவனங்களில் சிறு முதலீட்டாளர்களின் பங்குகள் மிக அதிகமாகவும், அந்நிறுவனத்தை நிர்வாகம் செய்யும் முதலாளிகளின் பங்குகள் குறைவாகவும் இருக்கின்றன. இத்தகைய நிறுவனங்களின் பெரும்பாலான பங்குகளை யார் வேண்டுமானாலும், அப்பங்குகளை வைத்துள்ளோரிடமிருந்து ஏலத்துக்கு வாங்க முடியும். ஒரு நிறுவனத்தின் பெரும்பான்மை பங்குகளை ஒருவர் வாங்கி, அதன்பிறகு மொத்த நிறுவனத்தையே வாங்கி விடலாம்.

இப்படித்தான் கோரஸ் நிறுவனத்தை டாடா நிறுவனமும் கைப்பற்றியுள்ளது. கோரஸ் நிறுவனத்தில், அதை நிர்வகிக்கும் ஏகபோக முதலாளிகளின் பங்கு 1 சதவீதத்துக்கும் கீழானதாக இருந்தது. இதனால் டாடா நிறுவனம் கோரஸ் நிறுவன நிர்வாகத்தின் பங்குகளையும் இதர பங்குதாரர்களின் பங்குகளையும் ஏலத்தில் வாங்க முயற்சித்தது. ஏறத்தாழ 5 மாதங்களுக்கு முன்பு, கோரஸ் நிறுவனப் பங்குதாரர்களிடமி

www.padippakam.com

ருந்து ஏலத்தில் பங்குகளை வாங்குவதற்கான விண்ணப்பமும் கொடுத்தது.

ஏலத்தில், டாடா அறிவித்த விலைக்கு மேலாக அதிகம் கொடுப்பதாக தென்னமெரிக்கக் கண்டத்திலுள்ள ஏழை நாடான பிரேசிலைச் சேர்ந்த சி.எஸ்.என் என்ற எஃகு நிறுவனம், சில ஏகாதிபத்திய வங்கிகளோடு கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டது. டாடா மற்றும் சி.எஸ்.என். நிறுவனங்களின் போட்டா போட்டியில் கோரஸ் நிறுவனப் பங்குகளின் விலைகள் உயர்ந்து கொண்டே போயின. இறுதியில், இங்கிலாந்து அரசின் கம்பெனி ஏல அமைப்புச் சட்டப்படி - ஒரே நாளில் 9 சுற்று ஏல முறைப்படி - கடைசிச் சுற்றில் யார் அதிக விலை கொடுக்கிறார்களோ அவர்களுக்கே கம்பெனி உடைமையாகும் என முடிவாகியது. அதன்படி; சி.எஸ்.என் நிறுவனத்தைவிட, அதிக விலை கொடுத்து கடைசிச் சுற்றில் டாடா நிறுவனம் கோரஸ் நிறுவனத்தைக் கைப்பற்றியுள்ளது. இவ்வளவு விலை கொடுத்து வாங்க டாடா நிறுவனத்துக்குப் போதிய நிதியில்லாத நிலையில், சர்வதேச நிதிமூலதன வங்கிகளான ஏ.பி.என். அம்ரோ வங்கி மற்றும் ஜெர்மானிய வங்கி ஆகியவற்றோடு கூட்டுச் சேர்ந்து டாடா நிறுவனம் இந்தக் கைப்பற்றுதலைச் சாதிக்க முடிந்துள்ளது. இல்லையேல் கோரஸ் நிறுவனத்தை பிரேசில் நாட்டின் சி.எஸ்.என் நிறுவனம் கைப்பற்றியிருக்கும்.



கூட்டிணைவைக் கொண்டாடும் டாடா-கோரஸ் நிறுவனங்களின் முதலாளிகளும் நிர்வாகிகளும்.

மூலதனம் உலகமயமாகியிருப்பதும், மூலதன ஒன்று குவிப்பை அடிப்படையாகக் கொண்ட தேசங் கடந்த தொழில் கழகங்களும் நிதி மூலதன வங்கிகளும் புதிய ஏகபோகங்களாக வளர்ந்திருப்பதும் ஏகாதிபத்திய சகாப்தத்தின் புதிய கட்டத்தை உணர்த்துகின்றன. இதன்படியே, பல்வேறு நாடுகளில் தொழிற்கூட்டுகளும், கைப்பற்றுதல்களும் மறுகூட்டுகளும் போட்டா போட்டிகளும் வேகமாக நடக்கின்றன. இவையெல்லாம் ஏகாதிபத்திய நாடுகளில்தான் நடக்கும்; ஏழை நாடுகளின் தரகுப் பெருமுதலாளிகள் அத்தகைய போட்டா போட்டிகளில் ஈடுபடவே மாட்டார்கள் என்பதல்ல. இந்தியாவின் டாடாவும் பிர்லாவும் ரிலையன்சும் இத்தகைய போட்டா போட்டிகளில் ஏற்கெனவே இறங்கியுள்ளதோடு, வெளிநாடுகளில் முதலீடு செய்யும் அந்நாடுகளது பெருந்தொழில் நிறுவனங்களைக் கைப்பற்றவும் செய்துள்ளனர். அதேபோல, ஏழை நாடான பிரேசிலின் சி.எஸ்.என்; தென்கொரியாவின் சாம்சங், ஹூண்டாய், இந்தோனேஷியாவின் சலீம் குழுமம் எனப் பல தேசங் கடந்த தொழிற்கழகங்கள் நிதி மூலதன வங்கிகளின் துணையோடு வெளிநாடுகளில் முதலீடு செய்யும் பெருந் தொழில் நிறுவனங்களைக் கைப்பற்றவும் செய்கின்றன.

இதற்கு முன்பு, இந்தியப் பெருந் தொழில் நிறுவனங்கள் தமது மொத்த சொத்து மதிப்பில் 50% அளவுக்கு மட்டுமே வெளிநாடுகளில் முதலீடு செய்யலாம் என்றும் 10 கோடி டாலருக்கு மேல் முதலீடு செய்யக்கூடாது என்றும் இந்திய அரசும் ரிசர்வ் வங்கியும் கட்டுப்பாடுகள் விதித்திருந்தன. கடந்த 2004-ஆம் ஆண்டிலிருந்து, இந்தியப் பெருந்தொழில் நிறுவனங்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் வெளிநாடுகளில் முதலீடு செய்யலாம் என்றும், அந்நியச் செலாவணியை ரிசர்வ் வங்கியின் அனுமதியின்றி பிற உள்நாட்டு - வெளிநாட்டு நிதி மூலதன வங்கிகளிடமிருந்து திரட்டிக் கொள்ளலாம் என்றும் எல்லா கட்டுப்பாடுகளையும் இந்திய ரிசர்வ் வங்கி தளர்த்தியுள்ளது. மேலும் இந்தியாவில் உள்ள ஒரு பெருந்தொழில் நிறுவனம், தாம் செய்துவரும் தொழிலுக்குத் தொடர்பேயில்லாத வேறு பிற தொழில்களில், வெளிநாட்டில் முதலீடு செய்யவும், அத்தகைய தொழில் நிறுவனங்களைக் கைப்பற்றிக் கொள்ளவும் இந்திய அரசு தாராள அனுமதி கொடுத்துள்ளது. இந்திய அரசே உலகமயமாக்கலுக்கு ஏற்ப தனது சட்டங்களையும் விதிகளையும் மாற்றித் தகவமைத்துக் கொண்டுள்ள நிலையில், டாடா நிறுவனம் உலகளாவிய போட்டியில் இறங்கி, கோரஸ் நிறுவனத்தைக் கைப்பற்றியதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இத்தகைய நிகழ்வினால் தரகுப் பெருமுதலாளிகளின் அடிப்படைத் தன்மையில் மாற்றங்களும் நிகழ்ந்துவிடவில்லை.

கோரஸ் நிறுவனத்தை டாடா கைப்பற்றியது மட்டுமல்ல; கடந்த ஐந்தாண்டுகளில் டாடா நிறுவனம், வெளிநாட்டு நிறுவனங்கள் பலவற்றைக் கைப்பற்றியுள்ளது. பிரிட்டனின் டெட்லி டீ நிறுவனம், அமெரிக்காவின் எனர்ஜி பிராண்ட்ஸ், சிங்கப்பூரின் நாட்ஸ்டீல், தாய்லாந்தின் மில்லினியம் ஸ்டீல், தென்கொரிய டேவூ மோட்டார் நிறுவனத்தின் கனரக வாகனப் பிரிவு என அடுத்தடுத்து பல்லாயிரம் கோடி மதிப்பில் பல கைப்பற்றுதல்களை டாடா நிறுவனம் செய்துள்ளது. அதே போல பிர்லாவின் ஹிண்டால்கோ எனும் அலுமினிய உற்பத்தி நிறுவனம் நோவலிஸ் நிறுவனத்தையும், சுஸ்லான் நிறுவனம் ஆர்.இ.பவர்சிஸ்டத்தையும், வீடியோகான் நிறுவனம் தென்கொரியாவின் டேவூ எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தையும் கைப்பற்றுவதற்கான பேரங்கள் முடிந்துள்ளன. டாடா கன்சல்டன்சி, இன்ஃபோசிஸ், விப்ரோ, சுஸ்லான், ரான்பாக்சி, ஹிண்டால்கோ, ரிலையன்ஸ், பாரத் ஃபோர்ஜ், மகிந்திரா முதலான 21 இந்தியத் தரகு பெருமுதலாளித்துவ நிறுவனங்கள், அமெரிக்க-ஐரோப்பிய நிறுவனங்களைக் கைப்பற்ற பேரங்கள் - பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகின்றன.

சிறிய மீன் பெரிய மீனை விழுங்க முடியுமா? இந்தியப் பெருந்தொழில் நிறுவனங்கள் ஏகாதிபத்திய நாடுகளது பெருந்தொழில் நிறுவனங்களைக் கைப்பற்ற முடியுமா? இது எப்படி சாத்தியமாயிற்று? "இன்றைய உலகமய சூழலில் மூலதனமானது உலக நாடுகளிடையே குறுக்கும் நெடுக்குமாக தாறு


படிப்பகம்

மாறாகப் பாய்கிறது. இதைப் பயன் படுத்திக் கொண்டு எந்தவொரு சிறிய நிறுவனமும் பெரிய நிறுவனத்தைக் கைப்பற்ற முடியும். மேலும், மூலதன அழுத்தம் கொண்ட பல பெருந்தொழில் நிறுவனங்களில் ஒப்பீட்டளவில் லாபம் குறைவாகவும் அதிக செலவு பிடிப்பதாகவும் உள்ளதால், மேற்கத்திய நாடுகள் இத்தகைய நிறுவனங்களைக் கைப்பற்ற பொதுவில் போட்டி போடுவதில்லை. அந்நாடுகள் கணினி, செயற்கை இழை உள்ளிட்ட இரசாயனத்துறை மற்றும் நிதி-மூலதனம், தகவல்-தொழில்நுட்ப சேவைத் துறைகளிலேயே கவனம் செலுத்துகின்றன. அனைத்துலக வங்கிகள் மூலம் மூலதன வாய்ப்பும், குறைந்த செலவில் மனித ஆற்றலும் மூலாதாரங்களும் கிடைப்பதால் இந்திய நிறுவனங்கள் பிற வெளிநாட்டு நிறுவனங்களைக் கையகப்படுத்துவதில் போட்டி போட முடிகிறது'' என்கிறார் சுஸ்லான் நிறுவனத் தலைவரான துளசி டாண்டி.

அறிவியல் - தொழில்நுட்பப் புரட்சியினால் ஏற்பட்டுள்ள பலன்களை அறுவடை செய்து ஆதிக்கம் செலுத்தும் நோக்கில், கொள்ளை இலாபம் தரக்கூடிய சேவைத்துறைகளில் ஏகாதிபத்தியங்கள் மூலதனத்தைக் குவிக்கின்றன. அதேசமயம், ஒப்பீட்டு ரீதியில் சற்றே குறைவான லாபம் தரக்கூடியதும் அதிக அளவில் மனித ஆற்றலைக் கொண்டதுமான கனரகத் தொழில்களை ஏழைநாடுகளது தரகுப் பெருமுதலாளிகள் கைப்பற்றிக் கொள்ள ஏகாதிபத்தியங்கள் தடையோ கட்டுப்பாடோ விதிப்பதில்லை. இதேபோல சுற்றுலா-ஓட்டல்கள், மருத்துவமனைகள், அடிக்கட்டுமான துறை முதலான வற்றில் மூலதனத்தைக் குவித்து தரகுப் பெருமுதலாளிகள் விரிவடையவும், வெளிநாடுகளில் இத்தகைய தொழில்களைத் தொடங்கவும் ஏகாதிபத்தியங்கள் தடையாக நிற்பதில்லை. இந்தியாவின் ஓபராய் நிறுவனம் ஆஸ்திரேலியா வரை ஓட்டல் தொழிலில் விரிவடைந்திருப்பதும், டாக்டர் ரெட்டி குழுமமும் ரான்பாக்சி நிறுவனமும் ஏகாதிபத்திய மருத்துவ நிறுவனங்களைக் கையகப்படுத்தியிருப்பதும், லண்டன் மற்றும் நியூயார்க் பங்குச் சந்தைகளில் பல இந்திய தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதும் இதை நிரூபித்துக் காட்டுகின்றன.

இந்தியாவின் டாடா மட்டுமல்ல; சீனாவின் கணினி தயாரிப்பில் முன்னணி வகிக்கும் ''லெனோவோ'' நிறுவனம் உலகின் மிகப்பெரிய ''ஐ.பி.எம்.'' கணினி நிறுவனத்தையும், ஜெர்மானிய ஏகபோக நிறுவமான சீமென்ஸ்-இன் செல்பேசி தயாரிப்பு நிறுவனத்தை தைவானின் ''பென்கியூ'' நிறுவனமும் கைப்பற்றியுள்ளன. இதன்மூலம் அந்தந்தத் தொழில்துறைகளில் உற்பத்தியை மையப்படுத்திக் குவித்து சந்தையைக் கைப்பற்ற இந்நிறுவனங்கள் போட்டி போடுகின்றன. இதேபோலத்தான், டாடா நிறுவனமும் இந்தியாவின் இரும்புத்தாது சுரங்கங்களை ஐரோப்பிய சந்தையுடன் இணைத்து, 'மலிவான' விலையில் எஃகு உற்பத்தி செய்து, தனக்குப் போட்டியாக உள்ள ''அர்சலர்-மிட்டல்'' எஃகு நிறுவனத்தையும், தென்கொரியாவின் ''போஸ்கோ'' நிறுவனத்தையும், பின்னுக்குத் தள்ளிவிடும் நோக்கத்துடன் கோரஸ் நிறுவனத்தைக் கைப்பற்றியுள்ளது. இதற்காகவே ஒரிசா, ஜார்கண்ட், சட்டிஸ்கர் மாநிலங்களின் இரும்புத்தாது சுரங்கங்களை ஒருங்கிணைக்கவும் மலிவான கச்சாப் பொருளையும் 'மலிவான' மனித ஆற்றலையும் ஒன்று குவித்து மலிவான விலைக்கு எஃகு உற்பத்தி செய்து ஐரோப்பிய சந்தையைக் கைப்பற்றத் துடிக்கிறது.

> **உலகிலேயே மிகப் பெரிய கடன்கார நாடு அமெரிக்காதான் என்று பொருளாதாரப் புள்ளி விவரங்கள் காட்டுவதால், அமெரிக்காவை ஏழை நாடு என்று வரையறுக்க முடியுமா? அரசியலும் பொருளாதாரமும் பின்னிப் பிணைந்துள்ள நிலையில், தரகு முதலாளிகளின் பொருளாதார அம்சத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, அம்முதலாளிகளின் அடிப்படைத் தன்மையை வரையறுக்கக் கிளம்புவது அபத்தமான முடிவுகளுக்கே இட்டுச் செல்லும்.**

இதே உத்தியோடு, தொழிலாளர்களை அற்பக் கூலிக்குக் கசக்கிப் பிழிந்து நுகர்பொருட்களை மலிவான விலைக்கு உற்பத்தி செய்து, அமெரிக்க நுகர்பொருள் சந்தையில் பாதிக்கு மேல் சீனா கைப்பற்றியுள்ளது. இதர ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலும் அது கால் பதித்து வருகிறது. உற்பத்தியையும் மூலதனத்தையும் ஒன்று குவித்து சீனப் பெருமுதலாளிகள் உலகச் சந்தையில் போட்டி போட்டு முன்னேறுவதைக் காட்டி ''இது மாபெரும் பாய்ச்சல்; சீனா வல்லரசாகிவிட்டது'' என்று ஏகாதிபத்தியவாதிகள் துதிபாடினர். அதேபோலத்தான் இப்போது டாடா நிறுவனம், கோரஸ் நிறுவனத்தைக் கைப்பற்றி உலகச் சந்தையில் பேர்ட்டி போடுவதைக் காட்டி இந்தியா உண்மையிலேயே ஒளிர்கிறது என்றும் காலனியாதிக்கவாதிகளுக்குக் கொடுத்த பதிலடி என்றும் இந்திய ஆளும் வர்க்கமும் பத்திரிகைகளும் கூத்தாடுகின்றன. உலகமயமாக்கலின் கீழ் நடக்கும் இந்தப் போட்டாபோட்டியில் நாளை டாடா நிறுவனத்தை வேறொரு நிறுவனம் கைப்பற்றிக் கொண்டு கவிழ்த்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதுதான் ஏகாதிபத்திய - உலகயமாக்க அராஜகத்தின் தவிர்க்கவியலாத விளைவு!

இவற்றையெல்லாம் பூசிமெழுகி விட்டு டாடா நிறுவனம், ஏகாதிபத்திய நிறுவனத்தையே விலைபேசும் அளவுக்கு உயர்ந்து விட்டது என்றும் இது தாராளமய - உலகமய கொள்கைக்குக் கிடைத்த வெற்றி என்றும் பிரமையூட்டி ஆட்சியாளர்களும் பத்திரிகைகளும் நம்பச் சொல்கின்றனர். ஆளும் வர்க்கத்தினர்தான் இப்படி ஆனந்தக் கூத்தாடுகிறார்கள் என்றால், 'புரட்சி' பேசும் போலி கம்யூனிஸ்டுகளும் அவர்களோடு சேர்ந்து கொண்டு கூத்தாடுகின்றனர். சி.பி.எம். கட்சியின் அதிகாரபூர்வ வங்கமொழி நாளேடான ''ஜனசக்தி'', கோரஸ் நிறுவனத்தைக் கைப்பற்றிய டாடாவுக்கு உச்சிமுகர்ந்து வாழ்த்துக்களைத் தெரிவித்து தலையங்கமே தீட்டியுள்ளது. உள்நாட்டில் தொழிலை விரிவுபடுத்துவதோடு, உலக அளவில் விரிவடைந்து டாடா நிறுவனம் வெற்றியைச் சாதிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்து, இதற்காக இந்தியர்கள் பெருமைப்பட வேண்டும் என்கிறது.

ஆளும் வர்க்க அடியாட்களாகச் சீரழிந்துவிட்ட போலி கம்யூனிஸ்டுகள் ஒருபுறமிருக்க, மறுபுறம் தமிழினப் பிழைப்புவாத தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியும் டாடா நிறுவனம் கோரஸ் நிறுவனத்தைக் கையகப்படுத்தியுள்ளதைக் கண்டு பூரித்துப் போகிறது. ''இந்தியப் பெருமுதலாளிகள் உலகமய முதலாளிகளாக மாறிவிட்டதற்கு இன்னுமொரு சான்று இது. ஐரோப்பா உள்ளிட்டு உலகச் சந்தைக்குப் போட்டியிடும் அனைத்திந்திய பெருமுதலாளிகளை இதற்குப் பிறகும் தரகு முதலாளிகள் என்று வரையறுப்பது அறியாமை என்பதையும் டாடா-கோரஸ் இணைவு தெளிவுபடுத்தும்'' என்று அக்கட்சியின் இதழான ''தமிழர் கண்ணோட்ட''த்தில் அக்கட்சி



படிப்பகம்

www.padippakam.com

யின் 'தானைத் தலைவர்'களுள் ஒருவரான கி.வெங்கட்ராமன் தனது அடிமுட்டாள்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டி குதூகலித்துள்ளார். (தமிழர் கண்ணோட்டம், நவம்பர் - 2006)

ஏகாதிபத்தியம், மேல்நிலை வல்லரசு, மறுகாலனியாக்கம், உலகமயமாக்கம் என்பனவற்றைப் பற்றிய அரிச்சுவடி கூடத் தெரியாத திருவாளர் கி.வெ., ''உலகமயத்திற்கு எதிராக இந்திய சுதேசியம் பேசுவதும் ஏகாதிபத்தியத்திற்கு எதிர்நிலையில் இந்தியத்தை வைப்பதும் போலியானவை - போகாத ஊருக்கு வழிகாட்ட முயல்பவை'' என்று வேறு உபதேசமும் செய்கிறார்.

இந்தியப் பெருமுதலாளிகள் தரகு முதலாளிகளாக இல்லாமல், 'உலகமய' முதலாளிகளாகிவிட்டதால், தமது கட்சித் திட்டம் மற்றும் நடைமுறை வேலைகளில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதைப் பற்றி இவர் விளக்க முன்வரவில்லை. மாறாக, மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் இந்தியப் பெருமுதலாளிகளை தரகு முதலாளிகள் என்று வரையறுத்திருப்பது தவறாகி விட்டது என்று நிரூபிக்க முயற்சித்து, அதற்கு டாடா - கோரஸ் இணைவைச் சான்றாகக் காட்டி குதியாட்டம் போடுகிறார்.

''தரகு முதலாளிகள் எனப்படுவோர் அன்னிய வர்த்தக நிறுவனத்தின் உயர்நிலை அதிகாரி அல்லது நிர்வாகியாவர்; இவர்கள் ஏகாதிபத்தியத்தின் ஏஜெண்டுகளாவர்'' என்று சீனப் புரட்சியின் தொடக்கக் காலத்தில் இருந்த தரகு முதலாளிகளின் தன்மைகள், செயல்பாடுகளைத் தோழர்கள் ஸ்டாலினும் மாவோவும் வரையறுத்திருந்தனர். அதை அப்படியே இந்தியப் பெருமுதலாளிகளுக்கு ஒப்பீடு செய்து ''பார்த்தீர்களா, இவர்கள் தரகு முதலாளிகளே இல்லை'' என்பதுதான் இந்த கிணற்றுத்தவளை அறிஞரது வாதம். ஆனால், தரகு முதலாளிகளின் தன்மையிலும் செயல்பாடுகளிலும் தொடர்ந்து நடந்து வந்த பரிணாம வளர்ச்சிக்கேற்ப தோழர்கள் ஸ்டாலினும் மாவோவும் புதிய வரையறுப்புகளை முன்வைத்துள்ளனர். இதை ஹோகான்சி-யின் ''நவசீனப் புரட்சியின் வரலாறு'' என்ற நூல் தெளிவாகவே விளக்குகிறது.

உலகமயமாக்கத்தின் கீழ் தரகு முதலாளிகளின் தன்மையிலும் செயல்பாட்டில் பரிணாம மாற்றங்களே இருக்காது; அவர்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்யவோ ஏகாதிபத்திய நிறுவனங்



**1984-ஆம் ஆண்டில், போபாலில் விஷவாயுப் படுகொலையை நடத்திய அமெரிக்க யூனியன் கார்பைடு நிறுவன வளாகத்தில் படிந்து போயிருக்கும் நச்சுக் கழிவுகளை, ''டோ கெமிக்கல்ஸ்'' என்ற அமெரிக்க நிறுவனத்திற்குப் பதிலாக, டாடா நிறுவனம் அகற்ற ஏற்பாடு நடந்து வருகிறது. தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் ''டோ கெமிக்கல்ஸை''க் காப்பாற்றத் துடிக்கும் டாடாவின் பாதந்தாங்கித்தனத்தைக் கண்டித்து, போபால் நகர உழைக்கும் மக்கள் கடந்த பிப்.4-ஆம் நாளன்று நடத்திய டாடா கொடும்பாவி எரிப்புப் போராட்டம்.**

களைக் கையகப்படுத்தவோ மாட்டார்கள்; அப்படிச் செய்தால் அவர்கள் தரகு முதலாளிகளே அல்ல என்பதுதான் இந்த அறிஞரின் குதர்க்கவாதம். ஏகாதிபத்தியங்கள்தான் ஏழை நாடுகளில் முதலீடு செய்யும்; நிறுவனங்களை இணைக்கும்; அதுபோல இந்தியப் பெருமுதலாளிகளும் செயல்படுவதால் இவர்களும் ஏகாதிபத்திய-உலகமய முதலாளிகள்தான் என்று அரிய கண்டுபிடிப்பை அவிழ்த்துவிட்டுள்ளார் இந்த அறிஞர். கட்டபொம்மனுக்கு வல்லிய மீசை இருந்தது என்றால், மீசை வைத்தவனெல்லாம் கட்டபொம்மன்தான் என்கிறார் இவர். இவரது வாதப்படி இந்தியத் தரகு முதலாளிகள் மட்டுமல்ல; பிரேசில், தென்கொரியா, தைவான், இந்தோனேஷியா முதலான பல ஏழை நாடுகளின் பெருமுதலாளிகளும் இனி தரகு முதலாளிகள் அல்ல; அந்நாடுகளிலும் உலகமயத்துக்கு எதிரான தேச விடுதலைப் புரட்சிகள் சாத்தியமே இல்லை என்பதுதான். இதைக் கேட்டால், இந்த ஏழைநாடுகளின் புரட்சியாளர்களும் போராளிகளும் வாயால் சிரிக்க மாட்டார்கள்.

பொருளாதாரப் புள்ளி விவரங்களைக் காட்டி தரகுப் பெருமுதலாளிகளின் அரசியல் தன்மையை மூடி மறைக்கக் கிளம்பியிருக்கிறார், திருவாளர் கி.வெ. உலகிலேயே மிகப் பெரிய கடன்கார நாடு அமெரிக்காதான் என்று பொருளாதாரப் புள்ளி விவரங்கள் காட்டுவதால், அமெரிக்காவை ஏழை நாடு என்று வரையறுக்க முடியுமா? அரசியலும் பொருளாதாரமும் பின்னிப் பிணைந்துள்ள நிலையில், தரகு முதலாளிகளின் பொருளாதார அம்சத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, அம்முதலாளிகளின் அடிப்படைத் தன்மையை வரையறுக்கக் கிளம்புவது அபத்தமான முடிவுகளுக்கே இட்டுச் செல்லும். தரகு முதலாளிகள் ஏகாதிபத்தியத்தோடு எத்தகைய அரசியல் உறவைக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்காமல், தரகு முதலாளிகள் பொருளாதார ரீதியில் வீங்கி விரிவடைவதைக் காட்டி, இவர்கள் தரகு முதலாளிகளே அல்ல என்று வரையறுப்பதும், அரசியல் வரையறையே இல்லாமல் பொதுவில் ''உலகமய முதலாளிகள்'' என்று குறிப்பிடுவதும் அடிமுட்டாள்தனமானது என்பது சொல்லாமலேயே விளங்கும்.

தரகுப் பெருமுதலாளிகளின் தன்மையிலும் செயல்பாட்டிலும் உலகமயமாக்கம் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதோடு, அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியப்பட்ட போராட்டங்களுக்கும் புதிய வாய்ப்புகளைக் கொடுத்துள்ளது. தேசங்கடந்த முதலீடுகளாலும் கூட்டிணைவு - கையகப்படுத்தல்களாலும் உற்பத்தியும் உழைப்புப் பிரிவினையும் சர்வதேசியமயமாகியுள்ளதால், தென்கொரிய ஹூண்டாய் தொழிலாளர்களின் போராட்டம் தமிழக ஹூண்டாய் தொழிலாளர்களின் போராட்டமாக விரிவடையும். டாடா-கோரஸ் நிறுவனத்தின் டச்சு நாட்டுத் தொழிலாளர்களின் போராட்டம் இங்கே ஜாம்ஷெட்பூரில் எதிரொலிக்கும். இப்புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு உலகமயத்திற்கு எதிராகவும், தரகுப் பெருமுதலாளிகளுக்கு எதிராகவும் அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தை ஐக்கியப்படுத்திப் போராடுவதும், போலி கம்யூனிசப் புரட்டல்வாதிகளோடு பல வண்ண குதர்க்கவாதிகள் - சீர்குலைவுவாதிகளை அரசியல்-சித்தாந்த ரீதியில் முறியடிப்பதுமே புரட்சிகர-ஜனநாயக சக்திகளின் இன்றைய கடமையாக உள்ளது.

● பாலன்

www.padippakam.com



## மு.க. - சாய்பாபா சந்திப்பு

# கொலைகார பாபாவை வள்ளலாக்கும் நரித்தனம்

சென்னைக்கு ஆந்திர மாநிலத்தின் கிருஷ்ணா ஆற்றில் இருந்து குடிநீர் கொண்டு வரும் கால்வாயைப் பலப்படுத்த 200 கோடி ரூபாயை வழங்கிய மர்மச் சாமியார் சாய்பாபாவுக்குப் பாராட்டு விழா சென்னையில் இவ்வாண்டு ஜனவரியில் நடந்துள்ளது. இதை முன்னிட்டு சென்னை வந்த சாய்பாபா கோபாலபுரம் சென்று 'பகுத்தறிவு'ப் பாரம்பரியத்தில் வந்த கருணாநிதியைச் சந்தித்தார்.

அங்கே, பகுத்தறிவு திராவிடத்துக்குத் திவசம் நடத்திவிட்ட கருணாநிதியின் முன்பாகவே, அவரின் மனைவி தயாளு அம்மாள் சாய்பாபாவின் காலில் விழுந்து வணங்கினார். இதனை இந்து முன்னணி தலைவர் இராமகோபாலன் வரவேற்றுள்ளார்.

சாய்பாபா தனது ஆன்மீக சக்தியால் தங்களுக்கு மோதிரம் வரவழைத்துத் தந்தார் என்று துரைமுருகனும், தயாநிதி மாறனும் சாய்பாபாவைப் பாராட்டி நடத்தப்பட்ட கூட்டத்தில் கூறியுள்ளனர். அந்த மோதிரத் தங்கத்துக்கு வரி கட்டப்பட்டுள்ளதா? இல்லை கடத்தல் தங்கமா என்று தெரியவில்லை.

தனது அமைச்சர் ஒருவர் தீக்குழி இறங்கியபோது, அதனைக் காட்டுமிராண்டித்தனம் எனச் சரியாக விமர்சித்த கருணாநிதி, இப்போதோ மவுனம் சாதிக்கிறார்.

''பகுத்தறிவு என்பதே மோசடிதான்'' என்றும், ''பகுத்தறிவால் ஒரு பிரயோஜனமும் இல்லை. காரணம் ஜாதகம், ராசி, விதி என எல்லாமே உண்டு'' என்று சொல்கிறார், பெண்ணடிமைத்தனத்தையும் பார்ப்பனியத்தையும் தமிழ் நாடெங்கும் பரப்பிக் கொண்டிருக்கும் ''சோ'' ராமசாமி என்கிற உலக மகா அறிவாளி!

தயாளு அம்மாள் சாய்பாபாவின் காலில் விழுந்த மூடத்தனத்தையோ, துரைமுருகன், தயாநிதி மாறனின் 'ஆன்மீக அற்புத' உளறல்களையோ கருணாநிதி கண்டிக்காமல் இருந்தது அவரின் கொள்கை சமரசத்தைக் காட்டுகிறது. இதன் மூலம் ''சோ'' போன்ற காட்டுமிராண்டிகளும், பகுத்தறிவு என்பதை மோசடி எனச் சொல்லி முற்போக்காளர்கள் அத்தனை பேரையும் அவதூறு செய்ய வாய்ப்பை வழங்கியிருக்கிறார்.

உண்மையிலே கருணாநிதி நேர்மையான பகுத்தறிவாளர்தானா? பெரியாரின் இயக்கமும், தாங்களும் இரட்டைக்குழல் துப்பாக்கிகள் என்று சொல்லிக் கொண்டே 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்று கொள்கைக் கோவணத்தைக் காற்றில் பறக்கவிட்டவர்கள்தான் கருணாநிதியும், அவரின் வழிகாட்டி அண்ணாதுரையும்.

'பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம்; பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்கமாட்டோம்' என்று வெட்கமின்றிப் பேசிய பாரம்பரியத்தை சேர்ந்த கருணாநிதியோ, தனது மணிவிழாவில் அன்பழகன் முன்னிலையில் தனது துணைவியார் ராஜாத்திக்கு தாலியை இரண்டாம் முறையாகக் கட்டி, ஆயுளைக் கூட்டும் மூட நம்பிக்கை சடங்கை செய்தவர்தான்.

மனைவியார் தயாளு சாயிபாபாவின் காலில் விழுகிறார் என்றால், துணைவியார் ராஜாத்தியோ மயிலை முண்டகக்கன்னி அம்மன் கோவிலில் அதிகாலைப் பனியில் உருகி நிற்கிறார்.

''குங்குமம்'' என்று 'மங்களகரமான' பெயரை தன் குடும்பம் நடத்தும் பத்திரிகைக்கு வைத்துக் கொண்டு, ஆண்டுதோறும் பத்திரிகை அலுவலகத்தில் ஆயுதபூசை நடத்துவதும், மூடத்தனங்களை பிரச்சாரம் செய்யும் ஆபாச தொலைக்காட்சித் தொடர்களை தன் குடும்ப தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவதும்தான் கருணாநிதியின் குடும்பம் செய்யும் பகுத்தறிவுப்பணி!

பராசக்தி போன்ற திரைப்படங்கள் மூலம் போலிச் சாமியார்களின் முகத்திரையை அன்று கிழித்தெறிந்த கருணாநிதி, இன்று மாடிவீட்டு ஏழையாகி தென்னகமெங்கும் வியாபார சாம்ராஜ்யம் கட்டி, மத்தியிலும், மாநிலத்திலும் பதவி ருசியை அனுபவிக்கும்போது அதே போலிச் சாமியார்களை ''ஆண்டவனுக்கே ஒப்பானவர்கள்'' என்றும் புகழ ஆரம்பித்துள்ளார்.

பகுத்தறிவாளர்கள் பலரும் கருணாநிதியின் இச்செயலைத் கண்டிக்கத் தொடங்கியதும் மெல்ல முடியாமலும், விழுங்க முடியாமலும் கருணாநிதி தவித்தபோது, சங்கராச்சாரிக்கு வரவேற்புக் கொடுத்து மார்க்சியத்தை அடகு வைத்த போலி கம்யூனிஸ்டுகளின் ''தீக்கதிர்'' நாளேடு அவரின் செயலை நியாயப்படுத்தி ஒரு கட்டுரையை வெளியிட்டது. வேலிக்கு ஓணான் சாட்சி. கருணாநிதிக்கு சி.பி.எம். சாட்சி. போலிகளின் சித்தாந்த குருவாகிய இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு, தனது மனைவியுடன் கோவிலுக்குப் போன முற்போக்கு ஜனநாயகத்தை உதாரணம் காட்டி, கருணாநிதி தன் குடும்பத்துடன் ஜனநாயக உறவு வைத்திருப்பதாய்க் கண்டுபிடித்துக் கட்டுரை தீட்டியுள்ளது, அந்நாளேடு. இப்படியெல்லாம் ''தீக்கதிர்'' தனது 'பகுத்தறிவை'ப் பறைசாற்றி அரசியல் உணர்வூட்டி வருவதால்தான், சி.பி.எம்.மின் தொண்டர்கள் கொத்துக் கொத்தாய் 'மாபெரும் புரட்சிக் கலைஞரின்' கட்சியான தே.மு.தி.க.வில் போய்ச் சேருகின்றனர்.

ஜால்ராவை ஓங்கி ஒலிக்கும் கி.வீரமணியின் ''விடுதலை''யும் ''சாய்பாபா கருணாநிதி வீடு தேடி வந்தது பெரியார் கொள்கைக்கு கிடைத்த வெற்றி'' எனப் பெரியாரின் பகுத்தறிவையும் பலி கொடுத்தது. உடனே கருணாநிதிக்கு தெம்பு வந்துவிட்டது. ''மரியாதையின் பேரில் பெரியவர்

www.padippakam.com

**கருணாநிதியின் மனைவியார் தயாளு சாயிபாபாவின் காலில் விழுகிறார் என்றால், துணைவியார் ராஜாத்தியோ மயிலை முண்டகக் கன்னி அம்மன் கோவிலில் அதிகாலைப் பனியில் உருகி நிற்கிறார். வேலிக்கு ஓணான் சாட்சி. கருணாநிதிக்கு சி.பி.எம். சாட்சி. கருணாநிதி தன் குடும்பத்துடன் ஜனநாயக உறவு வைத்திருப்பதாய்க் கண்டுபிடித்துக் கட்டுரை தீட்டியுள்ளது, சி.பி.எம்.இன் ''தீக்கதிர்'' நாளேடு.**

கள் காலில் விழுவது தவறில்லை. என் மனைவி சாய்பாபாவின் காலில் விழுந்ததும் அவ்வாறே'' என்று இந்த மானங்கெட்ட செயலை நியாயப்படுத்திப் பேசியுள்ளார். 'இனமானப் பேராசிரியர்' கருணாநிதியை விட வயதில் மூத்தவர்தானே! பேராசிரியரின் பிறந்தநாளில் என்றைக்காவது கருணாநிதியோ அல்லது அவரின் குடும்பமோ காலில் விழுந்து வணங்கியது உண்டா என்று கேட்டால், இந்தப் போலி பகுத்தறிவுவாதியிடம் பதில் இருக்காது.

கருணாநிதியின் குடும்பத்தினராலும் துரைமுருகனாலும் நற்சான்றிதழ் வழங்கப்படும் சாய்பாபாவின் யோக்கியதைதான் என்ன?

தந்திரங்கள் பலவற்றைக் கற்றுக் கொண்டு, வாயில் இருந்து லிங்கம் வரவழைப்பது, வெறும் கைகளில் இருந்து மோதிரம், விபூதி வரவழைப்பது போன்றவற்றைச் செய்து, இவற்றை எல்லாம் ஆன்மீக சக்தி என்று மோசடி செய்யும் கோடீசுவர கருப்புப் பணப் பேர்வழிதான் சாய்பாபா. பகுத்தறிவுச் சிந்தனையாளரான டாக்டர் கோவூர் இந்த விளையாட்டுகளை எல்லாம் சாய்பாபா முன்னிலையில் தன்னாலும் செய்து காட்ட முடியும் என்று சவால் விட்டு பாபாவை பொது மேடைக்கு வருமாறு சவால் விட்டு பல ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது. மோசடி பாபா, இந்தச் சவாலுக்கு இன்று வரை முகம் கொடுத்தில்லை.

பாபா, மோதிரங்கள் போன்றவற்றை எவ்வாறு வரவழைக்கிறார் என்பதை ''ரீவைண்டு'' செய்து பார்த்த அவரின் வீடியோ படங்கள் தெளிவுபடுத்தி விட்டன. மக்கள் பாடகரான கத்தார் கூட ''சிவலிங்கம் வரவழைக்கும் பாபா! திண்ண, பூசணிக்காய் வரவச்சு தாதா!'' என்று தனது பாடலில் கேட்கிறார். பி.பி.சி. ஒளிபரப்பின் தமிழாக்க குறுந்தகட்டின் மூலம் மேட்டூர் அணையைச் சேர்ந்த பெரியார் படிப்பகத்தினர் பாபாவின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தி வருகின்றனர்.

இந்த மோசடி மன்னனுக்கு உள்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் பலர் சீடர்களாகி அன்னாரின் ஆசிரமத்தில் வந்து தங்கி இருந்தார்கள். அப்படிப்பட்ட சீடர்களில் ஒருவர் பாபாவின் ஓரினப்புணர்ச்சி அசிங்கங்களை பி.பி.சி. தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் அம்பலப்படுத்தி இருக்கிறார்.

அவரின் மர்ம ரகசியங்களை அம்பலப்படுத்த முயன்ற ஆறு மாணவர்களை பாபாவின் ஆசிரமத்தில் 1993-ஆம் ஆண்டு சுட்டுக் கொன்று விட்டு 'பாபாவைக் கொல்ல முயன்ற அறுவர் சுட்டுக் கொலை' என்று அக்கொலைகளை மூடி மறைத்தனர்.

கிரிமினல் பின்னணி, மோசடித்தனம், ஓரினப்புணர்ச்சி எனும் கழிசடைத்தனம் ஆகியவற்றின் கூட்டுக்கலவையான சாய்பாபாவை ஏன் கருணாநிதி, பகுத்தறிவுவாதத்தை எல்லாம் கை கழுவி விட்டு ஆதரிக்கிறார்?

திடீர்ப் பணக்காரர்களின் கருப்புப் பணத்தை மடைமாற்றி விடுவதற்கென்றே அமிர்தானந்தமாயி, சாய்பாபா போன்ற ஆன்மீகப் பித்தலாட்டக்காரர்கள் உருவாகி உள்ளனர். உண்மையிலேயே சாய்பாபா 200 கோடி நிதி உதவி செய்தார் என்றால், தமிழக அரசே விழா எடுத்திருக்கலாமே? பொதுவாகவே நன்றி சொல்பவர்கள், நன்றிக்கு உரியவர்களைத் தேடிச் சென்று நன்றி சொல்வதுதானே உலக வழக்கம். நன்றிக்குரியவராய் சித்தரிக்கப்படும் பாபாவே நன்றியைப் பெற்றுக் கொள்ள கோபாலபுரம் ஏன் போனார்? ஏன் அந்தச் சந்திப்பின் போது அரசு அதிகாரிகள் உடன் இருக்கவில்லை? என்ற கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில் அரசிடம் இல்லை.

மேலும் மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டிய தன்னுடைய அரசின் பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டு, அதனைச் செய்யச் சொல்லி இம்மோசடிச் சாமியாரிடம் மண்டியிடுகிறார் கருணாநிதி. அரசின் கடமைகளில் ஒன்றுதான் குடிநீர் விநியோகம் எனும் அடிப்படையைப் பற்றி மக்களைச் சிந்திக்க விடாமல், 'மந்திரத்தில் மோதிரம் வரவழைத்த' விசயத்தைப் பேச வைத்துப் பிரச்சினையைத் திசை திருப்புகிறார்.

பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டியது அரசின் கடமையா? கிரிமினல் சாயிபாபாவின் கடமையா? என்று ''தீக்கதிருக்கும்'' சிந்திக்கத் தெரியவில்லை. ''ஒரு மாநிலத்தின் குடிநீர்த் திட்டத்துக்கு உதவிய ஒருவரை - அவர் சந்நியாசியாக இருப்பினும் பாராட்டுவது அரசின் கடமை; அதைத்தான் முதலமைச்சர் கலைஞர் செய்துள்ளார்'' என்று கலைஞருக்கு அது முதுகு சொறிந்துள்ளது.

உலகவங்கி, கோக், பெக்டல் போன்ற பன்னாட்டு பகாசுரக் கம்பெனிகளும் நம் மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதாகக் கூறிக் கொண்டுதான் இங்கு சுத்திகரிப்பு, விநியோகம், விற்பனை ஆகியவற்றில் நுழைகின்றன. இதற்காக 'மார்க்சிஸ்டு' கட்சி உலக வங்கியையும், பன்னாட்டு நிறுவனங்களையும் இனிப் பாராட்டிக் கூட்டம் நடத்தினாலும் ஆச்சரியம் இல்லை.

பார்ப்பனியத்துடன் சமரசம் செய்து கொள்ளாமல் தன் வாழ்வு-வசதிகளை மேம்படுத்திக் கொள்ள முடியாது எனும் உண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட கருணாநிதி போன்ற பிழைப்புவாதிகள், தனக்கு லாபம் கிடைக்கும் போது அடிப்படைக் கொள்கைகளைக் கூட நீர்த்துப் போகச் செய்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் பெரியார், சுயமரியாதை எனும் வார்த்தைகள் எல்லாம், பதவிக்கு வரும் ஏணிகள் மாதிரிதான்.

வீரமணி, தீக்கதிர், பார்ப்பனப் பத்திரிக்கைகள் என எல்லோருமே சாய்பாபா விசயத்தின் பின்னால் இருக்கும் குடிநீர் அரசியலைப் பற்றிப் பேசாமல் அதை ஆத்திக-நாத்திகப் பிரச்சினையாக மாற்றி ஒட்டு மொத்த தமிழகத்தையே ஏமாளிகளாக்குகின்றனர். இயற்கையின் கொடையான குடிநீரை விற்பனைப் பண்டமாக்கும் உலகமயமாக்கலின் சதியில் நம்மை வீழ்த்துகினறனர். நம்மிடம் வரியை மட்டும் வசூலித்துக் கொண்டு நம் தாகத்தைத் தீர்க்கவும், சென்னையில் நாறும் கூவத்தைச் சுத்தம் செய்யவும் சாய்பாபாவிடம் மண்டியிடச் சொல்கிறது மு.க. அரசு.

வரி வசூலிப்பதும், போலீசுக்கு தீனிபோடுவதும் மட்டும் தான் அரசின் வேலை என்றால், அந்த அரசு நீடிக்கத்தான் வேண்டுமா?

● கவி



படிப்பகம்

# தெருநாயின் உயிரைவிட மக்களின் உயிர் மலிவானதா?

பெங்களூரில், கடந்த டிசம்பரில் 8 வயது சிறுமி வெறி பிடித்த தெரு நாய்களால் கடித்துக் கொல்லப்பட்ட செய்தி மனிதாபிமானம் உள்ள எவரையும் கலங்கச் செய்து விடும். காட்டில் வாழும் சிங்கம், புலி போன்ற கொடூர விலங்குகள் கூட்டாகச் சேர்ந்து மான்களை வேட்டையாடுவது போல, இந்தச் சிறுமியை நாய்கள் துரத்தித் துரத்திக் கடித்துக் குதறியுள்ளன. பெயிண்டராக வேலை பார்க்கும் தனது தந்தையை உணவருந்த அழைக்கச் சென்ற சிறுமி ஸ்ரீதேவி இப்படி நாய்களிடம் மாட்டிக் கொண்டதைப் பார்த்த அக்கம் பக்கத்தினர் செய்வதறியாமல் திகைத்தனர். கற்களைத் தூக்கியெறிவதைத் தவிர அவர்களால் அந்த வெறிநாய்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. வெறிபிடித்த நாய்களோ சிறுமியைக் கடித்துக் குதறி கொன்றுவிட்டுத்தான் அகன்றன.

தகவல் தொழில்நுட்பத் துறையின் சொர்க்கமாக விளங்கும் பெங்களூரில், மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள சந்திரா லே-அவுட் பகுதியில் காலை 7.30 மணிக்கு நடந்த இந்தக் கொடூரம் அனைவரையும் பீதியில் உறைய வைத்துள்ளது. சமீபத்தில் கொடைக்கானலிலும் இது போன்றே ஒரு சிறுவனை நாய்கள் கூட்டமாகக் கடித்துக் குதறின. சில மாதங்களுக்கு முன்பு இதே பெங்களூரில் 16 பேரை ஒரு நாய் கடித்தது; மணிப்பூரில் ஒரே சமயத்தில் 18 பேர் நாய் கடித்ததால் "ரேபிஸ்" நோய் தாக்கி உயிரிழந்தனர். சேலத்திலும் ஒரு சிறுவன் நாய் கடித்து உயிரிழந்தான். கோவை-செல்வபுரத்தைச் சேர்ந்த அஜீத் என்ற சிறுவன் தெரு நாய்களால் கடித்து குதறப்பட்டு மாண்டு போனான். கோத்தகிரியைச் சேர்ந்த நாகராஜ் என்ற சிறுவன் தெரு நாய்களால் வேட்டையாடப்பட்டு நீண்ட சிகிச்சைக்குப் பிறகு உயிர் பிழைத்துள்ளான். இப்படி நாய்க் கடியால் மக்கள் அவதியுறும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இவையெல்லாம் பத்திரிக்கைச் செய்திகளில் வந்தவை மட்டுமே; இன்னும் செய்திகளில் வராத எத்தனையோ நாய்க்கடிகளும், அதனால் மக்கள் படும் அவதிகளும் தினமும் நிகழ்ந்துக் கொண்டு தான் இருக்கின்றன. சென்னை, பெங்களூர், ஹைதராபாத் போன்ற பெருநகரங்களில் மாதம் ஒன்றிற்கு மட்டும் குறைந்தது 5000 பேருக்கு அரசு மருத்துவமனைகளில் நாய்கடிக்கு சிகிச்சை தரப்படுகிறது. ஆனால், அரசின் கணக்குகளில் வராத எத்தனையோ நாய்கடிகளும், அரசு மருத்துவமனைகளில் மருந்தின்றி கைவிடப்பட்டவர்களும் ஏராளம்.

நாய்க்கடியில் அடிக்கடி மாட்டிக் கொள்பவர்கள், பெரும்பாலும் உழைக்கும் ஏழை, நடுத்தர மக்களே. இரவு வேலைக்குச் சென்று திரும்பும் உழைப்பாளிகளும், பள்ளிக்கோ, வேலைக்கோ சென்று திரும்பும் அவர்களது குழந்தைகளுமே. இப்படி நாய்களிடம் கடி வாங்கி அல்லற்படுகின்றனர்.

அன்பு மகளைத் தெருநாய்கள் கடித்துக் குதறிக் கொன்ற துயரம் தாளாமல் தவிக்கும் சிறுமி ஸ்ரீதேவியின் பெற்றோர்.



இப்படி நாளுக்கு நாள் பெருகிவரும் நாய்களின் தொல்லை குறித்து அதிகாரிகளிடம் கேட்டபோது, பெங்களூரின் தென் பகுதி சுகாதார அதிகாரி நாகராஜ் என்பவர் "மக்கள் தெருக்களில் குப்பைகளைக் கொட்டுவதும், அனுமதி இல்லாத இறைச்சிக் கடைகள் அதிகரித்துள்ளதும் நாய்கள் பெருகுவதற்குக் காரணமாக உள்ளன" என்கிறார். பெங்களூர் மாநகர கமிஷனர் ஒருபடி மேலே போய், "மக்களுக்கு சமூக அக்கறை வேண்டும், சாலையோரங்களில் கழிவுகளைக் கொட்டுவது கூடாது, சட்ட விரோதமாய் இயங்கும் இறைச்சிக் கடைகளைத் தட்டிக் கேட்க வேண்டும்" என்று பழியை மக்கள் மீதே சுமத்துகின்றார்.

தமிழகத்தில் "சிக்குன் குன்யா" நோய் பரவிய போது மக்களிடம் உள்ள சுகாதாரக் கேட்டினால்தான் நோய் பரவிவிட்டதாகக் கதைவிட்ட அரசின் அதே திமிர்த்தனம் இப்போது நாய்க்கடியினால் மக்கள் அவதிப்படும் போதும் வெளிப்படுகின்றது.

இப்படிப் பெருகி வரும் நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த அரசு ஏன் முன்வரவில்லை? நகரங்களில் பெருகிவரும் தெரு நாய்களுக்குக் காரணம், மக்களா? அல்லது அதைக் கட்டுப்படுத்தத் தவறிய அரசா?

இந்தியாவின் ஒவ்வொரு நகரத்திலும் லட்சக்கணக்கான தெரு நாய்கள் சுற்றித் திரிவதும், அவை கட்டுப்பாடின்றி பல்கிப் பெருகுவதும் மக்களின் நகர வாழ்க்கையை நரக வாழ்க்கையாக மாற்றி வருகின்றன.

முன்பெல்லாம் முனிசிபாலிட்டி நாய் வண்டி வந்து எல்லா தெரு நாய்களையும் பிடித்துச் சுருக்கு மாட்டியோ, நச்சுப் புகை கொடுத்தோ கொன்று விடுவர். ஆனால் இப்போதெல்லாம் அப்படிச் செய்வதில்லையே, ஏன்?

நாய்களின் மேல் அக்கறை கொண்ட "ப்ளூ கிராஸ்" போன்ற மிருகாபிமான தன்னார்வ நிறுவனங்கள் தெரு நாய்களைக் கொல்லாமல் அவற்றுக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்வதன் மூலம் அவற்றைப் பெருக விடாமல்

www.padippakam.com

தடுத்துவிடலாம் என்று அரசிடம் பரிந்துரைத்துச் செயல்படுத்தி வருகின்றன. கொக்கின் தலையில் வெண்ணை வைத்த கதையாக, பிடித்த நாயைக் கொல்லாமல், குடும்ப கட்டுப்பாடு செய்து வரும் இவர்களிடம் பிடிபடாத நாய்களில் ஒன்று, வருடத்திற்கு 10 முதல் 15 குட்டி போடுவதும், குடும்ப கட்டுப்பாடு செய்யப்பட்டு தெருவில் விடப்படும் நாய்கள் மக்களைக் கடிப்பதும் தெரியாதா?

குளிர்சாதனம் செய்யப்பட்ட வண்டியில், ஏதாவதொரு பகுதிக்குச் சென்று நாய்களைப் பிடித்து கு.க. செய்து தெருவில் விட்டுவிட்டுக் கணக்கு காட்டும் இந்தத் தன்னார்வக் குழுக்களிடம் நாய்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்பினை ஒப்படைத்ததை மறைக்கவே அரசும் அதிகாரிகளும் மக்களின் மேல் பழி போடுகின்றனர்.

இப்படி கு.க. செய்யும் முறை பயன்தராது என்று சென்ற நூற்றாண்டிலேயே நிரூபிக்கப்பட்டும், நாய்களின் மேல் உள்ள ''கருணை''க்காக ஏகாதிபத்திய நாடுகள் தங்களுக்கு டாலர் கருணை காட்டுவதால், அதனைக் கைவிட இந்த தன்னார்வக் கூலி நிறுவனங்கள் மறுக்கின்றன. குளுகுளு நட்சத்திர ஓட்டல்களில் கூட்டம் நடத்தித் தங்களது மிருகாபிமானத்தை வெளிப்படுத்தும் இவர்களிடம் மனிதாபிமானத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

இன்றைக்கு உலகமயமாக்கலினால் கிராமங்களில், வேலையும், நிலமும் இழந்து நகரங்களை நோக்கி ஓடிவந்து, ஒருவேளை சோற்றுக்கே அல்லாடி, தினக்கூலியாய், கொத்தடிமையாய் மக்களே கவனிப்பாறின்றி கிடக்கும்போது நாய்களை யார் கவனிப்பது? இப்படி கவனிப்பாரற்று தெருவில் விடப்படும் நாய்கள்தான் பல்கிப் பெருகுகின்றன. இப்படி தெருவுக்கு வரும் ஒரு நாயின் மூன்றாவது தலைமுறை, முழுமையாக மனிதனிடமிருந்து பிரிந்து, அதனுள் இருக்கும் விலங்கின் குணம் அதிகரித்து, வீட்டு விலங்காக இல்லாமல் காட்டு விலங்காக மாறி விடுகின்றது.

இப்படி காட்டு விலங்காகிவிட்ட தெரு நாய்கள் கூட்டமாக வாழ்வதும், காட்டு விலங்குகள் போலவே நடந்து கொள்வதும் இன்றைக்குப் பல நகரங்களில் காண முடியும். சிறுமி ஸ்ரீதேவியைக் கூட்டமாக வேட்டையாடிய நாய்களுக்குக் கண்டிப்பாக வீட்டு விலங்கின் தன்மை இல்லை. சென்னை ஐ.ஐ.டி வளாகத்தின் புதர்க்காடுகளில் உள்ள மான்குட்டிகளை நாய்கள் கூட்டமாகச் செயல்பட்டு வேட்டையாடுவதும் அதிகரித்துள்ளது.

**தாராளமய – உலகமயமாக்கலினால் கிராமங்களில் வேலையும், நிலமும் இழந்து நகரங்களை நோக்கி ஓடிவந்து, ஒருவேளை சோற்றுக்கே அல்லாடி, தினக்கூலியாய், கொத்தடிமையாய் மக்களே கவனிப்பாறின்றி கிடக்கும் போது, நாய்களை யார் கவனிப்பது? இப்படி கவனிப்பாரற்று தெருவில் விடப்படும் நாய்கள்தான் பல்கிப் பெருகி, வீட்டு விலங்காக இல்லாமல் காட்டு விலங்காக மாறி விடுகின்றன.**

காட்டு விலங்குகள் நாட்டிற்குள் வந்து மக்களைத் தொல்லைப்படுத்தினால் அவற்றைக் கொன்றொழிப்பது தானே அரசின் கடமை! அதனை அரசாங்கம் செய்யாமல் இருப்பது ஏன்? அதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது.

உலகிலேயே நாய்க்கடிக்கு - அதன் மூலம் பரவும் 'ரேபிஸ்' என்ற கொடிய நோய்க்கு பெருமளவில் பலியாகும் மக்களைக் கொண்ட நாடு, நமது நாடு. இங்கு ஏற்கெனவே மலிவு விலையில் கிடைத்து வந்த 'ரேபிஸ்' தடுப்பு மருந்தை இதே தன்னார்வக் குழுக்கள் மூலம் நிறுத்தியாகி விட்டது. போதாக் குறைக்குக் காப்புரிமைச் சட்டமும் திருத்தப்பட்டு விட்டது. இனிமேல் நாய்க்கடிக்கு பன்னாட்டு நிறுவனங்கள் தான் மருந்து தரவேண்டும். ஒரு ஊசியின் விலை ரூ. 300 முதல் ரூ. 1000 வரை விற்கப்படுகின்றது.

இப்படி உலகிலேயே 'ரேபிஸ்' மருந்து அதிகமாக விற்பனையாகும் மிகப் பெரிய சந்தையாக இந்தியா உள்ளது. இங்கே நாய்க்கடிகள் குறைந்தால் பன்னாட்டு மருந்து கம்பெனிகளின் லாபம் குறையும். இங்கே நாய்களே இல்லையென்றால் அவர்கள் கடையை மூடிவிட்டுக் கிளம்ப வேண்டியதுதான்!

நமது நாட்டு மக்களின் சாவில் லாபம் பார்க்கக் காத்திருக்கும் வல்லூறுகளாக இந்தப் பன்னாட்டு மருந்துக் கம்பெனிகள் உள்ளன. அந்நிறுவனங்கள் தரும் எச்சில் காசில்தான் இந்தத் தன்னார்வக் குழுக்கள் தங்களது மிருகாபிமானத்தைக் காட்டுகின்றன. இக்குழுக்களை நம்பித்தான் நாய்களுக்கு கு.க. செய்து கட்டுப்படுத்தும் பொறுப்பினை அரசு ஒப்படைத்துள்ளது. நகராட்சிகளின் நிர்வாக ஆணையம் இதற்காக ஐந்து கோடியே எழுபத்தெட்டு லட்ச ரூபாயை ஒதுக்கியுள்ளது. பாலுக்குப் பூனையைக் காவல் வைத்த கதையாக நாட்டு மக்களின் உயிரை இந்தப் பிணம் தின்னிக் கழுகுகளிடம் அடகு வைத்துவிட்டது இந்த அரசு.

மறுகாலனியாக்கம் தோற்றுவித்த பயங்கரத்தால் உழைக்கும் மக்களின் வாழ்க்கை நாய்படாத பாடாகி விட்டது. வீட்டு விலங்குகள் இயல்பு நிலை பிறழ்ந்து காட்டு விலங்குகளாக மாறி மக்களைக் கடித்துக் குதறி அச்சுறுத்துகின்றன. வெறிபிடித்த தெருநாய்களை அடித்துக் கொல்வது மட்டுமல்ல; அதற்கு முன்பாக ஏகாதிபத்திய - மறுகாலனியாக்க வெறி நாய்களையும் அவற்றின் எடுபிடிகளையும் ஒழித்துக் கட்டுவதற்கான பெரும் புரட்சிக்கு உழைக்கும் மக்கள் அணிதிரள வேண்டியுள்ளது.

• அழகு


**"புதிய ஜனநாயகம்" உரிமையாளர்**
**மற்றும் இதர விவரங்கள்**
**படிவம் IV (விதி 8-இன் படி)**

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 2. வெளியிடும் காலம் | : | மாதம் ஒருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | : | இரா. சன்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் | : | இரா. சன்முகராசு, |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 5. ஆசிரியர் பெயர் | : | இரா. சன்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |

இரா. சன்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

1.3.2007

(ஒப்பம்) இரா. சன்முகராசு,
வெளியிடுபவர்.




படிப்பகம்

www.padippakam.com



## சட்டங்கள், ஆணையங்கள், நடுவர்மன்றங்கள், திட்டங்கள்...

# அரசு தோட்டத்தில் விளைந்து கிடக்கும் ஏட்டுச் சுரைக்காய்கள்

பட்டியலின பழங்குடி மக்கள் என்றாலே அவர்களைப் பற்றி நாட்டின் பெரும்பாலானவர்கள், படித்த நகர்ப்புற அறிவாளிகள் கூட ஒரு தவறான கண்ணோட்டம் வைத்திருக்கிறார்கள். அறிவியல் - தொழில்நுட்பம், கல்வி - பண்பாடு, சமூகப் பொருளாதாரம், நாகரிகம் ஆகியவற்றால் தாங்கள் முன்னேறியவர்கள் என்றும், ஆனால் பழங்குடியினர் என்பவர்கள், மனித நாகரிகமே அறியாத பூர்வகுடியினர்; ஆதி முதற்கொண்டு காடுகளிலேயே பிறந்து, வளர்ந்தவர்கள்; வெளியுலக வளர்ச்சியையே காணாது பின்தங்கிப் போயுள்ளவர்கள் என்றும் இவர்கள் கருதுகின்றனர்.

ஆனால், பட்டியலின பழங்குடி மக்களின் உண்மையான வரலாறோ வேறு விதமானது. இன்று அவர்கள் பழங்குடி விவசாயிகளாகவும், காடுகளில் கிடைக்கும் பொருட்களைச் சேகரித்து விற்பவர்களாகவும், வேட்டையாடிகளாகவும் வாழ்ந்தாலும், அநாகரிகமானவர்களாகத் தோன்றினாலும், இந்தப் பழங்குடி மக்களின் மூதாதையர்களும் மற்றபிற மக்களைப் போலவே ஒரு காலத்தில் ஒப்பீட்டு ரீதியில் முன்னேறிய விவசாயமும் பொருளாதாரமும், நாகரிகமும் கொண்டிருந்தவர்கள்தாம். சமவெளிகளில் அவர்களிடமிருந்த பண்படுத்தப்பட்ட விவசாய நிலங்களைப் பறித்துக் கொண்டு காடுகளுக்கும் மலைகளுக்கும் விரட்டப்பட்டவர்கள்தாம்.

காடுகள் மீது அரசு ஏக போக உரிமையை நிறுவிய பிரித்தானிய காலனியவாதிகளுக்கு முன்பிருந்தே, மத்தியகால மன்னர்கள் காலத்திலேயே செழுமையான விவசாயச் சமவெளிகளை நிலப்பிரபுக்கள் கைப்பற்றிக் கொள்வதை அடுத்தடுத்த ஆட்சியாளர்கள் ஊக்குவித்தார்கள்; துணை நின்றார்கள். இதனால் நிரந்தரமான வாழ்விடங்களையும், விவசாய நிலங்களையும் இழந்த மக்கள் மலைச் சரிவுகளிலும், காடுகளிலும் பருவமழைக்கேற்ப பயிர் செய்தும், காடுகளில் கிடைக்கும் தேன், விறகு, சில விதைகள்-பழங்களைச் சேகரித்தும், சிறிய விலங்குகளை வேட்டையாடியும் விற்றுப் பிழைத்தனர். கல்வி வசதியின்றியும், நாகரிக வளர்ச்சி குன்றியும் பின்தங்கியவர்கள் ஆனார்கள்.

வளமான மண்வளமும், மழை வளமுமிக்க மலைச் சரிவுகள் அந்நிய மற்றும் இந்தியத் தரகு முதலாளிகளால் கைப்பற்றப்பட்டு காபி, தேயிலை, ஏலம், இலவங்கம் போன்ற விலை உயர்ந்த பணப்பயிர்களின் பண்ணைகளாக மாற்றப்பட்டன. கட்டுமானப் பொருட்களுக்காகவும், காகித ஆலைகளுக்காகவும் காடுகள் சூறையாடப்பட்டன. நவீன ஆலை உற்பத்திக்கான தாதுப் பொருட்களையும், நிலக்கரிகளையும் வெட்டி எடுப்பதற்காகக் காடுகள் அழிக்கப்பட்டன. இந்தத் தொழில்களுக்கான கூலி அடிமைகளாகப் பழங்குடி மக்கள் மாற்றப்பட்டனர்.

காலனிய காலத்திற்கு முன்பிருந்தே நடந்து வரும் இத்தகைய அநீதிகளுக்கு ''ஈடாக''ப் பழங்குடி மக்கள் பட்டியலினமாக அறிவிக்கப்பட்டு இட ஒதுக்கீடு என்ற சலுகை மட்டும் தரப்பட்டது. ஆனால், அதன் பிறகு ''தேசியப் பொருளாதார வளர்ச்சி'' என்ற பெயரில் காடுகளையும் மலைகளையும் பழங்குடியின மக்களிடமிருந்து பறிப்பது பன்மடங்கு அதிகரித்து விட்டது.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 8.7 சதவீதமானவர்களாகப் பழங்குடி மக்கள் உள்ளனர். இந்த மக்கள் பலநூறு ஆண்டுகளாக வாழும் மலைகளும் காடுகளும் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான-இராட்சத அணைகள் கட்டுவதற்கான ஆறுகள், மிகப் பெரும் அளவிலான தாதுப் பொருட்கள் மற்றும் பிற மூலாதாரங்கள் நிரம்பியிருப்பவை. இம்மக்களை அங்கிருந்து வெளியேற்றினால்தான் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எட்ட முடியும் என்ற விதமாக ஆட்சியாளர்கள் திட்டமிடுகின்றனர்.

ஆந்திரப் பிரதேசத்தின் கோதாவரி மாவட்டங்களில் கட்டப்பட்டு வரும் போலாவரம் இந்திரா சாகர் பல்நோக்கு நீர்ப்பாசன - மின் திட்டம்; விசாகபட்டினம் மாவட்டத்தின் பாக்சைட் - சுரங்கத் திட்டம்; நாகார்ஜுனா அணை அருகே அமையவுள்ள உரேனியம் தாதுப் பொருள் ஆலை; ஒரிசாவின் நியாம்கிரி மலைப் பகுதியில் அமையும் வேதாந்தா அலுமினியம் ஆலைக்காக வெட்டப்படும் உலகிலேயே மிகப் பெரிய பாக்சைட் சுரங்கம் மற்றும் பாஸ்கோ இரும்புத் தாது சுரங்கம் ஆகியவற்றால் ஆந்திரா, சட்டிஸ்கார், மற்றும் ஒரிசா மாநிலங்களில் வாழும் பல இலட்சக்கணக்கான பட்டியலின பழங்குடி மக்கள் தமது வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்படுவர்.

ஏற்கெனவே மத்தியப்பிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் பாயும் நர்மதா மற்றும் அதன் துணை ஆறுகள் மீது சர்தார் சரோவர் அணைத் திட்டத்தின் கீழ் பல சிறிய-பெரிய அணைகள் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளன. இதனால் பல இலட்சம் பழங்குடியின மக்கள் வெளியேற்றப்பட்டு சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்கின்றனர். இந்த வெளியேற்றத்துக்கும், அணைத்திட்டங்களுக்கும் எதிராகவும், மறுவாழ்வு கோரியும் பல ஆண்டு



வனத்தின் மீதான உரிமைகளை மீட்பதற்காக, ஒரிசாவைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் வனேசுவர் நகரில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்).



படிப்பகம்

www.padippakam.com

களாக அவர்கள் போராடுகின்றனர். பழங்குடியின மக்களின் வெளியேற்றம் மற்றும் அணைத் திட்டங்களை நியாயப்படுத்தித் தீர்ப்புகள் வழங்கியுள்ள உச்சநீதி மன்றம் பிறப்பித்துள்ள மறுவாழ்வு ஏற்பாடுகள் எதையுமே செய்யாது மத்திய-மாநில அரசுகள் ஏய்த்து வருகின்றன.

ஆந்திராவில் ''சமா'' என்ற அரசு சாரா தொண்டு நிறுவனம், பழங்குடியின மக்கள் அனுபவித்து வரும் பட்டியலிடப்பட்ட பகுதிகளை, தாதுப் பொருட்கள் வெட்டியெடுப்பதற்காக தனியார்களுக்குக் குத்தகைக்கு விடுவதை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் 12 ஆண்டுகளாக வழக்கு நடத்தித் தடுத்திருக்கிறது. அதன் அமைப்பாளர் ரெட் டுபிர கடர் என்பவர் சொல்கிறார், ''ஒரு பத்து சதவீத வளர்ச்சியைச் சாதிப்பது என்ற பொருளாதாரத் திட்டத்தின் அங்கமாக அணைக்கட்டுகளும் அலுமினிய ஆலைகளும் நிறுவப்பட உள்ளன. பழங்குடியின மக்களின் மொத்த வெளியேற்று விளைவின் வளர்ச்சியை **(Gross displacement product of the tribal people - GDP)** உயர்த்துவதன் மூலம் இதைச் சாதிக்கப் போகிறார்கள்.''

- நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பத்து சதவீதமாக உயர்த்துவது என்ற மன்மோகன் சிங் - மாண்டேக் சிங் அலுவாலியா - சிதம்பரம் ஆகிய உலகவங்கி, ஐ.எம்.எஃப், மற்றும் உலக வர்த்தகக் கழக எடுபிடிகளின் இலக்கை அடைய முயல்வது இப்படிப்பட்டதாகத்தான் இருக்கிறது.

இந்த உண்மையை மூடிமறைக்கும் வகையில் கடந்த டிசம்பர் மாதம் மத்தியில் இந்திய அரசு ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. அதற்குத் தோதாக ''பழங்குடியின மக்கள் மற்றும் பாரம்பரிய வனவாசிகள் (வன உரிமைகள் அங்கீகாரம்) சட்டம் 2006'' என்று அதற்கு நயவஞ்சகமான பெயரும் சூட்டியிருக்கிறது. அதற்கு முன்பாக, இந்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனங்களுக்கான அமைச்சகம் சுற்றுச் சூழல் தாக்கம் பற்றிய ஒரு புதிய மதிப்பீட்டு அறிவிக்கையையும் கடந்த ஆண்டு செப்டம்பரில் வெளியிட்டிருக்கிறது.

அந்தச் சட்டத்தின் பெயரும், அறிவிக்கையின் தோரணையும் தோற்றத்தில் பழங்குடியின மக்களுக்குச் சாதகமானதாகவும் சுற்றுச்சூழலையும் வளங்களையும் பாதுகாப்பதற்கானதாகவும் தெரிகின்றன. ஆனால், உண்மையில் இவை உள்ளடக்கத்தில் பழங்குடி மக்களின் உரிமைகளைப் பறிப்பதாகவும், பன்னாட்டு மற்றும் இந்தியத் தரகுத் தொழில்களின் நலன்களுக்காக சுற்றுச் சூழலை நாசப்படுத்துவதாகவும் வனங்களை அழித்துச் சூறையாடுவதாகவும் உள்ளன. மிகப் பிற்போக்கான, நாட்டை மறுகாலனியாக்கும் ஆளும் அரசியல் கூட்டணிக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி என்றும், அதோடு மதவெறி பாசிச அரசியல் கூட்டணிக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி என்றும் பெயர் வைத்திருப்பதைப் போல பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை அகதிகளாக விரட்டியடிக்கும் சட்டத்திற்குப் ''பழங்குடி மற்றும் பாரம்பரிய வனவாசிகள் - வன உரிமைகள் அங்கீகாரச் சட்டம்'' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.



சத்புரா வனப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டு, இந்திரா நகரில் குடியமர்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் அடிப்படை வசதிகள்கூட இன்றி வாழும் அவலம்.

நாடு முழுவதும் மொத்தம் 500-க்கும் மேற்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நிறுவுவதற்கு மத்திய-மாநில அரசுகள் திட்டமிட்டுள்ளன; அவற்றில் 19 மாநிலங்களில் 237 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஒப்புதல் பெற்றுவிட்டன. 23 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஏற்கெனவே இயங்கத் தொடங்கி விட்டன. 166 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான கொள்கை அறிவிக்கை செய்வதற்காக கொள்கை ரீதியிலான முடிவெடுக்கப்பட்டு விட்டது; 63-க்கான அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு விட்டன. 237 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக 34,861 ஹெக்டேர் நிலங்கள் கையகப் படுத்தப்படுகிறது. இவற்றில் மிகமிகப் பெரும்பாலானவை நடுத்தர, சிறு, குறு விவசாயிகளிடம் இருந்து கைப்பற்றப் படும் விவசாய நிலங்கள். இதனால் கோடிக்கணக்கான விவசாயிகள் நில வெளியேற்றத்துக்குப் பலியாகிறார்கள்.

தற்போது மத்தியிலோ, மாநிலங்களிலோ ஏதாவது ஒரு வகையில் (தனித்தோ, கூட்டணிகளின் மூலமாகவோ) அரசில் பங்கேற்கும் அரசியல் கட்சிகள் இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை முன்னிட்டு விவசாயிகளின் நில வெளியேற்றத்துக்குத் துணை போகும் சக்திகளாகவே உள்ளனர். அதேசமயம் தாங்கள் ஆட்சியில் பங்கேற்காத மாநிலங்களில் உள்ள பா.ஜ.க. போன்ற எதிர்க்கட்சிகள்; மகேந்திரா சிட்டி போன்றவற்றுக்கு துணைநின்ற ஜெயலலிதா; மத்திய அரசில் பங்கேற்று அன்புமணி மூலம் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நிறுவப்படுவதற்குத் துணை நிற்கும் பா.ம.க இராமதாசு; இப்போதைக்கு எதிர்த்தரப்பில் இருக்கும் மமதா பானர்ஜி போன்றவர்கள் விவசாயிகளின் நில வெளியேற்றத்தை எதிர்ப்பதாக நாடகமாடுகிறார்கள்.

ஆனால், இத்தகைய மோசடி, பித்தலாட்டங்கள் எல்லாவற்றிலும் முன்னோடிகளாகத் திகழ்பவர்கள் போலி இடதுசாரிக் கட்சிகள்தாம். அதிலும் குறிப்பாக, போலி மார்க்சிஸ்டு கட்சிதான்! ஏகாதிபத்திய உலகமயமாக்கம் என்பதே 'தேச' விரோத, மக்கள் விரோத, ஏகாதிபத்திய மறுகாலனியாக்க நோக்கம் கொண்டதுதான். ஆனால், ஏகாதிபத்திய உலகமயமாக்கம் மனித முகம் கொண்டதாகவும், ''தேசிய'' சுயசார்பு அடிப்படையிலான தாகவும், தொழில் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கானதாகவும் இருக்க வேண்டும் என்றும் - எவ்வித அடிப்படையும் இல்லாத வெற்று நிபந்தனையோடு உலகமயமாக்கத்தை போலி கம்யூனிஸ்டுகள் ஏற்கின்றனர். அதே போல விவசாயிகளைப் பாதிக்காத


படிப்பகம்

www.padippakam.com

வகையில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் சவடாலடிக்கின்றனர்.

ஆனால், தாங்கள் ஆளும் மாநிலங்களில், குறிப்பாக மேற்கு வங்கத்தில் பன்னாட்டு மற்றும் உள்நாட்டுத் தரகு முதலாளிகளுக்கு செங்கொடியை நடைபாவாடையாக விரித்து வரவேற்கின்றனர். மத்திய அரசின் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கல் நடவடிக்கைகளை வெறும் அறிக்கை - தீர்மானம் போட்டு எதிர்ப்பதாக. நடித்துக் கொண்டே ''தொழில் வளர்ச்சி - வேலை வாய்ப்புப் பெருக்கம் - பொருளாதார முன்னேற்றம்'' என்ற பொய்யான காரணங்களைக் கூறி எல்லா விவகாரங்களிலும் அவற்றை தூக்கிப் பிடிக்கின்றனர்.

மேற்கு வங்கம் சிங்கூர்-நந்திகிராமத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்காக போலீசை ஏவி பாசிச வெறியாட்டம் போட்டு விவசாயிகளிடமிருந்து விவசாய விளைநிலங்களைப் பறித்துக் கொண்டு வெளியேற்றுகிறார்கள், இந்தப் போலி கம்யூனிஸ்டுகள். குறிப்பாக போலி மார்க்சிஸ்டுகள்தாம் மத்திய அரசு இப்போது கொண்டு வந்திருக்கும் பழங்குடியின மக்கள் மற்றும் பாரம்பரிய வனவாசிகள் சட்டமானது (வன உரிமைகள் அங்கீகாரச் சட்டம்), பழங்குடியின மக்கள் காடுகளில் இருந்து வெளியேற்றப்படுவதைத் தடுக்கும்; அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டும் என்று பம்மாத்துச் செய்கிறார்கள்.

''காட்டிலாகா அதிகாரிகளின் ஆணைகள் மூலம் கோலேச்சும் ஆட்சிக்கு இந்தச் சட்டம் சாவுமணியாக இருக்கும்'' என்றும் ''சமூக நீதி உணர்வின் மிகப் பெரிய முன்னெடுப்பாகும்'' என்றும் பிரகாசுகாரத் - சீதாராம் யெச்சூரி கும்பலின் முக்கிய உறுப்பினரான பிருந்தா காரத் கூறுகிறார். 1980-க்குப் பிந்தைய எல்லா வன ஆக்கிரமிப்பாளர்களையும் வெளியேற்ற வேண்டும் என்று உச்சநீதி மன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் அதை ஏற்று எல்லா ''ஆக்கிரமிப்பாளர்களையும்'' வெளியேற்றுவதாக முடிவு செய்து ஓராண்டுக்குள் 1,68,000 குடும்பங்களை வாஜ்பாய் அரசாங்கம் வெளியேற்றி விட்ட நிலையில், 2004-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய முற்போக்கு அரசாங்கம், இடதுசாரி கூட்டணியின் நிர்பந்தம் காரணமாக எல்லா பழங்குடியின மக்கள் வெளியேற்றத்தையும் முடிவுக்குக் கொண்டு வருவதாக குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டது; அதன் விளைவாக வந்ததுதான் இந்த வன உரிமைகள் அங்கீகாரச் சட்டம் என்று பீற்றிக் கொள்கிறார் பிருந்தா காரத்.

''பழங்குடியின மக்களை வெளியேற்றுவதை முடிவுக்குக் கொண்டு வருவது'' என்பதைத் தமது குறைந்தபட்ச பொதுதிட்டத்தில் ஒப்புக் கொண்ட ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஒரு நகல் மசோதாவைத் தயாரித்தது. ''உண்மையில் அந்த நகல் மசோதா பழங்குடியின மக்களைச் சட்டப்பூர்வமாக வெளியேற்றுவதற்கான தாக இருந்தது. அப்படி ஒரு சட்ட மசோதாவை கொண்டு வராமல் இருந்திருக்கலாம் என்று இடதுசாரிகள் எதிர்ப்பு தெரிவித்த பின்னர், நாடாளுமன்ற கூட்டுக்கமிட்டி அமைக்கப்பட்டது. அது பழங்குடி மக்களின் நலன்களுக்கான எல்லாக் கூறுகளையும் கொண்டிருந்த தாக''க் கூறும் பிருந்தா காரத், நாடாளுமன்றக் கூட்டுக் கமிட்டி அறிக்கையைப் பரிசீலிப்பதற்கான அமைச்சர்கள் குழுவை அரசாங்கம் அமைத்ததாகக் கூறுகிறார். அந்தப் பரிசீலனையில் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் பரிந்துரைகளை ஏற்பதற்கில்லை என்று நிராகரித்து விட்டதாகச் சொன்ன அரசாங்கம், வேறொரு மசோதா தயாரித்தளிப்பதாகக் கூறியது; அப்படிச் செய்வது இன்னும் மோசமாகிவிடும் என்று இடதுசாரிகள் கருதியதால் அமைச்சர்கள் குழுவின் முடிவுகள் அடிப்படையிலேயே ''வன உரிமைகள் அங்கீகாரம்'' என்ற பழங்குடி மக்கள் மற்றும் பாரம்பரிய வனவாசிகளுக்குச் சாதகமான சட்டம் நிறைவேறியது, என்கிறார்.

இருந்தபோதும், ''நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் பரிந்துரைகள் முற்றாக நிராகரிக்கப்படவில்லை; இறுதியில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தையும், ஐ.மு. கூட்டணி அரசு முதலில் முன்வைத்த வரைவு மசோதாவையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே, மாற்றங்கள் புரியும்; இந்த வகையில் இது ஒரு முக்கிய முன்னெடுப்புத்தான்'' என்று பூரித்துப் போகிறார் பிருந்தா காரத். ஆனால், ''பாரம்பரிய வனவாசிகள்'' யார் என்று வரையறுப்பதற்கான இவர்களின் பரிந்துரையை நிராகரித்ததோடு, நாடாளுமன்றத்தில் அவசர கோலத்தில் மசோதா சட்டமாக்கப்பட்டதையும் அவரே ஒப்புக் கொள்கிறார்.

''நாடாளுமன்றக் கூட்டத் தொடர் டிசம்பர் 19-ந் தேதி, செவ்வாய்கிழமை நிறைவுற இருந்தது. ஆனால், டிசம்பர் 15-ந் தேதி மதியம்தான் நாடாளுமன்றம் முன்பு மசோதா கொண்டு வரப்பட்டது. விவாதம் துவங்குவதற்கு 15 நிமிடங்கள் முன்புதான் மசோதாவில் புகுத்தப்படும் முக்கிய மாற்றங்களை உள்ளடக்கிய அதிகாரபூர்வத் திருத்தங்கள் மக்களவை உறுப்பினர்களுக்குத் தரப்பட்டன. இது ஜனநாயக விரோதமானதென்று தெளிவாகத் தெரிந்தது; மாற்றங்களைப் படித்தறிவதற்கான போதிய கால அவகாசம் மக்களவை உறுப்பினர்களுக்குத் தரப்படவில்லை'' என்கிறார் போலி மார்க்சியக் கட்சியின் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவில் பங்கேற்ற பிருந்தா காரத்.

எல்லா ஓட்டுக் கட்சி ஆட்சியாளர்களும் இதே தந்திரத்தைத்தான் பின்பற்றுகிறார்கள் என்பது இந்த போலி மார்க்சிஸ்ட் தலைவி பிருந்தா காரத்துக்குத் தெரியாதா? உலக வர்த்தகக் கழக ஒப்பந்தம், அமெரிக்காவுடனான இராணுவ மற்றும் அணுசக்தி ஒப்பந்தங்கள் போன்ற நாட்டை அடகு வைக்கும் பலவும் நாடாளுமன்றத்தில் விவாதிக்காமலேயே கையொப்பமிட்டு முடிக்கப்பட்டன. இவற்றை எதிர்ப்பதாக போலி கம்யூனிஸ்டுகள் சவடாலடித்துவிட்டு, எல்லாம் முடிந்தபிறகு நாடாளுமன்றத்தில் பிரதமரின் விளக்கத்தை மட்டுமே கேட்டு விட்டு வாய்மூடிக் கொண்டதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உள்ளன.

இப்போது, நாடாளுமன்றக் கூட்டுக் குழு என்ற பெயரில் கூடி விருந்து தரப்பட்டதும் தங்கள் முயற்சியால் முற்போக்கான வனஉரிமைகள் அங்கீகாரச் சட்டம் வந்துவிட்டதாக பசப்புகிறார்கள். இதே பிருந்தா காரத் கூறுகிறார், ''சுற்றுச் சூழல் மற்றும் காடுகள் அமைச்சகத்தால் உச்சநீதி மன்றத்துக்கு அளிக்கப்பட்ட புள்ளிவிவரப்படி, கடந்த மூன்றாண்டுகளில் அடர்ந்த காடுகள் நிரம்பிய 5.75 இலட்சம் ஹெக்டேர் காட்டு நிலங்கள் ஆலைத்திட்டங்கள் மற்றும் தாதுப் பொருள் சுரங்கங்கள் போன்ற காடுகள் அல்லாத தேவைகளுக்காக தாரை வார்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் கம்பெனிகளுடன் நூற்றுக்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.''

இவ்வாறு பழங்குடியின மக்களின் வாழ்விடங்களையும் வளங்களையும் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு தரகு முதலாளிகளுக்குத் தாரை வார்க்கும் அரசாங்கம், பழங்குடியின மக்கள் மற்றும் பாரம்பரிய வனவாசிகள் நலன்களுக்காக வன உரிமைகள் அங்கீகாரச் சட்டம் போட்டிருப்பதாகக் கூறுவது எவ்வளவு பெரிய மோசடி!

- தொடரும்


படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

பருத்தியை ஏற்றிச் செல்ல எங்கள் வட்டாரத்தில் லாரிகள் வந்து குவியும். இன்று எல்லாமே தலைகீழாகி விட்டது. பருத்திக்காக லாரியோ டிராக்டரோ இங்கு வருவதில்லை. பிழைப்பைத் தேடி நாங்கள் இராஜஸ்தான் மாநிலத்திற்கு கூலி வேலை தேடி ஓடிக் கொண்டிருக்கிறோம்'' என்று பருத்தி விவசாயிகளின் அவலத்தை விளக்குகிறார் கல்பஞ்சரா கிராமத்தைச் சேர்ந்த அமர்சிங்.

தாராளமயம் தோற்றுவித்த பயங்கரம் பஞ்சாப் மாநிலமெங்கும் தலைவிரித்தாடும் சூழலில், இப்போது விவசாயிகளின் தலையில் இடியென இறங்கியுள்ளன, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள். பஞ்சாபில் தற்போது 12 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டு, விளைநிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு இறுதிக்குள் 20-க்கும் மேற்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவ முயற்சித்து வருவதாக அம்மாநில முதல்வர் அம்ரிந்தர் சிங் அறிவித்துள்ளார். ''எதிர்க்கட்சிகள் விவசாயிகளைத் தூண்டிவிட்டு கலகம் செய்ய முயற்சிக்கின்றனர். நான் முதல்வராக உள்ளவரை கறாராகச் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாத்து மாநிலத்தைத் தொழில்மயமாக்கியே தீருவேன்'' என்று திமிராகக் கொக்கரிக்கிறார் அவர். அடுத்தடுத்து சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான அறிவிப்புகள் வெளியாகியுள்ள நிலையில், சண்டிகரிலிருந்து அமிர்தசரஸ் வரையிலான வீதியெங்கும் விவசாயிகள் திரண்டு அடுத்து என்ன செய்வது என்று கவலையோடு விவாதிக்கின்றனர்.

சண்டிகரைச் சுற்றியுள்ள கிராமங்களின் வீடுகளில் இப்போது புதிய எண்கள் குறியிடப்பட்டுள்ளன. ''1.6, 1.4, 0.7'' என்றெல்லாம் குறியிடப்பட்டுள்ள இந்த எண்கள், புதிய கதவிலக்க எண்கள் அல்ல. சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக அரசாங்கம் கையகப்படுத்தும் விவசாய நிலங்களுக்கான நிவாரணத் தொகையை (இலட்ச ரூபாய் கணக்கில்) அந்தந்த விவசாயிகளின் வீட்டுக் கதவுகளில் உள்ளாட்சி நிர்வாகம் எழுதி வைத்துள்ளது. லாட்டரி சீட்டில் பரிசு கிடைத்தவனைப் பார்த்து மற்றவர்களும் போட்டி போட்டுக் கொண்டு லாட்டரி சீட்டை வாங்கி ஏமாறுவதைப் போல,



கந்துவட்டி கடன் சுமையால் நிலத்தைப் பறிகொடுத்துவிட்டுக் கொத்தடிமையாக உழலும் பாபா சிங்கின் குடும்பம்.

அரசாங்கம் செய்யும் இந்த மோசடியைப் புரிந்து கொள்ளாமல், பல விவசாயிகள் தாங்களும் நிலத்தை விற்கக் கிளம்புகின்றனர். அரசாங்கமோ, சுய விருப்பத்துடன் விவசாயிகள் தங்கள் நிலங்களை விற்பதாக மாய்மாலம் செய்கிறது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக விவசாய நிலங்களை ஆக்கிரமிக்கக் கூடாது என்கிறது மத்திய வர்த்தக அமைச்சகம். பஞ்சாபிலோ முப்போகம் விளையும் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இது சட்டவிரோதமாயிற்றே என்று கேட்டால், ''நாங்கள் நிலங்களை ஆக்கிரமிக்கவில்லை; விவசாயிகள் சுயவிருப்பத்துடன் நிலங்களை விற்கிறார்கள்; நாங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவி வருகிறோம்'' என்கிறார் பஞ்சாப் முதல்வர்.

தரிசு நிலங்களில்தான் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நிறுவப்படும் என்ற வாக்குறுதி காற்றில் பறக்கவிடப்பட்டு, ஒரு போகம் சாகுபடியாகும் நிலங்களிலும் நிறுவலாம் என்று மாறி, பின்னர் இரு போகம் சாகுபடியாகும் நிலங்களில் 10% வரை கையகப்படுத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டு, இப்போது முப்போகம் விளையும் பூமியையும் கொல்லைப்புற வழியாக ஆக்கிரமிக்க எல்லா ஏற்பாடுகளையும் கைக்கூலி ஆட்சியாளர்கள் செய்து வருகின்றனர். இதற்காகவே காலனிய ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட, 1894-ஆம் ஆண்டின் நிலக் கையகப்படுத்தும் சட்டம் புதிய பெயரில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இச்சட்டப்படி, ''பொதுப் பயன்பாட்டுக்கு'' என்ற பெயரில் நில உரிமையாளரின் ஒப்புதலின்றி எந்த நிலத்தையும் மாநில அரசு கையகப்படுத்தலாம். இதை எதிர்த்து வழக்கு தொடரக்கூட முடியாது. மே.வங்க போலி கம்யூனிஸ்டு ஆட்சியிலிருந்து காங்கிரசு, பா.ஜ.க. ஆட்சி வரை எல்லா மாநில அரசுகளும் இச்சட்டத்தைக் கையிலேந்தி விவசாயிகளை நாடோடிகளாக்கி விட்டு விளைநிலங்களை ஆக்கிரமித்து வருகின்றன.

இவையெல்லாம் தரகுப் பெருமுதலாளிகள் - பன்னாட்டு முதலாளிகளின் பகற்கொள்ளைக்கான ஏற்பாடுகள் என்பது மட்டுமல்ல; ஏழை நாடுகளின் பெயரளவிலான சுயசார்பையும் ஒழித்து, உணவுச் சந்தையைக் கைப்பற்றிக் கொண்டு ஆதிக்கம் செய்யத் துடிக்கும் ஏகாதிபத்திய மறுகாலனியாதிக்கச் சதியின் ஓர் அங்கம்தான் இவை. ''உணவு உற்பத்தியைக் குறை; மானியங்களை நிறுத்து; ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து 'மலிவான' விலையில் உணவு தானியங்களை இறக்குமதி செய்!'' என்று உத்தரவிடுகிறது, உலக வர்த்தகக் கழகம். இதனடிப்படையில் மானியக் குறைப்பு, ரேசன் உணவுப் பொருட்களின் விலையேற்றம், அரசு கொள்முதல் நிறுத்தம், ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து உணவு தானிய இறக்குமதி - என அடுத்தடுத்து தாக்குதல்களை ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்து விட்டனர். இப்போது அதைத் தீவிரப்படுத்தும் வகையில், விளைநிலங்களை ஆக்கிரமித்து சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவி வருகின்றனர்.

ஒரிசாவின் கலிங்கா நகர். மே.வங்கத்தின் சிங்கூர் - நந்திகிராமம், மகாராஷ்டிராவின் ராய்காட், உ.பி.யின் தாத்ரி, தமிழகத்தின் ஓசூர், பஞ்சாபின் பர்னாலா - எனத் தொடரும் விவசாயிகளின் போராட்டங்கள் வெறும் நிலத்திற்காகவும் கூடுதல் நிவாரணத்திற்காகவும் நடக்கும் போராட்டங்கள் அல்ல; இவை மறுகாலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தின் ஓர் அங்கம்.

இவற்றை ஒருங்கிணைத்து மறுகாலனிய ஆக்கிரமிப்புக்கு எதிரான விடுதலைப் போரை நடத்த வேண்டியுள்ளது. நாடும் மக்களும் இன்னுமொரு பகத்சிங்கையும், கட்டபொம்மனையும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

● குமார்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regn. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

## புதிய காப்புரிமைச் சட்டம்:


# நோயாளிகளின் கழுத்துக்குச் சுருக்கு!

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த நோவார்டிஸ் என்ற பன்னாட்டு மருந்து நிறுவனம், தான் தயாரித்து விற்பனை செய்துவரும் "க்ளீவெக்" என்ற இரத்தப் புற்று நோய்க்கான மருந்திற்கு, இந்தியாவில், தனக்குக் காப்புரிமை வழங்க வேண்டும் எனக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. இந்த வழக்கில் நோவார்டிஸுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டால், மாதம் 8,000 ரூபாய் செலவில் கிடைக்கும் (இரத்தப் புற்று நோய்க்கான) உள்நாட்டு மருந்துகள் தடை செய்யப்படும். இதற்குப் பதிலாக, இரத்தப் புற்று நோயாளிகள், நோவார்டிஸின் க்ளீவெக் மருந்தை வாங்க மாதமொன்றுக்கு ரூ. 1,20,000/- செலவு செய்ய வேண்டிய அதிபயங்கரமான எதிர்காலத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

இந்த வழக்கு ஒரேயொரு மருந்து மட்டும் சம்மந்தப்பட்ட பிரச்சினையல்ல; இந்த வழக்கில் நோவார்டிஸுக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கிடைத்தால், பிறகு, உயிர் காக்கும் மருந்துகளைத் தயாரிக்கும் பல்வேறு பன்னாட்டு மருந்து நிறுவனங்களும் தங்களின் தயாரிப்புகளுக்கும் காப்புரிமை கோருவார்கள். எய்ட்ஸ், சர்க்கரை நோய், ஆஸ்துமா, இருதய நோய்கள் தாக்கியுள்ள பல தரப்பட்ட நோயாளிகள், மாதமொன்றுக்கு பத்தாயிரக்கணக்கில் செலவு செய்து மருந்து வாங்க வேண்டும்; அது முடியாதென்றால், நோயினால் அவதிப்பட்டுச் சாகவேண்டும் என்ற நிலைமையும் உருவாகி விடும்.

*நோவார்டிஸ் போட்டுள்ள காப்புரிமை வழக்கைத் தள்ளுபடி செய்யக் கோரி சென்னையிலும் (மேல்படம்), தில்லியிலும் நடந்த ஆர்ப்பாட்டங்கள்.*




இந்திய அரசு, உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைக்கு அடிபணிந்து, வடிவுரிமை சட்டத்தில் செய்துள்ள மாற்றங்கள்தான், உயிர் காக்கும் மருந்தின் விலைகளை இந்நிறுவனங்கள் விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்த்திக் கொள்வதற்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது. வடிவுரிமைச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு எதிராக இந்திய மக்கள் போராடியபொழுது, அப்போராட்டங்களைத் தணிப்பதற்காக, "ஏற்கெனவே சந்தையில் புழங்கும் மருந்துகளில், சிறிய மாற்றங்களைச் செய்வதன் மூலம் வடிவுரிமை கோர முடியாது" என்ற பிரிவை புதிய வடிவுரிமைச் சட்டத்தில் இந்திய அரசு சேர்த்தது. இந்தப் பிரிவு, உலகமயம் தந்துள்ள வர்த்தகச் சுதந்திரத்திற்கு எதிரானது என்றும், அதனால் இந்தப் பிரிவை அடியோடு நீக்குவதன் மூலம் தனக்குக் காப்புரிமை வழங்க வேண்டும் என்றும் கோருகிறது, நோவார்டிஸ். ஏனென்றால், அந்நிறுவனம் காப்புரிமை கோரும் க்ளீவெக் மருந்து, "புதிய மொந்தை பழைய கள்ளு" போன்றது தான்.

இந்திய மக்கள் போராடிப் பெற்ற இந்த அற்பமான சலுகை நீதிமன்றத்தால் நீக்கப்பட்டால், இந்திய நோயாளிகள் மட்டுமல்ல, விலை மலிவான இந்திய மருந்துகளை இறக்குமதி செய்து வரும் பல்வேறு ஏழை நாடுகளும் பாதிக்கப்படும். அதனால்தான், 150 ஏழை நாடுகளைச் சேர்ந்த நோயாளிகள் நோவார்டிஸின் வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் எனக் கோரி தத்தமது நாடுகளில் கையெழுத்து இயக்கம் நடத்தி வருகிறார்கள். இந்தியாவில் நோவார்டிஸுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

ஏகாதிபத்திய நிறுவனங்களின் இலாப வெறிக்கும், மக்களின் வாழ்வுரிமைக்கும் இடையே நடக்கும் போராட்டமாகத்தான் இந்த வழக்கைப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் இந்திய நீதிமன்றங்கள் மக்களுக்குச் சாதகமாக நடந்து கொள்ளும் என நம்பிக் கொண்டு மௌனமாய் இருந்துவிட முடியாது. ஏனென்றால், தாராளமயத்தின் பின், பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சாதகமாகத்தான் பல்வேறு தீர்ப்புகளை இந்திய நீதிமன்றங்கள் சொல்லியுள்ளன. எனவே, நோய் நொடியற்ற ஆரோக்கியமான வாழ்க்கைக்கான மக்களின் போராட்டமே, நோவார்டிஸின் பேராசையை மட்டுமல்ல, புதிய வடிவுரிமைச் சட்டத்தையும் ஒழித்துக் கட்டும்!